பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

மார்ச் 2025



## நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே

## நக்கீரர் வழியில் பட்டுக்கோட்டை அ.த.பன்னீர்செல்வம் – நேர்காணல்



வடிவமைப்பு
சேவைகள்
DESIGN GLITZ
GRAPHIC DESIGN
எமது சேவைகள்
Logo Design
Banner Design
Designing Business Cards
Flyer Designs
Brochure Design
Certificate/Invitation Designs
மற்றும் தாங்கள் விருப்பத்திற்கேற்ப தட்டச்சு மற்றும்
வடிவமைப்பு வேலைகளை தமிழ், சிங்களம், ஆங்கிலம்
மொழிகளில் செய்து கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: 0753761731 / 0779998608

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – மார்ச் 2025

639


நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!


ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸூர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

வடிவமைப்பு உதவி :

ஆயிஷா சகீலா

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி


எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...


**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண் +91 9952529619 ( கட்செவி )
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com


புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

வாழ்க்கையென்பது போராட்டங்கள் நிறைந்தது என்பது நிதர்சனம். அத்தகைய போராட்டத்தை முறியடித்து வாழ்வதில் வெற்றிக்காண்பதில் தான் நமது முயற்சிகள் முன்னெடுப்பாக அமைய வேண்டும். முன்னெடுப்புச் செயல்களை விட்டுவிட்டு காலத்தை குறைசொல்லி வாழ்வதிலேயே நம்மில் பலர் முனைப்பாக இருக்கிறோம்.

ஒருவர் நமக்கு தேவையான உதவிகளை தகுந்த நேரத்தில் நமது வளர்ச்சிக்காக செய்திருக்கக்கூடும். அதே நபர் நமக்கு தொடர்ந்தும் அதே உதவியை செய்ய முடியாமலும் போகலாம் அதை எதிர்பார்த்துக் காத்திருத்தலும் கூடாது. அவ்வுதவிகள் நிரந்தரமென்று நினைத்து நாம் செயலிழந்துப் போவதும் தவறாகும். அவர்கள் நமக்கு உந்து சக்தியாக உதவினார்களென உணர்ந்து நமக்கான நல்வழியில் முற்சிக்க வேண்டும். நம்மால் தனித்து இயங்கமுடியும் என நம்பிக்கைக்கொள்ளல் வேண்டும்.

இஸ்லாமியர்கள் இம்மாதத்தை புனிதமாக நினைத்து 30 நாட்கள் உண்ணா நோன்பிருந்து, தானம், தர்மங்கள் செய்து ஏழைகளுக்கு உதவி இறை வணக்கத்துடன் துவா செய்கிறார்கள். அவர்களின் துவாக்களை ஏற்று இறைவன் அனைத்து சமுதாய மக்களுக்கும் நல்வழியைக் காட்டி துணை புரிவானாக.... ஆமீன்.

வழக்கம் போலவே இந்த மாத இதழும் பல சுவாரசியமான கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், நேர்காணல், சிறுவர் பகுதி போன்ற பல பகுதிகளைத் தாங்கி உங்களைச் சந்திக்க வந்துள்ளது. வாசிப்பின் மூலம் புதுப்புது எண்ணங்களை மனதில் விதைத்து வாழ்க்கையை ஒளிமயமாக்கிட வாழ்த்துகிறேன்.

நன்றி!

என்றென்றும் அன்புடன்

தமிழ்நெஞ்சம் அமின்

(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்

# திட்டமிடுதல்

ஒரு நகரத்திற்கு ஒரு சட்டமிருந்தது. அதன்படி யார் வேண்டுமென்றாலும் அந்த நகரத்திற்கு ராஜாவாக வரமுடியும். ஆனால், அந்தப் பதவி ஐந்தாண்டுகள் மட்டுமே! ஐந்தாண்டு முடிந்த அடுத்த நாளே மன்னனை ஆற்றின் கரைக்கு மறுபுறம் உள்ள காட்டில் விட்டு விடுவார்கள்.

அந்தக் காட்டில் மனிதர்கள் கிடையாது. வெறும் கொடிய விலங்குகள் மட்டுமே! மன்னன் காட்டிற்குள் நுழைந்தால் போதும்; வனவிலங்குகள் கொன்று தீர்த்துவிடும். இந்த சட்டத்தை யாராலும் மாற்ற இயலாது. இந்த நிபந்த னைகளுக்கு ஒப்புக் கொண்டவன் மட்டுமே அரியணையில் அமரப் பொருத்த மானவன். ஆக, மன்ன னாக முடிசூட்டிக் கொண்டவனின் தலையெழுத்து, ஐந்தாண் டுகளுக்குப் பின் கட்டாய மரணம்.

இந்தக் கடுமையான சட்டத்துக்கு பயந்தே யாரும் அந்தப் பதவிக்கு ஆசை படாமலிருந்ததால் அந்த அரியணை பெரும் பாலும் காலியாகவே இருந்தது. இருப்பினும் ஒரு சிலர் 'எப்படியிருந்தாலும் சாகத்தானே போகிறோம்; மன்னனாகவே மடி யலாமே!' என்று பதவி ஏற்பதுண்டு. அதிலும் பாதி மன்னர்கள் இடையிலேயே மாரடைப்பால் மரணமடைவதுமுண்டு.

இப்படி ஒரு மன்னனுக்கு ஐந்து ஆண்டு ஆட்சிக்காலம் முடிந்தது. அன்று ஆற்றின் கரையைக் கடந்து காட்டிற்குச் செல்ல வேண்டும். அவனை வழியனுப்ப நாடே திரண்டிருந்தது.

மன்னன் வந்தான், அவனுடைய சிறப் பான ஆடைகளையும் நகைகளையும் அணிந்து, முடிசூடி, தங்க வாளேந்தி வைரங்கள் மின்ன மக்கள் முன் நின்றான். மக்கள் வாயைப் பிளந்தனர் ''இன்னும் அரை மணிநேரத்தில் சாகப் போகிறான் ; அதற்கு இவ்வளவு அலங்காரமா!''

தான் செல்லவிருந்த படகைப் பார்த்து விட்டு சினத்துடன் கூறினான், "மன்னன் செல்லும் படகா இது! பெரிய படகைக் கொண்டு வாருங்கள்! நான் நின்றுகொண்டா செல்வது! சிம்மாசனத்தைக் கொண்டு வாருங்கள்!"

கட்டளைகள் பறந்தன; காரியங்கள் நடந்தன! சற்று நேரத்தில் அலங்கரிக்கப் பட்ட அழகான படகு ஆற்று நீரைத் கிழித்துக் கொண்டு மறுகரை நோக்கிப் பயணித்தது.

மக்கள் திகைத்து நிற்க, மன்னன் கைய சைக்க பயணம் தொடர்ந்தது.

மிகவும் அதிர்ச்சியடைந்தவன் பட கோட்டியே! காரணம், இதுவரை அவன் மறுகரைக்கு அழைத்துச் சென்ற எந்த மன்னனும் மகிழ்ச்சியாக சென்றதில்லை. அழுது புலம்பி, புரண்டு, வெம்பிச் செல் வார்கள். இவனோ, மகிழ்ச்சிக் களிப் பில் பொங்கி வழிகிறான்.

படகோட்டி பொறுத்துக்கொள்ள முடியாமல் கேட்டான் ''மன்னா! எங்கே செல்கிறீர்கள் தெரியுமா?''

'தெரியும் மறுகரைக்குச் செல்கிறேன்!"

''அங்கே சென்றவர்கள் திரும்ப இந்த நகரத்திற்கு வந்ததில்லை தெரியுமா?"

'தெரியும். நானும் திரும்ப இந்த நக ரத்திற்கு வரப் போவதில்லை!"

“பின்னே எப்படி உங்களால் இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது?”

‘‘அதுவா! நான் என்ன செய்தேன் தெரியுமா? ஆட்சிக்கு வந்த ஓராண்டு முடிவில் ஆயிரம் வேட்டைக்காரர்களைக் காட்டிற்கு அனுப்பினேன்; அவர்கள் கொடிய விலங்குகளை வேட்டையாடிக் கொன்று விட்டார்கள்!

இரண்டாமாண்டு முடிவில் ஆயிரம் விவசாயிகள் சென்றார்கள்; காட்டைத் திருத்தி உழுதார்கள்; இன்று ஏராளமான தானியங்கள் காய்கறிகள்.

மூன்றாமாண்டு முடிவில் ஆயிரம் கட்டடக்கலை வல்லுநர்கள், தொழிலாளர் கள் சென்றனர். இன்று வீடு, வாசல், அரண்மனை, அந்தப்புரம், சாலைகள் எல்லாம் தயார்!

நான்காம் ஆண்டு முடிவில் ஆயிரம் அரசு அதிகாரிகள் சென்றனர். நிர்வாகம் சீரடைந்தது. இந்த 4000 பேரும் தங்கள் மனைவி, குழந்தைகளுடன் சென்று அங்கே வாழ்கின்றனர்.

இப்போது நான் காட்டிற்குப் போகவில்லை; என்னுடைய நாட்டிற்குப் போகின்றேன்! சாகப் போகவில்லையப்பா, வாழப் போகின்றேன்! அதுவும் மன்னனாக ஆளப் போகிறேன்! உனக்கு ஒருவேளை அரண்மனைப் படகோட்டி வேலை வேண்டுமென்றால், இந்தப் படகோடு இப்படியே வேலைக்கு சேர்ந்து விடு!” என்றான் மன்னன்.

ஒரே ஒரு கேள்வியை மட்டும் எடுத்துக் கொள்ளலாம்.

மன்னனின் வெற்றிக்குக் காரணங்கள் யாவை?



பல காரணங்கள் இருந்தாலும் குறிப் பாக இரண்டினைக் கூறலாம்.

ஒன்று: ஐந்து ஆண்டுகளுக்குப் பின் உயிர் வாழவேண்டும்; அதுவும் மன்ன னாகவே வாழவேண்டும் என்று முடிவு எடுத்தது.

இரண்டு: அந்த முடிவினை அடை வதற்காக திட்டமிட்டு உழைத்தது!

அந்த மன்னனுடைய வெற்றிக்கு மட்டுமல்ல; நாம் அனைவருமே வெற்றி பெறவேண்டுமென்றால் நமக்குத்தேவை ஒரு இலக்கை நிர்ணயித்தலும் அதற்காக திட்டமிடுதலும், திட்டமிட்ட பின் வெற்றி பெறும்வரை கடுமையாகவும் புத்திசாலித்தனமாக உழைப்பதுமே. இப்போது நீங்கள் என்ன செய்கிறீர்களோ அதுதான் உங்கள் எதிர்காலம்!

இப்போது ஒருவன் கடுமையாக உழைக்கிறானே அதுதான் அவனுடைய வருமானமாகப் பின்னால் வரும்!

இப்போது ஆழ்ந்து படிக்கும் மாணவ னுக்கு அதுதான் தேர்ச்சி என்று ஒரு எதிர் காலத்தைக் கொண்டுவரும்.

அப்படிப் பார்த்தால் எல்லாமே இப்போது நாம் செய்வது செய்து கொண் டிருப்பதுதான் நம் நாளைய வாழ்வைத் தீர்மானிக்கிறது. அவை ஒவ்வொன்றையும் திட்டமிட்டு சிறப்பாகச் செய்தால் நம் வாழ்க்கை எவ்வளவு மேன்மையாக அமையும்!

எந்த ஒரு செயல் செய்வதற்கு முன் திட்டமிடுங்கள், அந்த திட்டத்தை செயல் படுத்துவதற்கு முன் பலமுறை யோசியுங்கள். நன்றாக இருக்கும் என்று நாம் உணர்ந்த பின் அதை செயல்முறை படுத்துங்கள் பின் வெற்றி நமக்கே !

**ரெ. முரளி,**

கட்டிடப் பொறியாளர்
ஆசிரியர்- இலக்கியச் சாரல்

# பட்ட மரமும் காதலும்



பட்ட மரத்தில் பூத்தது
பனி மலர் ஒன்று
பட்டாங்கே பரமனின் இருப்பு

வெட்டுப்பட்ட மரம் அது
காதல் துளிர்த்த இணை
அமர அரியாசனம் ஆகியது;

மரத்தை வெட்டி சாய்த்தாயிற்று
அடி மரத்தில் செதுக்கல்
நான் உன்னை காதலிக்கிறேன்

மழையில் சரிந்த மரம்
பேசியது நானின்றி அவர்கள்
எங்கே சந்திப்பார்கள் நாளை

கையெட்டும் உயரத்தில் பட்டமர
பொந்து உயிர்ப்புடன் இருக்கிறது
காதல் கடிதங்களால் நிரம்ப

**சசிகலா விஸ்வநாதன்**

## சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்

நீ பலகோடி சொத்துகளுக்கு
அதிபதியாக இருக்கலாம்!

வானில் செல்லும் விமானங்களுக்குக் கூட
சொந்தக்காரராக இருக்கலாம்!

அதற்காக எல்லோரும்
உனக்குக் கீழ்தானென்று
உதாசீனப்படுத்தாதே...

உயர்வதற்கு பயன்பட்ட
ஆறாவது அறிவு
உதவுவதற்கு தடைபோடுகிறதா?

பணக்கட்டின் மேல்
கால் விரித்து
கனவு காண்பவனுக்கும்
வெறுந்தரையில்
கால் சுருக்கி
படுத்திருப்பவனுக்கும்
வயிறென்பது ஒன்றுதான்
பசியென்பது ஒன்றுதான்
அதைப் போக்குவது சோறொன்றுதான்!

எப்போதும் நினைவில் கொள்...
இவ்வுலகம்
எவ்வளவு பெரிய
வளர்ச்சியை அடைந்தாலும்
ஏர்த்தொழிலின்
பின்னால்தான்
சுழல முடியுமென்பதை!



**பாக்யபாரதி**
தருமபுரி

## பெயர்

அதன் பெயரே
பெருங்காயம்
இன்னும்
நைக்கிறார்கள்
பெருங்காயத்தை.

## காதலுக்கு கண்ணில்லை

பழுதாகிப் போன
தெரு விளக்கு
ஆண்கள் கடந்து
போகையில் கூட
கண் சிமிட்டுகிறது.

## தினந்தோறும்

தினந்தோறும் சிறை
தினந்தோறும் விடுதலை
அலுவலகப் பணி

## பார்வை

நிர்வாணம் பற்றிய
எனது கவிதைக்கு
அவள்
தன் பார்வை கொண்டு
ஆடை அணிவித்தாள்.

## வியப்பு

மனிதர்களைப் பார்த்து
எறும்புக் கூட்டம்
வியந்து நிற்கையில்
அங்கே
யானைக் கூட்டம் வேறு
கடந்து போகிறது.



**கவிஞர் எம்.சோலை**
அம்பத்தூர்.

# மனம்

.

விளைந்திடும் ஒவ்வொன் றுக்கும்
    விதியென எண்ணி யெண்ணி
முளைத்திடும் ஒவ்வொன் றுக்கும்
    முரண்களே என்றே எண்ணிக்
களையென  விளைந்த நெஞ்சக்
    கழிவினை அகற்றி டாமல்
இளைத்துமே வாழ்தல் மட்டும்
    இயல்பென எண்ணல் வாழ்வா

.

கடக்கிற உறுதி அன்றி
    கலங்கிடா  விழிகள் அன்றி
நடக்கிற கால்கள் அன்றி
    நம்பிடா  உறவும் அன்றி
முடங்கியே கிடக்கும் இந்த
    முறையறு செயலால் என்றும்
தடங்களைக் காணல் ஆகா
    தனித்திறன் படைத்தல் ஆகா

.

எதிர்த்திடும் எண்ணம் வேண்டும்
    இளமையில் உழைத்தல் வேண்டும்
புதிரெனும்  வாழ்வில் நாளும்
    புதுவிடைத் தேடல் வேண்டும்
உதிர்கிற தோல்விப் பூவை
    உடன்மனம் வளர்த்தல் அல்லேல்
விதியினை எண்ணி நாளும்
    வீழ்வதே  வாழ்வாய் மாறும்

.

**தமிழ்நெஞ்சம் அமின்**

# விமர்சனங்கள்

விமர்சனம் என்பது ஆரோக்கியமானதா? முகம் சுழிக்க வைக்கக் கூடியதா? ஆரோக்கியமான விமர்சனங்களைத் தர வேண்டுமானால் மனதில் தெளிவும் அது பற்றிய அறிவும் இருக்க வேண்டும். பேச் சுரிமை இருக்கிறது என்பதற்காக எதை யும் பேசிவிட்டு விமர்சனம் என்று பொய்யுரைப்பது நல்லதா? விமர்சனம் என்பது ஒரு மதிப்பீடு என்றாலும், அது தரமான நிலையில் இருக்க வேண்டும். மோசமான வார்த்தைகளைக் கொண்டு விமர்சனங்களை வைக்கும்போது ஒரு இணக் கமில்லாத நிலையே ஏற்படுகிறது. ஒருவரின் கருத்தை, செய்கையை, நிர்வாகத்தை, அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் கட்டாயம் யாருக்கும் இல்லை ஒவ்வொருவரின் பார்வையும் மன ஓட்டமும் வேறுவேறுதான். சிந்தனைகள் மாறலாம். தவறுகள் கூட இருக்கலாம். அதைச் சுட்டிக் காட்டலாம். தவறில்லை.

வார்த்தைகளுக்கும் வரம்பு இருப்பதால் தான் குற்றத்திற்குரிய சொற்களை Unparliamentary words வகுத்து வைத்து இருக்கிறார்கள். பொதுவான தளத்திலோ சமூக ஊடகங்களிலோ இன்றைய நிலையில் விமர்சனங்கள் அவ்வளவு ஆரோக்கியமானதாகவே இல்லை.



எதிரிக்கு எதிரி நண்பன் என்பது மாதிரியும், எதிரியாகவே நினைத்துக் கொண்டு எதையும் பார்ப்பதாலும், எல்லாவற்றையும் தரக்குறைவாகவே விமர்சனம் செய்வது வழக்கமாகி விட்டது. மண்குடம் பொன் குடம், எனக்கு வந்தால் ரத்தம் உனக்கு வந்தால் அது வேறா என்ற அளவுக்கு எல்லாமும் இருக்கிறது.

எந்தவொரு கருத்துக்கும், எதிர்கருத்து கொடுத்தால்தான் விமர்சனம் என்ற நிலைப்பாடு வந்து விட்டது. விமர்சனம் என்பது கருத்து அல்லது மதிப்பீடு மட்டுமே. மதிப்பீடு என்று சொல்வதுதான் சரியாக இருக்கும். ஆனால் இவை எதிர் மறையாகவே இருக்க வேண்டும் என்ற கட்டாயமெல்லாம் இல்லை. இன்று யாரையோ திருப்திப்படுத்தவும், தன்னை அடையாளம் காட்டிக் கொள்ளவுமே எதையாவது விமர்சனம் என்ற பெயரில் விதைக்கிறார்கள். தனிநபரை விமர்சிக்கும் போது இல்லாத ஆத்திரமும் கோபமும், ஒரு தலைவனின் செயல்களைக் கண்டு எதிர்சாராருக்கு வருகிறது. இதுவும் ஏற்புடையதல்ல.

விமர்சனம் செய்பவன் யாரும் எந்த தீர்வையும் முன்வைப்பதில்லை. உனக்கு இருக்கும் மனநிலையைப் போல்தான் ஒவ்வொருவனுக்கும் இருக்கும் என்று புரிவதும் இல்லை. மனக்காயம் மாறாதது. இன்று விமர்சிப்பவன் நாளை விமர்சனத்துக்கு ஆளாகின்றான்.

நல்லதாகவே இருந்தாலும், கொள்கையாகட்டும், திட்டமாகட்டும், படைப்புகளாகட்டும், வெற்றியோ, தோல்வியோ எதற்கும் விமர்சனம் வருகின்றது. இது ஆரோக்கியமான போக்கு இல்லை. குற்றங் குறையிருந்தால் அதை எடுத்து ரைத்து தீர்வு சொல்ல வேண்டும். தீர்வு தெரியவில்லையென்றால், விமர்சிக்கக் கூடாது.

விமர்சனம் என்பது யாரையும், எதையும் விட்டு வைப்பதில்லை. சமயங்களில் தரமில்லாத விமர்சனங்கள் நிறையவே வருகிறது. யாரை விமர்சிக்கிறோம் என்றெல்லாம் பார்ப்பதில்லை. அவர் செய்த நல்ல திட்டங்களை மனம் வைப்பதில்லை. அவர் செய்த உதவிகளை நினைப்பதில்லை. இன்று அவர் எங்கிருக்கிறார்? அதையே அளவு கோலாக்கி விமர்சனங்களை வைக்கிறார்கள். நாளையே அவர் தன்னிடத்துக்கு வந்து விட்டால் அப்படியே மாற்றிக் கொள்கிறார்கள். சமயங்களை, சமயக் கோட்பாடுகளை, இறையை, இறை வழிபாட்டைக் கூட விமர்சனத்துக்குள் கொண்டு வருவது விபத்தைப் போல என உணர வேண்டும்.

நுனிப்புல்மேய்ந்தகதையாய்விமர்சனம் இருக்கக்கூடாது. எதை விமர்சிக்க விரும்புகிறோமோ, அதைப் பற்றிய முழு தெளிவும், புரிதலும் இருந்தால் உன் விமர்சனத்துக்கு பலன் உண்டு. நோக்கம் எதிர்ப்பதாக. மட்டுமே இருக்கக்கூடாது. நல்லதோர் ஆக்கத்திற்கு உந்துதலாய் விமர்சனம் இருக்க வேண்டும். அதே மாதிரி விமர்சனம் செய்வோரைக் கண்டு முகத்தைத் திருப்பிக் கொள்ளக்கூடாது. தவறு சுட்டிக் காட்டப்பட்டால் ஏற்றுக் கொள்ள வேண்டும். திருத்திக் கொள்ள வேண்டும். அதை விடுத்து விமர்சித்தவர் மீது வீண் கோபம் கொள்ளக் கூடாது.

வார்த்தைகளில் கண்ணியம் இருக்க வேண்டும். வழக்கு மொழியில் விமர்சனம் தவிர்க்க வேண்டும். முன்பெல்லாம் விமர்சனத்தைக் கேட்டு வாங்குவார்கள். இவர் விமர்சிக்க மாட்டாரா என்று ஏங்கிய காலம் உண்டு. காரணம் அப்போதெல்லாம் விமர்சனம் செய்பவன் முழுவதும் அறிந்தவனாகவும், புரிந்தவனாகவும் அவனது வார்த்தைக்கு மரியாதை கொடுக்குமளவுக்கு அவனது விமர்சனம் பொதுவானவையாகவும் இருந்தது.

புராணத்தில் நம்பிக்கையிருந்தாலும் இல்லையென்றாலும் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். விசுவாமித்திரரும், வசிட்டரும் பெரிய ஆளுமையாக இருந் தாலும் பனிப்போர் போன்ற ஒன்று இவர்க ளுக்குள் உண்டு.

அப்படிப்பட்ட சமயத்தில் விசுவாமித் தரரின் ஒரு செயல் கண்டு வசிட்டர் பெருமகிழ்வு கொண்டு பிரம்மரிசி என்று பட்டம் கொடுப்பார். மற்றவர்களும் வசிட்டர் வாயால் பிரம்மரிசி பட்டம் பெற்றதைக் கொண்டாடினார்கள். அந்த அளவுக்கு இருபுறமும் தேர்ந்து விளங் கினார்கள்.

விமர்சனத்தின் நோக்கம் ஒன்றை தெளிவுபடுத்துவதாகவே இருக்க வேண் டும். அதுதான் ஆக்கியோனுக்கும் அவசி யமானதாகும். குறையில்லாதவர் யாரு மில்லை. குறையை கண்ணருகில் வைத்துப் பார்க்காமல் தள்ளி வைத்துப் பார்த் தால் நிறைகளும் தெரியும். குறைகள் களைந்து நிறையான ஒன்றை கொண்டுவர விமர்சனம் அவசியம் தான்.

இப்போதிருக்கும் சமூக ஊடகங்கள் அவ்வளவாக இல்லாத காலத்தில், திரையு லகு சம்பந்தமாக விகடன் பத்திரி கையின் விமர்சனத்திற்காக காத்திருந்து, பின் படம் பார்த்தவர்கள் உண்டு. அந்தளவுக்கு பொது வான நிறைவான உண்மையான விமர்சனமாக இருந்து வந்ததை வயதில் மூத்தவர்கள் அறிவார்கள். சமயங்களைத் தெரிந்து கொள்ளாமல், மத உணர்வு களைப் புரிந்து கொள்ளாமல், எந்த விமர்சனமும் செய்யக் கூடாது. 'வழிபாடு என்பது நம்பிக்கை சார்ந்த ஒன்று, மற்ற வர்களின் நம்பிக்கையை விமர்சிக்கக் கூடாது'. அவரவர்க்கு அவரவர் பாதை முக்கியமானது உணர வேண்டும்.

இன்று எதிர்பார்ப்புகள் நிறையவே. எதிர்பார்ப்புகள் பொய்க்கும்போது விமர்ச னங்கள் எழுகின்றன. ஆனால் மனம் காழ்ப்புணர்ச்சியில் நின்று விடுவதால் விமர் சனங்கள் தரமாக இருப்பதில்லை. ஏன் நாம் எதிர்பார்த்தது நடக்கவில்லை? எங்கே தவறு நடந்தது?.இதற்கான சுய பரிசோதனைக்கு யாரும் தயாராக இல்லை நெருப்பில்லாமல் புகையில்லை. ஒத்துக் கொள்ள மனம் வேண்டும். குறைகளைக் களைய சுய விமர் சனம் அவசியம் வேண்டும். சுய விமர்ச னத்தை தனிநபர்தான் செய்து கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாடு இல்லை. எதிர்பார்ப்பு நடக்காதபோது தனியாகவும் கூட்டாகவும் அமைப்பாகவும்

சுய (விமர்சனம்) பரிசோதனை செய் தால் தவறுகள் திருத்தப்பட வாய்ப்புண்டு.

குற்றம் சொல்வதும் மட்டம் தட்டு வதும் மனித நெறியல்ல. ஆரோக்கி யமான விமர்சனத்தை யாரும் எதிர்க்கப் போவதில்லை. இட்டுக்கட்டிய விமர்ச னத்திற்கு மட்டுமே கேள்விகள் வரும். நேர்மறை எண்ணங்களோடு மதிப்பீடு செய். உனது விமர்சனத்துக்கு மட்டுமல்ல, உனக்கும் தனி மரியாதை கிடைக்கும். எதுவும் நிரந்தரமில்லை.

இன்றைய நிலை நாளையே மாறலாம். நம்பிக்கை மட்டும் துணையானால் நல்லதே நடக்கும். பொறாமையோடு போட்டி போடக்கூடாது.

நீ செய்ததை விட நான் நன்றாக செய்வேன், என்ற ஆரோக்கியமான போட்டியிருந்தால் வாழ்க்கை வளமாகும். தவறான விமர்சனங்கள் மட்டுமே தலை குனிய வைக்கும். அது திருப்பியும் தாக்கும். புரிதலோடு விமர்சனம் செய்வோம். புதிய பாதை காட்டுவோம். விமர்சனத்தை வர வேற்போம்.

**இதயமலர்**
மேற்கு தாம்பரம் தமிழ்நாடு

# ஆசை



சைத்ராவுக்கு சின்ன வயசிலிருந்தே கண்ணாடி வளையல் என்றால் கொள்ளை பிரியம். கழுத்தில் சின்னதாய் ஒரு செயின் காதில் சின்னதாய் குருவிக்கூடு போல அழகாய் குலுங்கும் ஒரு சின்ன ஜிமிக்கி, இரு கையிலும் ஆறு வீதம் கண்ணாடி வளை யல்கள்.

அவளை பார்பதற்க்கே எல்லாருக்கும் ரொம்ப பிடிக்கும்.

மெத்த படித்து இருந்தாலும் வங்கியில் நல்ல வேலையில் பணிபுரிந்து கொண்டிருந்தாலும் அவளிடத்தில் திமிர் இருக்காது. எல்லோரிடத்திலும் சகஜமாக கலகலப்பாக பழகுவாள். சுடிதார் தான் பெரும்பாலும் உடுத்துவாள்.

குறிப்பாக மஞ்சள் மற்றும் பிங்க் கலர் சுடிதாரில் சத்தியமாக தேவதை போல் தான் இருப்பாள். அவள் உதடு லிப்ஸ் டிக் போடாமலே கோவை பழம் போல சிவந்து இருக்கும். எவனுக்கு கொடுத்து வைத்திருக்கிறதோ என்று உடன் பணி புரிபவர்கள் பொறாமைபடும் அளவுக்கு அவள் அழகு விளங்கியது.

அவளுக்கு அவன் தாய் மாமன் மகனை ரொம்ப பிடிக்கும் வீட்டிலுள்ளவர்களும் அதைதான் விரும்பினார்கள். குடும்பத்தாரின் சம்மதத்துடன் திருமணம் சிறப்பாக நடந்து முடிந்தது. திருமணத்தில் சைத்ரா பட்டு சேலையில் ரொம்ப -ரொம்ப அழகா தேவதைகளுக்கெல்லாம் மகாராணியாய் விளங்கினாள் என்று சொன்னால் மிகையாகாது ...

அன்று இரவு...

சைத்ராவுக்கும் - அவளது மாமன் மகன் சஞ்சய்க்கும் முதல் இரவு.

என்ன தான் அத்தை பெண்ணாக இருந்தாலும் திருமணத்திற்கு முன் அவ்வளவாக பேசியதில்லை. அவளை பார்க்கும் போதெல்லாம் ஒரு புன்னகை மட்டுமே சிந்திவிட்டு போவான்.

இன்றோ எனக்கு பிடித்த என் அத்தை மகள் சைத்ரா என் மனைவியாக என்ன ருகே ஆசையோடு அவளை வேகமாக அணைத்தேன். கண்ணாடி உடையும் சப்தம் கேட்டது.

ஆம் அது கண்ணாடி சப்தம் தான்.

அவள் வளையல்களிருந்து வெளிவந்த சப்தம் அது.. அந்த வளையல்கள் உடைந்த தருணத்தில் அவள் முகம் வாடியது...

மறுநாள்...

கொள்ளை புறத்தில் சைத்ரா துணி துவைத்து கொண்டிருந்தாள் அவளருகே சென்றேன். மௌனமாக இருந்தாள் அவள் கையில் ஒரு பெட்டியை வைத்தேன்.

அந்த பெட்டியில் இரு பார்சல் இருந்தது முதல் பார்சலை பிரித்தாள் அதனுள் அவள் உடைந்த கண்ணாடி வளையல்களை கொண்டு கலைடாஸ்கோப் உருவாக்கி இருந்தேன். அதை பார்த்து புன்னகைத்தாள். இரண்டாவது பார்சலை பிரித்தாள் அவளிடத்தில் எத்தனை உடைகள் உள்ளதோ அத்தனை உடைகளுக்கும் பொருத்தமான நிறத்தில் கண்ணாடி வளையல்கள் மூன்று செட் இருந்தது.

ஏன் மூன்று செட் என்று கேட்டாள்?

உடைந்தால் இன்னொன்று பயன் படும் என்றேன்.

ஒரு செட் உடையும் போது உன்னிடம் இரண்டு செட் இருக்கும் போதே உடைந்த நிறத்தில் இன்னொன்று வளையல்கள் செட் வாங்கிடுவேன் என்றான்.

இனிமேல் எப்போதும் உன்னிடம் இரண்டு செட் இருக்கிற மாதிரி செஞ்சிடுறேன் என்றான். வெட்கத்தால் சைத்ரா வின் முகம் சிவந்தது. ஓடி சென்று சஞ் சய்யை கட்டி பிடித்து கழுத்தோரம் பஜக் கென்று ஒரு முத்தம் தந்தாள் அப்போது அவள் கையிலிருந்த கண்ணாடி வளையல் உடைந்தது!

**- நௌஷாத் கான். லி**

# கொலுசே ... கொலுசே....



கவர்ச்சியா பிரியமா
விடை காணாது
முத்தமிட்டாயே
நினைவிருக்கிறதா?

ஊர்த் திருவிழாவில்
உன் வருகைக்காக
திண்ணையில் கிடப்பேனே
நினைவிருக்கிறதா?

கரும்புக்காட்டில் மடைதாண்டி
எனைக் காண வருகையில்
சோகை தீண்டிய இடங்களில்
நான் தீண்டுகையில்
சிலிர்ப்பாயே
நினைவிருக்கிறதா?

பொங்கலுக்கு புதுக்கொலுசு
வாங்கித் தந்ததை
வரப்புமேட்டிலேயே
போட்டுவிடச் சொல்லி
ஓசை காட்டினாயே
நினைவிருக்கிறதா?

ஓடிவரும் உன்
மூச்சுக் காற்றில் காத்தாடி
பறக்கவிட்டதும்
கோபத்தில் துடிப்பாயே
நினைவிருக்கிறதா?

காணாமல் போன
சில நிமிடங்களில்
சந்தை வளாகத்தையே
அழுகையில் நனைத்தாயே
நினைவிருக்கிறதா?

பிறந்தநாளுக்காக
வாழ்த்திட வாயெடுக்கையில்
ஒற்றைச் சொல்லை
ஒன்றாய் உச்சரித்தோமே
நினைவிருக்கிறதா?

எட்டிப் பார்க்காத ஆலயத்தை
உன் வருகைக்காக
ஏழு முறையாவது
வலம் வந்தேனே
நினைவிருக்கிறதா?

ஊர் மேடைகளில்
என் குரல் ஒலிக்கையில்
எட்டிப் பார்த்து
வாசலில் புன்னகைப்பாயே
நினைவிருக்கிறதா?

வேலை தேடுதலின்
ஒவ்வொரு முயற்சிக்கும்
கடவுளுக்கு கையூட்டுக் கொடுத்து
வேண்டுதல் வைப்பாயே
நினைவிருக்கிறதா?

வெள்ளி தோறும்
அம்மனாய் காட்சி தருவாயே
நினைவிருக்கிறதா?

எப்போதாவது நிகழும்
சிறுதொடுதலுக்காக
விழியில் கோபம்
இதழில் புன்னகை
அருள்வாயே
நினைவிருக்கிறதா?

என்னைக் காணாது
ஞாயிறுகளின் மதியம்
என் நண்பர்களைச் சபிப்பாயே
நினைவிருக்கிறதா?

ராஜகுமாரனாய் கனவுகளில்
எனைக் கண்டதாய்
மகிழ்ச்சியில் துள்ளுவாயே
நினைவிருக்கிறதா?

அடிபட்டுக் கிடந்த
ஆறுநாள்களும்
உண்ணாவிரதமிருந்து
உயிர் கொடுத்தாயே
நினைவிருக்கிறதா?

ஆண்டுகள்
இரட்டைக் குறிஞ்சியைப்
பூக்க வைத்து நகர்ந்திட
அவரவர் இணையோடு
ஆலயத்தில் சந்திக்கையில்
நினைவிருக்கிறதா என
பேசிக் கொண்டன நம் விழிகள்.

**சிவஞானம் கி**

# காதலில் வீரன்



மேகக் கூட்டங்கள் வானத்தை மொத்தமாக குத்தைக்கு எடுத்து கூரை போட்டியிருந்தது. கறுத்திருந்த மேகங்கள் எப்போது சிணுங்கலாம் என்று காத்திருந்தன. வேலைக்கும். அவசரமாகப் பறந்து கொண்டு எல்லோரும் விதவிதமான குடைளைத் தூக்கிக் கொண்டு காலில் சக்கரங்களுடன் நடந்தனர்.

ராஜ்குமாரை அழைத்து வந்து முன் ஹாலில் உட்கார வைத்த குமார சுவாமி ஒரு நிமிஷம் உட்காருங்க அய்யாவைச் கூப்பிடுகின்றேன் என்று சொல்லி அவசரமாக மாடிப்படி நோக்கி நடந்தான்.

ராஜ்குமார் தான் நடந்து வந்த புல்வெளிப் பாதையையும் காரேஜில் நிற்கும் பாமரேனியன் வெரைட்டி நாய்களையும் நோட்டம் விட்டான். முன் தோட்டத்தில் ஊஞ்சல் காற்றில் ஆடியது. கவிதா இவ்வளவு பெரிய வீட்டிலா வசிக்கிறாள் என்று நினைத்துக் கொண்டான். எழுந்து ஜன்னல் வழியே எங்கேயாவது கவிதா தென்படுகிறாளா என்று பார்த்தான். இல்லை என்றன கண்கள்.

பாக்கெட்டிலிருந்த இண்டர்வியூ கார்டை எடுத்துப் பார்த்தான். மத்தியானம் பன்னிரெண்டு மணிக்கு வரச் சொல்லியிருந்தார்கள். மேகக் கூட்டம் கொஞ்சமாக கரைந்து சுற்றியதைப் பார்த்து இன்றைக்கு இன்டர்வியூவிற்கு மழையில் நனைந்து கொண்டு தான் போக வேண்டும் என்று நினைத்துக் கொண்டவன் திரும்பவும் சோபாவில் வந்தமர்ந்து பீப்பாயில் கிடந்த சினிமா பத்திரிகையை எடுத்துப் புரட்டினான்.

'ஹலோ ராம்குமார் வாங்க வணக்கம் நான் தான் கவிதாவின் அப்பா ராமமூர்த்தி' என்றவாறு மாடிப்படிகளில் இறங்கியவர் அவனுக்கு கை கொடுத்த குலுக்கிவிட்டு எதிர் சாய்வு நாற்காலியில் அமர்ந்தார்.

என்ன விஷயமாகக் கூப்பிட்டனுப்பினீர்கள் சார்.

நேரடியாகவே பேசிப் பழக்க பட்டவன் நான் ராஜ்குமார், என் மகள் கவிதாவை எப்படியோ காதல் வலையிலே வீழ்த்திட்டிட்டீங்க இப்போது அவளை விட்டி விடுவீர்களா?

'சார் நான்..'

குமார் எங்கள் காதல் தெய்வீகக் காதல் யாராலும் எங்களைப் பிரிக்க முடியாது. அப்படித்தானே சொல்லப் போறீங்க.

'சார் நான் சொல்றதை கொஞ்சம் கேளுங்கள்'

குமார் நான் சொல்றதை மட்டும் நீங்கள் கேட்டால் போதும். இப்போது உங்களுக்கு பண நெருக்கடி அதிகம். ஏற்கனவே மெட்ராஸிற்கு வேலை தேடி வந்துவிட்டு, இன்னும் வேலை கிடைக்காமல் அலையறீங்க. எவ்வளவு வேணும் கேளுங்க.

'என்னைய்யா பெரிய பணக்காரன்னா காதலை, கத்திரிக்காய் மாதிரி விலைக்கு வாங்குற பொருள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா?

அய்யய்யோ தம்பி அதற்குள்ளே சூடாகிவிட்டீங்களே, குமாரா சுவாமி? அய்யாவிற்கு கவிதா கையாலே ஒரு ஆப்பிள் ஜூஸ் கொஞ்சம் ஐஸ் அதிகமாக கொண்டு வந்து கொடுக்கச் சொல். தம்பி ராம்குமார், இளரத்தம் உங்க உடம்பிலே ஓடுது. கொஞ்சம் துள்ளிப் பாயத்தான் செய்வீங்க. இதே மாதிரி மாட மாளி கையிலே வாழ்கிற என் மகள் கவிதாவிற்கு ஒரு நேரம் சோறுபோட உங்களுக்கு முடியுமா? இன்னும் உங்க வயிற்றையே நிரப்பக் காணோம்.

'கை, கால் திறமாக இருக்கிறது மிஸ்டர் ராமமூர்த்தி கைவண்டி இழுத்தாவது என் மனைவியை காப்பாற்ற எனக்குத் தெரியும்'

தம்பி சினிமாத் தனமான டயலாக் கெல்லாம் பேசறதுக்குதான் நன்றாருக்கும்.

இப்போது உங்கள் கவிதாவே வந்து 'என்னை மறந்து விடுங்கள்' என்று சொல்லப் போறா, அப்புறம் அவள் வழிப்பாதையில் நீங்கள் தலைவைத்து கூட படுக்க கூடாது. புரிகிறதா? என்றவாறு திரும்பியவர் வாம்மா கவிதா நம் குமார் தம்பி வந்திருக்கிறார். ஆப்பிள்ஜூஸ்கொடு என்றார்.

விழிகளில் கண்ணீர் முத்துக்கள் விழுந்து விடவா இல்லை இங்கேயே அடக்கிக் கொள்ளட்டுமா? என்று கேட்டுக் கொண்டிருக்க கையிலிருந்த கிளாஸை நீட்டினாள்.

கையில் வாங்கிய குமார் அடியிலிருந்து பேப்பரைப் பார்த்தவாறு ஜூஸை வாங்கினான்.

'நாளைக் காலையில் எனக்குத் திருமணம் என்ற ஆபத்து காத்திருக்கிறது. அப்பா நம்மைப் பிரிக்க பார்க்கிறார். என்னைக் காப்பாற்றுங்கள். கவிதா' என்று எழுதியிருந்தது.

குமார் தம்பி ஜூஸ் குடியுங்கள் கொஞ்சம் சூடு தணியட்டும் என்றவர் முந்தானைக்குள் பேப்பரை மறைத்த கவிதாவிடம் திரும்பி, 'சொல்லும்மா' என்றார். அவள் எந்திரத்தனமாக குமார் என்னை மறந்து விடுங்கள். உங்களை விட எனக்கு அழகான பணக்கார மாப்பிள்ளை கிடைத்து விட்டார், என்று வேகமாக சொல்லி முடிக்க விழிகளில் முத்துக்கள் கன்னங்களில் வேகமாக கண்ணீர்க் கால் வாய் அமைக்க எழுந்து ஓடி விட்டாள்.

மிஸ்டர் ராமமூர்த்தி நான் ஏழை தான் இன்னும் என்னால் ஒரு காசு கூட சுயமாக சம்பாதிக்க முடியாத கோழை தான். ஆனால் என் காதலுக்காக இந்த உலகத்தை கூட எரிக்கத் தயங்காத வீரன் நான். நாளை உன் மகள் திருமணம் என்ற வீராப்பில் இருக்கிறாய். ஆனால் இன்று இரவே உன் மகளுக்கும் எனக்கும் இந்த பங்களாவில் திருமணம் நடக்கும். முடித்து தான் காட்டுவேன் என்று சொல்லிவிட்டு எழுந்தான்.

இரவில் நட்சத்திரங்கள் ஒன்றையொன்று பார்த்துக் கண்ணடித்துக் கொண்டிருக்க ஆட்டோவில் வந்திறங்கிய ராம்குமார் ஒரு முறை தன் உடையையும் மீசைகளையும் சரிபார்த்துக் கொண்டான்.

அவன் எதிர்பார்த்தது போல் வீட்டைச் சுற்றி போலீஸ் காவல் இருந்தது.

கேட்டில் அவன் எதிர்பார்த்த கண்ணாயிரம் நின்றிருக்க அவன் கையில் ஒரு நூறு ரூபாய் பணத்தைக் கொடுத்து விட்டு தன் போலீஸ் உடையை இன்னொரு முறை சரி பார்த்துக் கொண்டு வீட்டினுள் நுழைந்தான்.

மாடியில் நின்ற கான்ஸ்டபிள் திரும்பிப் பார்த்து விட்டு இன்னொரு போலீஸ் தான் என்று எண்ணிவிட்டு பீடிபற்ற வைக்க ஆரம்பித்தான்.

கவிதாவின் அறையில் உலவிக் கொண்டிருந்த ராமமூர்த்தியிடம் சார் இந்த அறைக்கு பின்னால் நீண்ட பைப் இருக் கிறது. அந்தப் பையன் ஒரு வேளை ஏறி வந்து ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்து விட்டால் கஷ்டம், அதனால் உங்கள் மகளை வேறு அறைக்கு மாற்றி விடுவோம் என்றதும் கூர்ந்து பார்த்த ராமமூர்த்தி சரி என்று

கதவைத் திறந்தார். உள்ளே நுழைந்ததும் சட்டைக்குள்ளிருந்த கயிற்றை எடுத்துக் கொண்டு கதவைச் சாத்திய ராஜ்குமார் அவர் கைகளை ஜன்னல் கம்பிகளோடு இணைத்து சப்தமிடமுடியாமல் வாயில் கைக்குட்டையை திணித்தான். இவை யனைத்தும் கண்மூடி விழிப்பதற்குள் நடந்து விட என்ன செய்வதென்று உணர முடியாது நின்றிருந்த ராமமூர்த்தியப் பார்த்து 'ஏய் பணக்காரா இப்போது உன் மகளை அவள் சம்மதத்துடன் திருமணம் செய்து கொள்கிறேன் பார்' என்றவாறு பாக்கெட்டிலிருந்த டேப்ரிக்காக்டரை எடுத்த வைத்து அதன் ஸ்விச்சை அழுத்த அது மேளம் இசைக்க தன் கையிலிருந்த மஞ்சள் கயிறை கவிதாவின் கழுத்தில் மூன்று முடிச்சிட்டு இறுக்கமாகக் கட்டினான். வாசலிலிருந்து இன்ஸ்பெக்டர் கதவைத் தட்ட வேகமாக தாலியைக் கட்டி விட்டு கதவைத் திறந்தவன், சார் என் வேலை முடிந்து விட்டது. இனி நீங்கள் உங்கள் வேலையை ஆரம்பியுங்கள் என்றான்.

'கவிமாமணி'
**இரஜகை நிலவன்**

# பாலியலின் முடைநாற்றம்

அலைபேசியின் அலறல்
காதுகளில் ரீங்காரமிடுகிறது!
உழுத்துப்போன சாஸ்திரங்களும்
நமத்துப்போன சமுதாயமும்
கைகட்டி வேடிக்கை பார்க்கும்!
நிர்வாணமாய் எரிந்துபோன
எங்களின் சாம்பலின் வாசத்தை ரசித்தபடி...
புதிதாக முளைவிட்ட
பாலியலின் குரூரம்
செத்துவிட்ட மனிதத்தைத் தேடியலைகிறது!

சுந்தரிமணியன்,
புதூர்

# என்ன செய்வது

தண்டவாளத்தின் தடதட ஓசைக்குள்
தட்டுத் தடுமாறி ஏறிக்கொண்ட
ஒரு புல்லாங்குழல்
தட்டு நிறைவதற்காக
யாசிக்கிறது....

அது போகும் வரை
காதுகளையும் கண்களையும்
மூடிக் கொண்டிருந்த
இரயில் பெட்டி

சென்ற பின் வாயைத் திறக்கிறது
இதுங்களுக்கு
வேற வேலையே இல்லையென.
--------------------------

எளிதில் உடையும் மனதின் மேல்
இத்தனை கனமாக வந்து
விழுவது பாறைகள் என்கிறேன்
போ போ வெறும்
சொற்கள் தானே என்கிறார்கள்

அதே சொற்களைப் பொறுக்கி
அத்தனை வேகமாக
அவர்களின் மேல் வீசியெறிகிறேன்
போ போ இதெல்லாம் வெறும்
பூக்கள் என்கிறார்கள்

என் மீது பாறைகளாக
விழுந்த சொற்கள்
அவர்கள் மீது பூக்களாக விழுகிறது
என்ன செய்வது
அவர்களைப் போல் சொற்களை
வாய்க் கூசாமல் எறிய
முடியவில்லையே

**கி. கவியரசன்**
செங்கம்

# DR. ஆட்டோ

## நூல் குறித்த, என் வாசிப்பனுபவம்




| | |
|---|---|
| **தலைப்பு:** | DR. ஆட்டோ |
| **ஆசிரியர்:** | மு. திவ்யதர்ஷினி (13 வயது) |
| **பக்கங்கள்:** | 16 |
| **புத்தக அளவு:** | 105மிமீ யீ 148மி.மீ. |
| **விலை :** | ரூ 16/- |
| **பதிப்பு :** | வண்ணத்துப்பூச்சிகள் பதிப்பகம், |
| **சென்னை** | 28. |
| **அலைபேசி எண்.:** | 7010 30 9595 / 9382 301 898 |

உலகெலாம் இருக்கும் நிலவழிகளில் சாலைகள் மட்டும் இன்றி குறுக்குத் தெருக்கள், சந்துகள் என எத்தனையோ பயணப் பாதைகள் உள்ளன. அத்தனையையும் நாடி பிடித்தார்போல் அறிந்து வைத்துள்ளவர்களில் ஆட்டோ ஓட்டுநர்களும் ஒரு சாரார்கள். நம் பல்வித பயணங்களில் ஆட்டோவையும் அதை ஓட்டுபவரையும் தவிர்க்க இயலாது. அன்றாட வாழ்வில் உழைப்புடன் அல்லல் படும் அந்த ஆட்டோ ஓட்டுநர்களுடைய வாழ்வியலில் நடக்கும் சில வற்றை Dr. ஆட்டோ என்ற படைப்பின் வழியே காட்டுகிறார்கள் இரு மாணவிகள். சகோதரிகளான இவர்களில் இளையவர் மாணவி மு. திவ்யதர்ஷினி (13 வயது, 9ஆம் வகுப்பு, அரசு உயர்நிலைப்பள்ளி, கண்ணகி நகர், சென்னை.) எழுதியுள்ளார். மூத்தவர் மாணவி மு. நர்மதா (15 வயது, 11ஆம் வகுப்பு, அவ்வை ஹோம் டி.வி.ஆர். பெண்கள் மேல்நிலைப்பள்ளி, அடையார், சென்னை.) ஓவியங்கள் வரைந்து உள்ளார்.

தமிழ் சொற்பொழிவாளர், புரசைவாக்கம், சிஸினி மேல்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு அருள் பிரகாஷ் அவர்களின் வாழ்த்துரையுடன் தொடங்குகிறது இப் படைப்பு. பார்த்து, புரிந்து, உள்வாங்கி எழுதப்பட்டது அல்ல இது. ஆட்டோ ஓட்டுநர்களின் வாழ்வியலை, அவர்களோடு குருதியுறவினால், வாழ்வதினால் அனுப வித்து எழுதப்பட்டுள்ளது.

இந்த 16 பக்கங்கள் உள்ள நூலில் இடம் பெற்றுள்ள ஓவியங்களில், 11 பக்கங்களில் ஆட்டோக்கள் ஓவியங்களால் அணியமாக உள்ளன. வெவ்வேறு காட்சிப் பின்னணிகளுடன் ஆட்டோக்களின் ஓவியங்கள் பொருத்தமாக உள்ளன.

இளம் பருவத்திலேயே எழுதாக்கத்திலும் ஓவியக்கலையிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ள இவ்விரு சகோதரிகளிக்கும் நல்வாழ்த்துக்கள்! இம்மாணவிகளின் முயற்சிக்கு முன்னின்று வழிகாட்டும் வண்ணத்துப்பூச்சிகள் மின் இதழ் ஆசிரியர் திரு ஷூ. தாமஸ் அவர்களுக்கு பாராட்டுகள்!

இவ்வழுத்தாக்கத்தின் வழியே ஆட்டோ ஓட்டுநர்களை, அவர்களின் உழைப்பை மதிக்க வேண்டும் என்ற வேண்டு கோள் முன்வைக்கப்பட்டுள்ளது. உரிய மதிப்பளிக்கையில் உள்ளார்ந்த மனிதமும் உழைப்பும் உன்னதம் பெறும் என்பது உண்மையே!

**கவிஞர் மாலதி இராமலிங்கம்,**
புதுச்சேரி.

# பிரியமானவள்..

-- மணிராம் கார்த்திக் --

கலியனூர் கிராமம்,

“கல்யாணம் ஆகி எத்தனை வருஷம் ஆகுது? இன்னும் குழந்தை இல்லையா? என்னவா பிரச்னை ? ”

“பையனுக்கு பிரச்சனையா? இல்ல அந்த பொண்ணுக்கு பிரச்சனையா?”.

“நான் நெனச்சேன், அவ மேனா மினிக்கி மாதிரி ரொம்ப பிகு பண்ணுவா? அதான் இப்படி குழந்தை இல்லமா இருக்கா?”

“எனக்கு தெரியும், அந்த பையன் யாரையும் மதிக்க மாட்டான். ரொம்ப கர்வமா இருப்பான். அதான் இப்படி, அப்பா ஸ்தானம் ஆக முடியாம நிக்கிறான்!”.

என்று ஊரில் உள்ள தங்களுக்கு பழக்கமான மற்றும் சொந்த பந்தங்களிடம் இந்த மாதிரி பேச்சை கேட்டு கேட்டு சலித்து போனாள் பிரியாவும் வினோத்தும்.

பிரியா வினோத் திருமணமாகி ஏழு வருடத்தை கடந்து விட்டது.

குழந்தை இல்லை. ட்ரீட்மென்ட் பார்த்துட்டு இருக்காங்க.

பிரியாவின் உடல் நிலை குழந்தை பெற்று கொள்ள பிரச்னை இருப்பதாக கூறி ட்ரீட்மென்ட் பார்த்துட்டு இருக்காங்க.

ஊரே பேசினாலும், இன்று காலை வினோத்தின் அம்மாவும், பிரியாவின் அம் மாவும் அதை பற்றி பேசி கவலை பட ஆரம் பித்தனர்.

“சம்மந்தி, மன்னிச்சிருங்க. நான் சொல்றேன்னு தப்ப நெனைக் காதிங்க. உங்க பொண்ணுக்கு தான் குழந்தை பெத்துக்கிறதுல பிரச்சனைன்னு சொன்னங்க. அவளால எங்க குடும்ப வாரிசு தரமுடியாதுன்னு தெரிந்த பிறகு என்ன பண்றதுன்னு நீங்க தான் அவ கிட்ட கேட்டு சொல்லனும். வருசங்கள் போய்க் கிட்டே இருக்கு” என்று வினோத்தின் அம்மா சரளா, பிரியாவின் அம்மா மீனாட் சியிடம் கூறினாள்.

“நீங்க சொல் றது புரியுது சம்மந்தி. உங்க பையனுக்கு வேற கல்யாணம் பண்றது பத்தி



கேட்கிறிங்க. அத என் பொண் ணுட்ட சொல்லி சம்மதம் வாங்கி தர சொல்றீங்க. புரோக் கர் வேலை பார்க்க சொல் றிங்க” என்று கவலையுடன் கூடிய வலியில் பேசினால் மீனாட்சி.

“நான் தப்பா ஏதும் பேசல. அடுத்த நடவடிக்கை என்ன என்பது தெரியனும்?” என்று கேள்வியாய் கேட்ட்டாள் சரளா.

“உங்க வேதனையும் புரியுது. கண் டிப்பா நீங்க எதிர் பார்க்கிற முடிவ தான் நான் சொல்ல போறேன். என் மகளால உங்க குடும்ப மரியாதை ஒன்னும் போக கூடாது. நீங்க இந்த முடிவ தான் எடுப்பீங்கன்னு நான் கொஞ்ச காலமா யோசனை பண்ணிகிட்டு தான் இருந் தேன்.” என்று மீனாட்சி கூறினாள்.

“சம்மந்தி நீங்க பேசுறத பார்த்தா, நான் என்னமோ உங்க மகளை கொடுமை பண்ண மாதிரி பேசுறிங்க. இதுவரை அவல ஒரு வார்த்தை நான் கேட்டது இல்லை. இருந்தாலும் எங்க குடும்ப வாரிசு வேணும்னு தான் , என் பையனுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணலாம்னு கேக்கிறேன். அதுவும் இத்தனை வருஷம் கழிச்சு. எனக்கு இப்போ முடிவு தெரிய னும்” என்று சரளா கண்டிப்பான குரலில் பேசினாள்.

கண்களில் கண்ணீருடன் “நான் என் கை ஆகலாத பொண்ண சம்மதிக்க வைக்கிறேன்.” என்று ப்ரியாவை அழைத் தாள் மீனாட்சி.

இருவரின் பேச்சை கேட்டு கொண்டு கண்களில் கண்ணீருடன் பிரியா இதற்கு சம்மதிக்கவில்லை. தலையாட்டி மறுத்தாள்.

பிரியாவின் பக்கத்தில் நின்று கொண்டு இருந்த வினோத் கோவமாக பேச வர, அவனை தடுத்து நிறுத்தினாள் பிரியா.

இருந்தாலும் வினோத்தின் கோவத்தை அடக்க முடியவில்லை.

தன் அறைக்கு சென்று மருத்துவ அறிக்கை ஒன்றை எடுத்து அவர்கள் முன் வீசினான். அதிர்ச்சியில் சரளா மற்றும் மீனாட்சி.

“இந்த ரிப்போர்ட்ல, பிரியாவுக்கு எந்த குறையும் இல்லை. எனக்கு தான் குறை. என்னால தான் குழந்தை பெத் துக்க முடியாது, அதற்க்கு தான் ட்ரீட் மெண்ட் எடுத்துகிட்டு இருக்கேன். ஆனா வெளியில சொன்னா என்னைய அசிங்கமா நெனைப்பாங்கன்னு தான், பிரியா தன் மேல குறை இருப்பதா அவ சொன்னா. நான் எவ்வளோ சொல் லியும் அவ கேக்கல. என்னை யாரும் கேவலமா பார்க்க கூடாதுன்னு, அவ அசிங்க பட்டுகிட்டு இருக்கா. ப்ரியா ரொம்ப நல்லவ, என்பிரியமானவள். சொல்லபோனா அவ தான் இன்னொரு கல்யா ணத்தை பற்றி யோசிக்கணும்.” என்று அதிர்ச்சியை கொட்டினான் வினோத்.

“அப்படி பேசாதீங்க, குழந்தை பெத் துக்கிறது மட்டும் தான் கல்யாண வாழ்க்கையா? கடைசி வரை இரு வரும் ஒண்ணா பாசம் குறையாம, விட்டு கொடுத்து அன்போட இருக்கணும். குழந் தையை தத்தும் எடுத்துக்கலாம்.” என்று பிரியா கூறினாள்.

ப்ரியா மற்றும் வினோத்தின் பேச்சு சரளாவை யோசிக்க வைத்தது. தவறாக பேசி விட்டோம் என்பதை உணர்ந்து கண்களில் கண்ணீர் கொட்ட ஆரம்பித்தது சரளாவிற்கு.

குழந்தை இன்மை என்பதை குறை யாக பார்த்து அவர்களை காயப்படுத்த வேண்டாம். அவர்களின் வலி அவர்க ளுக்கே தெரியும். நாம் ஆறுதல் கூறுவதாக நினைத்து ஆராய்ச்சி பண்ண வேண்டாம்.

எல்லாம் நன்மைக்கே.....

# ‘வார்த்தை’



வார்த்தை
இது வெறும்
வார்த்தை அல்ல..

வார்த்தை
என்பது
அழகான
சொல்.

வார்த்தை
இது தான்
வாழ்க்கை.

வார்த்தை
இனிதானால்,
வாழ்க்கையும்
இனிக்கும்.

வார்த்தை
கசந்தால்,
வாழ்க்கையும்
கசக்க தான்
செய்யும்.

வார்த்தை
ஒரு முறை
வந்து விட்டால்
திரும்ப பெற
முடியாது...

வார்த்தையில்
கவனம் தேவை..

**மணிராம் கார்த்திக்**

அழகிய வார்த்தயே நம்மையும் ,
வாழ்வையும் அழகாக்கும்.

# உறவுகளே உயிர் நாடி

இரத்த உறவுகள் இறைவனின்
அருட்கொடை
இதமாய் நேசம் பேணிடுவோம்
மரத்த மனதினில் மாசு நீக்கியே
மாண்பினை மலரச் செய்திடுவோம்
சிரத்தை கொண்டு சிந்தை தன்னில்
சீராய் அன்பை விதைத்திடுவோம்
உரத்தை தந்திடும் உறவின் பெறுமதி
உள்ளம் உணரச் செய்திடுவோம்

இடுக்கண் களைந்திட இதயம் துடித்திடும்
ஈரம் தன்னைத் தெளித்திடுவோம்
கொடுக்கும் தருமம் உறவினைச் சேர்ந்திட
கோரிக்கை நாமும் விடுத்திடுவோம்
கடுந்துயர் துடைத்திடும் கைகள் நீட்டிட
கருணை மனதை வளர்த்திடுவோம்
உடுத்திட உடையும் புசித்திட உணவும்
கொடுத்திட வழிகளை அமைத்திடுவோம்

உறவினை இணைத்து
உயர்வினைக் காணும்
உன்னதம் உலகில் காட்டிடுவோம்
மறந்து வாழும் மானிடர் மனதின்
மருள்தனை யகற்றி வைத்திடுவோம்
துறந்து வாழும் அன்பின் வலிமையை
தொடர்ந்திடும் விருப்பினை
தொடக்கிடுவோம்
அறுந்த பட்டமாய்
விழுந்திட நேர்வதை
வினயமாய் விளங்கிட
வழிசமைப்போம்
துண்டித்து வாழும் உறவதன் சிறப்பினை
உள்ளத்தில் உணர்ந்திடச் செய்திடுவோம்

தண்டனை சாபமும் இறைவனின்
கோபமும்
தழைத்திடும் என்பதை உணர்த்திடுவோம்
மென்மை மனதினிலே உண்மை அன்பது
ஊறிடும் என்பதை உரத்துரைப்போம்
வன்மம் அகற்றியே வற்றிய நேசத்தை
வழிந்தோட வழிவகை செய்திடுவோம்

அறுத்திட முயலும் உறவினை எண்ணி
அலுத்திடல் மறந்து உழைத்திடுவோம்
முறித்து வாழும் மனங்களில் நாளும்
முரண்பாடு தன்னை மறைத்திடுவோம்
கறுத்த மனங்களில் உலர்ந்த ஈரத்தை
கசடென நினைத்து நீக்கிடுவோம்
நறுமணம் கமழும் நேசமும் பாசமும்
நெஞ்சத்தில் நிலைத்திட துணையாவோம்

ஹாஜறா கலீலுர் ரஹ்மான்
காத்தான்குடி.



# வெண்பா போட்டி

## காலம்: பெப்ரவரி 2025

தினந்தினம் துன்பத்தால் திண்டாடும் மக்களே
மனதிலே நிம்மதி இல்லாக்  - கனவும்
சுமந்தவர் வாழ்வில் சுகமுமே வேண்டி
மமதையும்  விட்டுத் தேடு.

**இந்திராணி தங்கவேல், திண்டுக்கல்.**

.

படைப்பென்னும்  தோன்றலைப்  பாவையர் கையில்
கொடுத்ததேன் ஆண்டவா கூறு? - விடையிதற்குச்
சொல்லாமல் என்னையும் சோகத்தில் தள்ளிநீ
செல்லாமல் உண்மையதைச் செப்பு!

**பாவலர் கோவதன் , மலேசியா**

.

வேண்டிப் பலவிருத்தம் வெண்பாவும் யான்படைத்தேன்
வேண்டும் அடியார்க்கு வேண்டியதை - ஆண்டவனே
என்றுமே நல்காமல் ஏய்ப்பதுபோல் எந்தனுக்கும்
இன்மகனை நல்லாத தேன்.?

**பாவலர் தாழை ந.இளவழகன்,  மணப்பாறை.**

இல்லையென்றுச் சொல்லுவார்க்கு ஏன்தந்தா யில்லைநீ
பல்லையவர் காட்டிப் பரிகசிக்க இல்லையென்று
செய்யாமல் ஏனிருக்காய் செய்மறந்தாய் என்றுமெண்ண
செய்கின்றாய் என்னிறை யே

**எழுத்தாளர் நாகா**

.

நரம்பு சுருண்டழுந்த நாளும் வலிதான்
இரந்துனைக் கேட்டேன் இறைவா - கரந்தான்
உரப்பாய் வலித்திட உள்நரம்பு சுண்ட
அரவணி ஈசா அருள்.
*உரப்பாய் - மிகக் கடுமையாய்*

**கு. கமலசரஸ்வதி**

.

எங்கும் நிறைந்த இறைவன் அவன்எனினும்
தங்கு மிடமோ தனிமைதான் - பொங்கும்
அருளைப் புவிக்களித்து ஆங்கோர் புதுமை
பெருகிடச் செய்வீர் புரிந்து .

.

ஆண்டவா! ஆட்சி அதிகாரம் கைக்கொண்டோர்
காண்பவற்றில் கொள்ளும்  களவுநோக்கு - மாண்டொழிய
வேண்டும்; அவர்களின் வேடங் களையவேண்டும்;
வேண்டுவது நல்கு விரைந்து.

**வானதி சந்திரசேகரன்**

.

நெட்டையா குட்டையா வெள்ளையா தொப்பையா
வெட்டியாய் கொன்றிட விந்துயேன் - கெட்டிட
பக்தனாய் வாரியம் பக்தியில் ஆலயம்
இக்கலை ஏனடா ஏய்

**மன்னை மணிமாறன்**

தன்னலம் மிக்கவர் தாரணியில் நன்றாக
இன்பம் சுவைக்கின்றார் எந்நாளும் - அன்புகொண்டு
மற்றவர்க்கு நன்மைசெய்வோர் மாதுயரில் மூழ்குவதேன்
சற்றெனக்கு ஆண்டவா செப்பு.

**குளோரிசக்தி, கரூர்.**

.

கல்லாய் இருந்துநீ காட்சி யருள்வீரோ...?
இல்லை கடவுளென்று நான்சொல்ல... பொல்லாப்பு
என்மேல்கொள் கின்றார் இழிபிழைப்புச் செய்திடுவோர்
உண்டெனில் கண்முன்னே வா

**பாவலர் தென்பசியார். வ. இராமதாசு**

.

கெட்டதைச் செய்வோர் கிளைவிரித் துள்ளதேன்
பட்டெனச் சொல்வாய் பதிலையே? - விட்டிடும்
தெய்வமே கோணலதைத் தேர்வோர் சிறப்புற்றார்
தொய்வ தவர்காணா ரோ !

**எம்.ஆர்.தனசேகரன், மலேசியா.**

.

ஆண்டவா பாவிகளை அன்பினால் ஆள்பவா
வேண்டியே உன்னை வணங்குகிறேன் - விண்ணில்
இருந்தேயென் துன்பை இறந்திடச் செய்து
வருத்தமும் நீங்கிட வாழ்த்து

**பாண்டிச்செல்வி கருப்பசாமி, கோவை**

.

நல்லொழுக்கம் பேணாத நாத்திகனை ஏந்துவதேன்?
வல்லமை கொண்டவனே வானவா - சொல்வதைக்கேள்
நல்ல சமூக நடத்தை கெடுக்கின்றப்
பொல்லா னெவனோ புடை

**தன்ராஜ் பாப்பணன்**

1

கல்லிலும் பொன்னிலும் காட்டிலும் மேட்டிலும்
அல்லிலும் தெய்வம் அமர்ந்ததாய்ச் - சொல்வார்;
அவர்க்கும் துயரங்கள் ஆயிரமாய் தந்தாய்;
தவறுக்கும் நீயன்றோ தாய்...?

2

தாயென்றும் தந்தையென்றும் தன்னுணர்வில் மெய்மறந்துன்
சேயென்று நின்றவர்க்கும் செய்ததுயர் - ஆயாது
வந்ததனால் தீமைகள் வந்திணைந்த துன்கதையால்;
நொந்ததன்றி வேறென்ன நோய்....?

**ஜ.க.நாகப்பன்**

.

தேன்சிந்தும் பெண்ணழகுத் தேவதைகள் நீபடைத்தாய்
மான்விழிகள் வண்ண மயில்வடிவாய்த் - தான்தோன்றும்
நான்போற்றும் செஞ்சுடர் நற்றமிழ் தந்தாய்நீ
ஏன்சோகம் தந்தாய் எனக்கு

**பா.இந்திரன், சிட்னி**

.

யாப்பெலாம் யான்பயின்று யாத்த கவிதைகள்
மூப்பிலா வாழ்வில் முடிகிறதே - மாப்பலா
போலினிக்கும் பாடல் பொலிவோடு நானெழுத
நாலும் பரிந்துரைப்பாய் நன்கு

**இரா அழகர்சாமி**

.

பிறப்புக்குக் காரணமாய் பின்னிருக்கும் ஈசா
இறப்பும் தருகிறாய் இன்பம் - பிறக்கும்
மனிதனை ஆட்டுவித்து மன்றாடச் செய்து
கணிக்குமுன் தள்ளுகிறாய் காடு.

**பாவலர்மணி வா.சண்முகம்**

அன்பே கடவுள் அனைத்துயிர்க்கும் காவலனாம்
என்றே உனைத்தொழுது ஏத்துகின்றார் - நன்றாமோ
செல்வந்தர் ஏழையென்ற வேறுபாட்டை ஏன்படைத்தாய்
நல்லவனா நீதான் நவில்!

**பாவலர் கருமலைத்தமிழாழன், ஒசூர்**

.

கொலையும் களவும் குவிந்துள்ள நாட்டில்
அலைமேல் தவிக்கிற அல்லல் - நிலையே
சிறைகம்பி தானில்லை சிக்கல்வாழ் வேனோ?
இறைவனே நீயே இயம்பு

**மலர்மைந்தன், கல்பாக்கம்**

•

பாக்களால் உன்னைத்தான் பாடித்தான் கும்பிட்டு
தேக்காமல் உள்ளத்தால் தேடினோம் - நீக்கமற
தாக்கு மவர்களைத் தாட்சன்ய மின்றித்தான்
பூக்களுக்குத் துன்பமேன் சொல்.

**சோ. சுந்தரேசுவரி.**

.

முடமாய் பிறந்து  முடங்கிக் கிடந்தே
அடம்பிடித்து வாழ்கிறேன்  ஆனால் -  தடமும்
வடமாய் பதித்து  வாழ்ந்திங்கு காட்ட
கடவுளே நல்வழி  காட்டு

**கவிஞர் கவி நிலா மோகன், தஞ்சாவூர்.**

.

பலகாரம் முன்னர் படைத்தார் படைத்தோன்
பலகாலம் உண்ணாமல் பார்த்தார் உலகில்
கலவரம் செய்கின்ற கால்வயிறு சோற்றின்
நிலவரம்சீர் செய்வாயா நீ?

.

**குயில்.மு.இரசியா பேகம்.**

இறைவனே அந்தமுடன் இன்பத்தைத் தந்த
மறைபொருள் நீயாகி மண்ணில் - உறைய
உறையுள்ளும் ஆதியாய் ஒப்பிலா நெஞ்சிற்
கறைகளை நீக்குக கேட்டு.

**சரஸ்வதி பாஸ்கரன்**

.

தெய்வமே என்னுடைய தேவையை நீயறிவாய்
பொய்யொன்று மில்லையிங்கு போதையிலே.... மெய்யாகச்
செய்வதறி  யாது செருக்குடன் வாழ்பவனைத்
தெய்வமே நீதிருத்தித் தா...

**ஜெ வசந்தி**

.

பாதியென்றாள் ஊரைப் பகைத்துநின்றாள் என்னுயிரில்
சோதிவடி வானவனே சொக்கலிங்கா - நீதியுண்டோ
கைப்பிடிக்க யார்யாரோ கால்பிடித்தேன் உன்பெயரால்
பொய்ப்பிடித்த சாதியாலே போச்சு..!

**வள்ளி முத்து**

ஆண்டவா ஏன்தான் அடுத்தடுத்தத் துன்பங்கள்
வேண்டுமென்று நீதந்தால் வேறுயார்தாம் - ஈண்டிங்கே
என்துணையாம் நீதானே இன்றே துயர்களைவாய்
கண்கள் மறைப்பதைக் காண்

**தென்றல் கவி**

•

வல்லூறைப் போல்மேலே வானத்தில் நான்பறந்தேன்
எல்லா விதத்திலும் ஏற்றம்தான்! - சொல்லாமல்
கொண்டென்னைக் கட்டிவைத்தே கொல்கின்றாய் பாழ்நிலத்தில்
எண்டநற்த் தெய்வமே ஏன்?

**முனைவர். சுந்தரராசன் தயாளன், பெங்களூர்.**

ஏனென்னை முட்டாளாய் எள்ளளவும் புத்தியின்றித்
தானென்று சொல்லும் தகுதியின்றி..? - நானென்னச்
செய்தேன்! நவில்வாயா? சிந்தனையில் கொஞ்சமாவ(து)
உய்து படைப்பால் உயர்த்து.

அடர்கருப்பு வண்ணம் அழகில்லாத் தோற்றம்
இடர்கொடுக்கும் எல்லாம் எனக்கேன்?-கடகடன்னுச்
சுற்றிவந்(து) உன்னிடமென் சோகத்தைச் சொல்லியும்,நீ
பற்றாத(து) ஏனிறைவா? பார்த்து.

**மாலதி திரு**

.

இறைவா முருகா இதுதானென் கேள்வி
முறைதானோ உன்றன் மொழியை - அறைவோர்க்
கறையேனோ தாயகம் கண்டிலர் நீயோ
உறைகிறாய் ஆறுபடை ஓது

**இரா இரத்தினகுமார்**

.

கல்லும் கரையும் கருணைவடித் தெய்வமென்பர்
அல்லும் பகலுமிங்(கு) ஐம்புலனும் - செல்லரிக்கப்
பிஞ்சுடன் பூவுமாய்ப் பெண்வதை செய்வோரைச்
செஞ்சு முடிப்பாயா செப்பு

**குலா கிருஷ்ணா, ரொறொன்ரோ / கனடா**

# வெண்பாப் போட்டி (பயணம்) 39

**போட்டியின் கால அளவு:**
மார்ச் 01 முதல் 12 வரை 2025

இம்மாதப் போட்டி....

செம்மொழியை மாத்திரமே  சிந்தித்து வாழ்வீரா ?
மும்மொழியும் வேண்டி முனைவீரா?  -- ??????

இந்த வெண்பாவின் தனிச்சொல்லில் இருந்து தொடங்கி மீதமுள்ள எட்டே சீர்களில் உங்கள் பதிலை. கனல்பொறி போல நறுக்கென்று இரண்டே வரிகளில் சொல்வதே இம்மாதப் போட்டியாகும்.

**பொதுவான விதிகள்:--**

**ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம்.**
**வெண்பாவிற்குக் கீழ் எழுதியவர்கள் தங்கள் பெயரினை தமிழில் எழுதுதல் அவசியம்.**
**ஒருவர் ஒரு வெண்பா மட்டுமே எழுதவும்.**

**அசத்துங்கள் கவிஞர்களே....**
வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் ப ட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்ப னைக்கே... உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகி ருங்கள் போதும்.
காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்....

தளர்வுகள் :-
தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டா யம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்....
**தமிழ்நெஞ்சம் ஆசிரியர்**
மற்றும்
தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு

# உலக தாய்மொழி தினம்

21.02.2025

கருவை விதைத்தவன் தந்தை - எனினும்
கருவில் சுமப்பவள் தாய் - நம்மை
கருத்தாய் வளர்ப்பவள் தாய் - சிறந்த
கருணைத் தெய்வம் தாய் - பேசக்
கற்றுத் தருபவள் தாய் .

தாலாட்டில் துவங்கி இம்மொழி
தாயின் வழி வந்ததால் - அதனைத்
தாய்மொழி என்றழைத்தோம் -அதற்கு
தனிச்சிறப்பளித்தோம்.

தாய்மண் என்பதுவம் ,
தாய்நாடென்பதுவும் ,
தாய் மொழி என்பதுவும் - அந்தத்
தாய்க்குரிய பெருமையன்றோ.

மற்ற மொழிகள் பலவும்
மனம் விரும்பிக் கற்றாலும்
தாய்மொழிப் பண்டிதமே
தரணியில் உயர்வு தரும்.

ஏனைய மொழிகள் எல்லாம்
சுவை சேர்க்கும் பதார்த்தம் போல்,
தாய்மொழிதான் நமக்கு
பசி தீர்க்கும் சோறாகும் - நம்மைத்
தாங்கிடும் வேராகும் - அறிவுக்கு
அஸ்திவாரம் போலாகும்.

தாயின் சிறந்த கோயிலும் இல்லை
தாய்மொழிக்கிணை தரணியில் இல்லை.

தாய்மொழியை நேசிப்போம்.
தாய்மொழியை வாசிப்போம்.
தாய்மொழியை சுவாசிப்போம்.
தாய்மொழியை வணங்கிடுவோம்.

அவரவர் மொழி வளர்ப்போம்
அடுத்தவர் மொழி மதிப்போம்.
அனைத்து மொழிகளையும்
அரவணைத்துச் செல்வோம்.
அவரவர் ஊரில் பிழைக்க
அவரவர் மொழியே போதும்.
அனைத்துலகிலும் பழக
அன்னிய மொழிகளும் வேண்டும்.

மற்ற மொழிகள் மீது - அதீத
மயக்கம் கொள்ளாமல்,
தாய்மொழி பேசுதற்கு - சிறிதும்
தயக்கம் கொள்ளாமல்
தாய் மொழி சிறப்புணர்ந்து -அதனைத்
தரணியில் பரப்பிடுவோம் - அதையோர்
தவமாய்க் கொண்டிடுவோம்.

வாழ்க தாய்மொழி.
வளர்க தாய்மொழிப் பற்று

சிலேடை சித்தர்

**சேதுசுப்பிரமணியம்.**

கோவை.

# பெற்றோர்

»

» உங்கள் பெற்றோருடன் நீங்கள் அருகில் அமர்ந்து பேசி எத்துனை நாட்கள்?
» உங்கள் பெற்றோருக்கு நீங்கள் இறுதியாக பணிவிடை செய்து கொடுத்தது எப்போது?
» உங்கள் பெற்றோரை நீங்கள் கண்ணியமாக நடந்துகிறீர்களா?
» உங்கள் பெற்றோர் பேச்சுக்கு நீங்கள் கட்டுப்பட்டு நடந்தது எப்பொழுது ?
» உங்கள் பெற்றோரை நீங்கள் மகிழ்விக்க செய்ததுண்டா ?

பெற்றோர்...

இவர்கள் மீது நிச்சயம் நீங்கள் அன்பு கொண்டிருக்கலாம். ஆனால் அந்த அன்பை நீங்கள் செயல்களில் காட்டிட தவறி விட்டீர்கள். உங்கள் அழகிய அன்பு கலந்த வார்த்தைகளை அவர்களிடம் கூற தவறி விட்டீர்கள்.

அவர்களது உள்ளம் விரும்புபவையை செய்து கொடுக்க தவறி விட்டீர்கள். அவர்களது உள்ளத்தை மகிழ்விக்க செய்ய நீங்கள் தவறி விட்டீர்கள். அன்பு என்பது வெளிப்படுத்தக் கூடியதாகும். பெற்றோருக்கு நாம் அன்பு செலுத்துவோம். வார்த்தை மூலமாகவும், அழகிய செயல்கள் (பணிவிடை) மூலமாகவும், அன்பளிப்புகள் மூலமாகவும் அவர்களது உள்ளத்தை இன்பமடைய செய்திடுவோம். அவர்களது தேவையினை அறிந்து அவற்றை நிறைவு செய்து கொடுத்திடுவோம். அவர்களுக்கு நோவினை செய்யாது, அவர்களது பேச்சை புறக்கணிக்காது மதிப்பளித்து அவர்களை காத்திடுவோம். அவர்களுக்கு முக்கியத்துவம் அளித்திடுவோம்.

**— பஸ்லா காதர்**

# தமிழ்மொழி

வண்ணப் பூகோளத்தில்
வந்துதித்த மொழிகளிலே
எண்ணில்லாப் பெருமைகளால்
எமையாளும் முதுமெஊழி ல்தமிழ்மொழி

ஈடில்லா இலக்கணத்தால்
இமயம் தொட்டிங்கு
பஞ்சமில்லா வார்தைகளால்
பாரினை ஆளும்மொழில்தமிழ்மொழி

அந்நியரை விரட்டியடித்து
அடிமை விலங்குடைக்க
ஆயுதமாய்ப் பாட்டெடுந்த்த
பாரதியின் புரட்சிமொழி ல்தமிழ்மொழி

காலங்கள் வென்றிட்ட
கம்பனும் வள்ளுவனும்
கோலெடுத்தே வளர்ந்திட்டக்
குன்றாத கனியமுதமொழி ல்தமிழ்
மெஊழி

மூவேந்தர் மூச்சாயிருந்து
முச்சங்க மடிதவழ்ந்து
முதுபுலமை கண்டங்கே
முக்தியடைந்த முதல்மொழியாம்
ல்தமிழ்மொழி

அன்னை குரல்வழியில்
என்னைத் தாலாட்டி
அமுதாய் அகரமூட்டி
அரியணை ஏற்றியமொழி-தமிழ்மொழி

**ஏரூர் றமிஸ்**
ஏறாவூர் - இலங்கை

# காதல்

மனத் தோட்டத்தில் விளைந்த
அன்புப் பயிர் கண்கள்வழி கலந்து
உருகி உருகிக் காதலாகி
கண்கள் தங்கள் அன்புக் கண்களை
எப்போதும் பார்க்க ஏக்கம் கொள்ளும்

பார்க்காதபோதும் மனக் கண்களில்
காட்சிகள் வண்ணங்களில் ஓடும்
உலகே இருளில் ஆழ்ந்து விடும்
முகத்திலோ வெளிச்ச ரேகைகள்
வண்ணக் கோலமிடும்

உண்மைக் காதல் உள்ளங்களின்
சங்கமம் எண்ணங்களின் பிம்பம்
காமம் கணப் பொழுதில் மட்டுமே
நாமம் உச்சரிக்கும் மனம் தினமும்
இரு மனம் ஒரு மனமாகும் உன்னதம்

காணும்போது கண்களில் மின்னலடிக்கும்
கண்கள் தங்களுக்குள் ஒட்டி உறவாடும்
இதயம் பாய்ச்சும் இன்ப வெள்ளம்
உதயமாகும் காதல் அரும்புகள் எங்கும்
இருப்பு நிலை மறந்து மோன நிலையாகும்

உண்மைக் காதல் அழிவில்லாதது
பெண்மையைப் போற்றும்
பெருமையானது
மற்றதெல்லாம் போலியானது
பொல்லாததுகள் புறந்தள்ளப் படட்டும்
அன்புக் காதலே அரண் போன்றது.



**புல்லாங்குழலன்,**
சென்னை



# ஹைக்கூ கவிதைகள்

பிஞ்சு கைகளில்
தஞ்சமடைந்த கடல்
மழைத்துளி

***

ஒப்பனை கலைத்த பின்னும்
கலையவில்லை
மன அரிதாரம்

***

வெட்கப்படாமல்
காம உணர்வை
குரலில் வெளிப்படுத்திய பூனை

***

பட்டு போன மரம்
துளிர்த்தது
என்னவள் கடந்த சாலையில்

**திருமதி சாந்தி சரவணன்**
சென்னை 40



# கற்றுக்கொடுக்கும் கல்லறைகள்

இவர்கள் இங்கு
தூக்கம் கொள்கிறார்கள்
அடுத்தவரை துன்பம்
கொள்ள வைத்தவர்கள்
துன்பத்துடனேயே காலங்களைக்
கழித்தவர்கள்
அமைதியைக் கெடுத்தவர்கள்
அதையே கொடுத்தவர்கள்
என்று பலதரப்பட்டவர்கள்
இப்போ இங்கே

விசாலமான இடத்தில்
மிகவும் நேர்த்தியாக
வரிசையாக உறங்குகிறார்கள்
அதில் சிலருக்கு
பூக்களால் அலங்காரமும்
தீபம் ஏற்றியும்
அன்பு வெளிப்படுத்தப்படுகிறது

கல்லறைகள் என்றே
காலகாலமாகப் புரிந்து
கொள்ளப்பட்டு வந்தாலும்
வாழும் போது நிம்மதியாக
தூங்க முடியாதவர்கள்
தூங்கும் இடமாகவே இது

இவர்களுக்கு எதுவுமே தெரியாது
எங்கும் அமைதியாகவே
வந்திருப்பவர்கள் மனங்களும்
நல் எண்ணங்களோடு

ஆம் இங்கு தான்
வாழ்ந்தவரின் அமைதியில்
வாழ்வினைக் கற்கும்
வாழ்பவர்கள்

**அ . ஜெகன்**
சுவிஸ்

# நீயா? நானா?



**சம்பாஷனைப் பாக்கள்**

பெண் பாத்திரமாக தமிழ்நெஞ்சம் அமின், ஆண் பாத்திரமாக ஏடி வரதராசன்

(கற்பனையாக)

**பெண் : -**

.

உங்களுக்கு நாங்கள்
ஒருபோதும் கீழில்லை
எங்களுக்கும் எல்லாம்
இயலுமென்பேன் - இங்குநாங்கள்
அத்திரங்கள் வீசிடுவோம்
ஆகாயம் தான்பறப்போம்
சத்தியமாய் எல்லாம்
சமம்

.

**ஆண் : -**

.

பெண்ணே உமக்குள்
பெரிதாக ஒன்றுமில்லை
என்னே சமமாம்
இயம்பிடுவாய் - பெண்ணால்
இயலாத ஒன்றும்
இருக்கும் இயன்றால்
செயல்படுத்தல் அன்றோ
சிறப்பு?

.

**பெண் : -**

.

முடியாத தொன்றுமில்லைப்
பெண்ணால் முயன்றால்
விடியாத துண்டோ
விளம்பேன் - அடியாதும்
வெற்றிக்கு மட்டுமே;
வீரமுள்ள ஆண்கள்முன்
எற்றைக்கும் பெண்ணா
இழிவு...?

.

**ஆண் : -**

.

போருக்குச் செல்வோம்
புதிய யுகம்படைப்போம்
நேருக்கு நேராக
நின்றிடுவோம் - யாருக்கும்
அஞ்சோம் மனத்தால்
அகலோம் எவரிடத்துங்
கெஞ்சோம்ஆம் ஆண்களெலாங்
கேள்

.

**பெண் : -**

.

ராணுவத்தில் பெண்ணிலையா
ராஜாவாய் ஆள்கின்ற
ஆணவத்தில் பெண்ணிலையா
ஆண்மகனே - காணுங்கால்
பெண்ணன்றி இங்கே
பிறப்பும் இறப்புமில்லி
மண்ணில் இதைகொள்
மனத்து .

.

**ஆண் : -**

.

தடகளத்தில் வெற்றி
தனியாகப் போகும்
இடங்களில் வெற்றி
இனியும் - விடங்கொடுத்தால்
எங்கேயும் ஆண்கள்
எதிலேயும் ஆண்களெனச்
சிங்கம்போல் நிற்போம்
சிறந்து.

.

**பெண் : -**

.

பெண்களெலாஞ் சாதித்தப்
பின்னணியை நீபடித்தால்
எண்களுக்கே எட்டாமல்
ஏகிவிடும் - கண்களால்
இற்றை வரலாற்றை
ஏட்டில் விழியிரண்டால்
பற்றோடு கொஞ்சம்
படி.

.

**ஆண் : -**

.

எங்கே படித்தாலும்
எண்ணிக்கை என்றுவந்தால்
அங்கே இருப்பதெல்லாம்
ஆண்கள்தான் - இங்கேயோர்
பந்தயத்தில் போட்டியிடப்
பாவையரால் ஏலுமா
முந்தையப் பேச்சை
முடி.

.

**பெண் : -**

.

மண்மீது போட்டாலே
மாக்கோலம்; வான்கதிரோன்
பெண்மீது கண்வைத்துப்
பேசவரும் - பெண்டாட்டி
என்றொருத்தி இல்லையெனில்
எவ்வாலக ஆண்களுக்கும்
திண்டாட்டம் தானே
தினம்.

.

**ஆண் : -**

.

எத்தனைக் காலத்திற்(கு)
இஃதொன்றை யேபேசிப்
பித்தாய் அலைந்திடுவீர்ப்
பெண்களே - முத்தான
வாழ்க்கையில்நீர் இல்லையென்றால்
வாழ இயலாதா
ஏழ்பிறப்பும் வாழ்வோமே
யாம்.

.

**பெண் : -**

.

ஏழ்பிறப்பும் வேண்டும்
இனிதானக் காதலுள்ளம்
ஏழ்பிறப்பும் வேண்டும்
இணைக்கரம் - சூழ்நிலையை
நன்கறிவீர் ஆண்களே
நாளும் நடைபோடப்
பெண்களன்றி ஏதுண்டாம்
பேசு.

.

**ஆண் : -**

.

நாங்கள் சமைத்திடுவோம்
நாங்களும் கோலமிட்டு
நாங்களும் எல்லாம்
நடத்திடுவோம் - பூங்குழலில்
வீசும் மலரை
விளைவிப்ப தாண்கள்தான்
பேசுவது மட்டுமே
பெண்.

.

**பெண் : -**

.

வாய்மையை மட்டும்
வளர்க்காதீர் ஆண்களே
தாய்மையை இங்கே
தருவதுயார் - சேய்மைக்குப்
பாலூட்ட யாரோ
பரிவுதர அன்னனையைப்
போலவூரில் உண்டோ
புகல்.

.

**ஆண் : -**

.

அன்னையாவ தற்குமிங்கே
ஆண்கள்தான் காரணமாம்
பெண்மையாள்வ தெல்லாம்
பெரும்புகழா - உண்மையில்
உங்களுக்கு நாங்கள்
உவந்தளித்த ஒன்றுதான்
இங்கன்னை என்னும்
இயல்பு.

.

**பெண் : -**

.

எங்களின் காதல்
இருந்தால்தான் ஆண்களே
உங்களின் வாழ்க்கை
உளங்களிக்கும் - தங்களால்
ஒன்றும் இயலாது
ஒருவராய் ஆகவே
என்றுமே பெண்தான்
இணை.

.

**ஆண் : -**

.

செல்வத்தை வாழ்வுக்குச்
சேகரிக்க நாங்கள்தான்
இல்லத்தை நாளும்
இயக்குவதும் - தொல்லுலகில்
வீரமும் போரும்
விளையாட்டில் வெற்றிபெற
ஆரம்பம் என்றாலே
ஆண்.

.

**பெண் : -**

.

பெண்ணும் பணிசெய்துப்
பேரை எடுக்கின்றாள்
எண்ணம்போல் வாழ்வை
இயக்குகிறாள் - மண்ணில்
இணையாக உங்களுக்கு
எல்லாமே செய்யும்
துணையும் இவளாவாள்
துய்த்து .

.

**ஆண் : -**

.

அப்பப்பா போதும்
அடடடடா நீங்களிங்கே
செப்பியது எல்லாம்
சிறப்பென்பேன் - எப்போதும்
ஆண்கள்தான் எல்லாம்
அகிலத்தில் என்றிருந்த
நான்தான் அடிமுட்டாள்
நம்பு.

.

**பெண் : -**

.

உங்களினும் நாங்களென்றும்
ஓங்க இயலுமா
எங்களினும் நீங்கள்
இளைத்தோரா - இங்கே
அனைவருமே ஒன்றென்று
அகங்கொண்டால் தானே
நினைவெல்லாம் வாழ்வீர்
நிதம் ?

.

**ஆண் : -**

.

ஆமாம் சமம்தான்
ஆண்பெண் இருவருமே
நாமாக வாழ்தல்
நலமாகும் - பூமாதே
போட்டியாக எண்ணிப்
புலம்பிவிட்டேன் ஒன்றாவோம்
ஏட்டிக்குப் போட்டி
எதற்கு...?

# கட்டியிழுக்கும் கண்கள்

போதைதரும் கண்ணாலே
பாதை மறைக்கிறாய் ;
பாதையுமே தெரிந்தாலும்
பயணம் மறுக்கிறாய் .

அழகுக்கண்கள் இரண்டிலேயும்
அன்பும் பொங்குது .
அன்புபொங்கும் நெஞ்சினிலே
அமைதி தங்குது .

ஈரவிழிப் பார்வையுமே
என்னை மயக்குது ,
எனைமயக்கும் பார்வையிலே
இளமை தவிக்குது.

முத்துப்பற்கள் எல்லாமே
முத்தம் கேட்குது ,
முத்தம்கேட்க கொடுத்தாலே
முகமும் வேர்க்குது .

கார்குழலின் அழகிங்கு
கட்டி இழுக்குது ,
கட்டியிழுக்கும் வேளையிலே
கண்கள் துடிக்குது .

இதழ்வடிக்கும் கள்ளினிலே
இன்பம் சேர்க்குது
இன்பம்சேர்த்து தருவதாலே
எழிலும் பூக்குது .



# வாழ்நாள் துயரமாய்...



**சுஸானா முனாஸ்**

இருள் பிரிந்திருக்காத விடிகாலைப் பொழுதில், அந்த இ.போ.ச. வண்டி, குன்றும் குழியுமான பாதையில், குலுக் கலுடன் தட்டுத் தடுமாறி ஓடிக் கொண்டிருந்தது. அந்தக் கிரா மத்தில் இருந்து புறப்படும் காலை நேர வண்டி அது... குறிப்பிட்ட அந்த நகரத்துக்குப் போக இதை விட்டால் வேறு வண்டி இல்லை. ஜன்னலோர இருக்கையொன்றில் கையால் முகத்தின் ஒரு பாகத்தை மறைத்தபடி, வெளியே முகத்தை திருப்பிக்கொண்டு, உள்ளூர சிறு நடுக்கத்துடன் உட்கார்ந்தி ருந்தாள் நுஹா. காலை ஐந்து மணிக்குப் புறப்படும் இந்த வண்டியை தவற விட்டால், அவள் எடுத்திருக்கும் முடிவை செயற்படுத்த வேறு நேரம் கிடைக்காது என்று தோன்றியதில், வேறு எந்த நினைவும் இன்றி இவள் புறப்பட்டிருந்தாள். பயத்தைத் தாண்டி உள்ளூரப் பொங்கிக் கொண்டிருக்கும் வேதனை தான் அவளை இப்படி புறப்படத் தூண்டியிருந்தது. யாராவது பார்த்து விடப் போகிறார்கள் என்கிற பயம் நெஞ்சை உலுக்கினாலும், அதனை மீறிய ஒரு பரிதவிப்பு, ஏக்கம், பச்சாதாபம் எல்லாம் கலந்த உணர்வே அவளுக்குள் மேலோங்கி நின்றது...

நான் யார்.... என் உண் மையான தாய் யார்.... என் பிறப்புக்கு காரணம் யார்? நான் காகக் கூட்டுக்குள் வளர்க் கப்பட்ட குயிலா? இது நிஜம்தானா... ஏகப்பட்ட கேள்விகள் அவள் சின்ன இதயத்துள் குதித்துக் கூத்தா டிக் கொண்டு நின்றன... இரண்டு முழு நாட்களாய் குழப்பத்தின் பிடியில் சிக்கிக் கொண்டிருந்தவள், இன்று துணிந்து கிளம்பியிருந்தாலும், இதயம் பயத்தின் பிடியில் படபடத்தது. என் வாழ்வின் இரகசியத்தை நான் கண்டு பிடித்தாகவேண்டும். சிறு கீற் றாகத் தெரியும் உண்மையை முழு ஒளியாய் நான் உணர்ந்து தெளிய வேண்டும்... என்னைச் சுற்றி பின்னப்பட்டிருக்கும் பொய் வலையை உதறி, உண்மையை முழுமையாக நான் அறியவேண்டும். இது நடக்குமா... என்னால் முடி யுமா... ம்கூம் முடியனும்... முடிந்தேயாக வேண்டும்... உள்ளுக்குள் வைராக்கியம் பிறந்தது.

பத்தொன்பது வயதை நெருங் கியிருந்தாள் நுஹா. ஏழ்மையான குடும்பத்து சூழ்நிலையில்தான் அவள் வளர்ந்தாள். தந்தை இல்லை. மூன்று சகோதரிகள், ஒரு சகோதரன். இரண்டு நாட்களாய் இந்த உறவு முறைகளைப் பற்றிய குழப்பம் அவளுக்குள் வந்திருந்தது.

உண்மையில் இவர்கள் என் உடன்பிறந்த சகோதர சகோதரிகள் தானா.... அல்லது... அவளுக்கு தன்னுடன் இரட்டையாக வளர்ந்த ஸரப் பற்றி முதன்முறையாக சந்தேகம் வந்தது. ஆமாம் இரட்டையர்கள் என்றால் ஒரே தினத்தில் தானே பிறந்தநாள் வரவேண்டும். ஆனால் இருவேறு தினங் கள் அல்லவா இருவருக்கும்... இது எப்படி சாத்தியமாகிற்று... இது நாள் வரை இப் படி ஓர் சந்தேகம் வந்திருக்கவில்லை. ஏனென்றால் அவள் வளர்ந்த ஏழ்மைச் சூழலில், பிறந்தநாட்கள் என்பதை எப் போதுமே யாருமே நினைவில் வைத் திருப்பதில்லயே...அதுவும் சாதாரண நாட் களைப் போலவே வெறுமனே கடந்து போய்விடும்... பெரும்பாலான வருடங் களில் அது கடந்துபோனதே நினை விலிருக்காது. நினைவூட்டவும் யாரும் இருந்திருக்க மாட்டார்கள்.

பளபளவென விடிந்துவிட்டிருந்தது. அந்த வண்டி இரண்டு பக்கமும் பசுமை யான மரங்களைக் கொண்ட சிறு காட் டுப்பகுதிக்குள், ஊடறுத்துப் போன பாதையில் குலுக்கலின்றி இப்போது ஓடிக் கொண்டிருந்தது. சுற்றியிருந்த இயற்கை எழிலில் லயிக்கும் மனநிலையில் அவள் இல்லை. மனதுக்குள் ரயில் தடதடத்து ஓடிக் கொண்டிருந்தது. குருட்டு தைரி யத்தில் புறப்பட்டு விட்டாள். நேரம் கடக்க, கடக்க பயம் மனதைப் பிறாண்டத் தொடங்கிற்று. எங்கே போய் எப்படிச் சேரப்போகிறோம்... முட்டாள்தனமாய் புறப் பட்டுவிட்டதாக மனதில் சிறு சல னம் தோன்றினாலும், தன் பிறப்பின் இரகசியத்தை அறிந்திடும் ஆசையும், வேகமும் அந்த சலனத்தை விலக்கி நிறுத் திற்று.....'ஆண்டவனே தைரியத்தை தா' மனம் வேண்டிக் கொண்டது.

இரண்டு நாட்களுக்கு முன், நுஹா தையல் வகுப்புக்கு போய்விட்டு திரும்பி வந்த போது, வீட்டினுள்ளே உம்மாவும், உம்மம்மாவும் பேசிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது.

'ஏம்மா பானு கிட்ட நுஹா விஷயம் சொன்னீங்களா....'உம்மாஉம்மம்மாவிடம் கேட்டுக்கொண்டிருந்தாள். நுஹாவுக்கு திருமணப்பேச்சு நடந்து கொண்டிருந்தது. நுஹா ரொம்பவும் அழகான பெண், கொடி போன்ற உடலமைப்பும், திருத்த மான முக அமைப்பும், எலுமிச்சை நிற மும் பார்ப்போரை சட்டென்று ஈர்த்து விடக்கூடியதாகவே இருந்தது. அலங் காரம் ஏதுமின்றியே பார்ப்பதற்கு அம் சமான பெண் இவள். உயர்தரத்தை இப் போது தான் முடித்திருந்தாள். அவளது அழகில் மயங்கி, அவளைப் பெண் கேட்டு வந்திருந்த சம்பந்தத்தைப் பற்றி தான் உம்மா சொல்லிக்கொண்டிருந்தாள் என் பது புரிந்த போது, அவள் முகத்தில் சிறு வெட்கம் பரவிற்று. இயல்பான பெண் மையின் கூச்சம். அது தந்த முகப்பொலி வுடன் படியில் வைக்க காலைத் தூக்கிய போதுதான், எடுத்த அடியை வைக்க முடி யாமல் உடல் ஸ்தம்பித்து நின்றது.

'ஓமோம்... சொல்லத்தான் வேணும்... என்ன இருந்தாலும் நுஹாவை பெத்தவ அவ தானே... அவக்கிட்ட அபிப்பிராயம் கேட்காமல் ஏலுமா.......' உம்மம்மாவின் வார்த்தைகள் அவள் காலடியில் பூமியை நழுவப் பண்ணிற்று.

நுஹாவைப் பெற்றவள்..... அப்படி யென்டா இவங்க என்ட உம்மா இல் லயா.... பானு ராத்தாதான் என்னோட உம்மாவா ... அது எப்படி சாத்தியமாகும்..... இது உண்மையா... உண்மையில்லாமல் உம்மம்மா ஏன் அப்படி சொல்லனும்... அவள் மனதை ஆயிரம் கேள்விகள் குடைந்து எடுத்தன...

'ஸ்...ஸ்.... உம்மா...மெதுவாப் பேசுங்க.. நுஹா வாற நேரம்.... புள்ள கேட்டுடப் போகுது ....' உம்மாவின் எச்சரிக்கைக் குரலில் சுயவுணர்வு பெற்றவள், எடுத்த

காலைப் படியில் வைக்காமல், சட்டெனத் திரும்பி சுவரின் மறைவில் நடந்து கடப் புக்கு வந்தாள். ஆழ்ந்த மூச்சை எடுத்து விட்டுக் கொண்டு தன் அதிர்ச்சியை சற்றே மட்டுப்படுத்திக் கொண்டவள் அப்போது தான் நுழைவதுபோல் கடப்பை சற்றே சத்தமாகத் திறந்து நிமிர்ந்த போது உம்மா ஜன்னலினூடாக எட்டிப்பார்ப்பது தெரிந் தது. அதிர்ச்சியினால் வெளுத்திருந்த முகத்தை சிரமத்துடன் இயல்பாக்கி உள்ளே வந்த நுஹா, உம்மம்மாவை நிமிர்ந்து பார்த்து மெலிதாகப் புன்ன கைத்தாள். அவளது மனதுக்குள் எரி மலையை வெடிக்க விட்டுவிட்டது தெரி யாமல் உம்மம்மாவும் அவளைப் பார்த்து சினேகமாய் சிரித்து விட்டு 'நா... கொஞ்சம் றிஸாதா ஊட்டுக்கு போய்ட்டு வாறன்.. பின்னேர பஸ்ல வீட்ட போகனும்...' என்று விட்டு வெளியே போனார்.

இவளுக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து பானுவை உம்மம்மாவின் பிள் ளையாகத்தான் பார்த்திருக்கிறாள். உம் மம்மா அடுத்திருந்த நகரத்தில் வசித்து வந்தார். அங்கு தான் பானு இருந்தாள். எப்போதாவது உம்மம்மா வீட்டுக்கு போகும் போது தான் அவள் பானுவை பார்த்திருக்கிறாள். பானு ஊருக்கே வருவதில்லை. ஐந்து வருடங்களுக்கு முன் அவளுக்கு திருமணம் என்ற போது இவர்கள் தான் உம்மம்மா வீட்டுக்கு போய் வந்தார்கள். பானு வைத்தியராக வேலை பார்க்கிறாள். இடையிடையே உம்மம்மா அவள் அனுப்பியதாக பணம் கொண்டு வந்து தருவார். பானுவுக்கு அடுத்த தங்கை களின் திருமணத்துக்கும் கூட அவள் தான் உதவி புரிந்ததாக உம்மா சொல்லக் கேட்டிருக்கிறாள். ' பானு ராத்தா ஏன் இங்க வாறல்ல...' என்கிற கேள்விக்கு உம் மாவிடம் இருந்து எப்போதும் பதில் வந்த தில்லை என்பது இப்போது வேறு புரிதலை இவளுக்குள் விதைத்தது.

வண்டி நகரத்தை நெருங்கி விட்டி ருந்தது. நுஹாவுக்கு பயத்தில் நாக்கு உலர்ந்தது. என்ன தைரியத்தில் புறப் பட்டிருக்கிறோம்... ஸரபை கூட்டி வந்தி ருக்கலாமோ... அவனை என்ன சொல்லி அழைத்து வருவது. அவள் தனக்கு எது வும் தெரிந்ததாக காட்டிக்கொள்ளவே இல்லையே... ஸரபுக்கு கூட எதுவும் தெரிந்தி ருக்காது. உம்மா என்னைத் தேடி யிருப்பார்களோ... வண்டி பேருந்து நிலை யத்தில் நின்று எல்லோரும் இறங்கிக் கொண்டிருந்தார்கள். இவள் எழுந்து தன் சிறு பையை மார்போடு அணைத்தபடி, பேருந்து ஓட்டுனரிடம் சென்றாள்.

'இங்க ஜென்ரல் ஹொஸ்பிட்டல்..எங்க இருக்கு...' என்று கேட்டாள் தயங்கியபடி.

ஓ... அங்க போகணுமாம்மா. பின்னுக்கு இருக்கிற ரெண்டுபேரும் கூட அங்க தான் போகப் போறாங்க... இந்த பஸ் அதாலதான் போகும்... இருங்க அங்க இறக்கி விடுறன்...' ஓரளவு வயதான ஓட்டுனர் தான் அன்போடு சொன்னார்.

'ஆண்டவனே ...நன்றி...' மனதுக்குள் சொல்லியபடி இருக்கையில் மீண்டும் அமர்ந்து கொண்டாள்.

ஆஸ்பத்திரியடியில் இறக்கி விட்டு விட்டு வண்டி புறப்பட்டு விட்டது. நிமிர்ந்து ஆஸ்பத்திரி வளாகத்தை ஏறிட் டவளின் விழிகள் பிதுங்கிப் போயிற்று. இத்தனை பெரிய ஆஸ்பத்திரியில் பானுவை எங்கே தேடுவது. அந்நிய மொழி பேசும் ஆட்களாக இருக்கிறார்களே... என்ன செய்வது.. உடல் சிறிதே நடுங்கத் தொடங் கிற்று. உதடு துடித்து அழுகை வரப் பார்த்தது.

'ம்கூம்... அழக்கூடாது... தைரியமாக இருக்கனும்...' தனக்குத்தானே தைரியத்தை ஊட்டிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தாள். முன்னால் நடந்துபோய்க் கொண்டிருந்த பர்தா அணிந்திருந்த

பெண்ணைப் பார்த்ததும், சிறு மகிழ்ச்சி தோன்ற, சட்டென முன்னே நகர்ந்து

'இங்க டொக்டர் பத்தி கேக்கனும்னா எங்க கேட்கணும் ....' என்று கேட்டாள். அந்தப் பெண் என்ன அவசரத்தில் இருந் தாளோ, ஏற இறங்க அவளை ஒரு தினு சாகப் பார்த்து விட்டு, அலுவலகத்தை கை காட்டிவிட்டு அவள் பாட்டில் போய் விட்டாள்.

அலுவலகத்தில் போய் நின்றாள் நுஹா. அந்த அலுவலகத்தில் இருந்த பெண் சிங்களத்தில் என்ன வேண்டும் என்று கேட்க , மொழி புரியாமல் பேந்தப் பேந்த செய்வதறியாது விழித்தாள். விழிகள் குளம் கட்டி நின்றன.

'பானு டொ ... டொக்டர்.....' உதடுகள் தந்தியடித்தன ... தனியே புறப்பட்டு வந்த தைரியம் எங்கோ பறந்தோடியிருந்தது.

கண்ணீர் ததும்ப நின்றிருந்தவளைப் பார்த்ததும், அலுவலகப் பெண் அவளைப் பரிதாபமாக நோக்கி விட்டு, சற்றுத் தள்ளி நின்ற ஒரு இளைஞனை அழைத்தாள். அவனிடம் என்ன சொன்னாள் என்று நுஹாவுக்குப் புரியவில்லை. அவன் அவ ளைப் பார்த்து

'என்ன வேண்டும்..' என்று தமிழில் கேட்டான். இவள் வயிற்றில் பால் வார்த் தாற்போல் இருந்தது அவனது பேச்சு ... ஆண்டவனே வழிகாட்டு....

'டொக்டர் பானுவைப் பார்க்கணும்....'

'செனல் பண்ண வந்தீங்களா....'

'இல். அவங்களப் பார்க்கனும்....' அவள் திணறியபடி சொன்னாள்.

அவன் புதிராய் அவளைப் பார்த்தான் ... அந்த முகத்தில் தெரிந்த பரிதவிப்பு அவனுக்கு யோசனையை கொடுத்தது போலும்

'அவங்க யார் உங்களுக்கு ... 'என்று கேட்டான் அவளைக் கூர்ந்து பார்த்தவாறே...

என்னவென்று சொல்வது... உம்மா என்றா.. அவனுக்கு சிரிப்பாக இருக் காதா... முப்பத்து மூன்று வயதுப் பெண் ணுக்கு பத்தொன்பது வயதில் பெண் இருப்பது சாத்தியமா என்று அவனுக்குத் தோன்றாதா.... பொய் சொல்கிறேன் என்று நினைக்க மாட்டானா...அவள் விழித்தாள்.. பின்

'சொந்தம்....' என்றாள் மெல்லிய குர லில்...வேறு எப்படி சொல்வது என்று புரியவில்லை...

அவன் எதேச்சையாய் முன்னே பார்த்து விட்டு விறுவிறுவென எதுவும் பேசாமல் நகர்ந்தான்.... ஸ்டெதஸ்கோப் கழுத்தில் தொங்க வந்த டொக்டர் ஒரு வரை நெருங்கியவன்

'சேர்... மெடத்தை தேடி இங்க ஒரு பிள்ள....' என்று கைகாட்டினான்.

அந்த இளைஞன் எதுவும் பேசாமல் நகர்ந்ததில் திடுக்கிட்டு நிமிர்ந்தவள், அங்கே பானுவின் கணவன் ரியாஸைக் கண்டதும் கண்கள் பெருக, அவனை நெருங்கினாள். பானுவின் திருமணத்தின் போதும், அப்புறம் போட்டோக்களில் பார்த்ததிலும் ரியாஸை நுஹாவுக்கு அடையாளம் கண்டுபிடிக்க முடிந்தது... ஆனால் ரியாஸால் சட்டென இவளை அடையாளம் காண முடியாது போயிற்று.

'யார் ...' என்றான் புருவம் சுருங்க..

'நுஹா...' அவள் உதடு துடிக்க சொன்னாள்.

அவன் விழிகள் வியப்புடன் விரிந்தன. அந்தப் பெயர் அவன் அறிந்த ஒன்று. அவன் சுற்று முற்றும் பார்த்து விட்டு

'யார் கூட வந்திருக்க...' என்று கேட்டான்.

‘தனியே தான். அவங்களப் பாக்க ணும்....’ என்றாள் பெருகிய கண்களைத் துடைத்தபடி ....

அவன் அவளைக் கூர்ந்து பார்த்தான். அவளது தவிப்பு நிறைந்த முகம் எதையோ புரிய வைத்தது. கண்களில் கனிவுடன்

‘ஸ்....அழாதே...அவஇன்னிக்குஇங்க வரல... நா வீட்ட தான் போறன்... வா போகலாம்...’ என்றவன் அவளை அழைத்துக் கொண்டு, அவனது காரை நோக்கிப் போனான். கதவைத் திறந்து அவளை ஏறச் சொல்லி பூட்டிவிட்டு, தானும் ஏறி காரைச் செலுத் தினான்.

‘ நீ வந்தது வீட்ல தெரியுமா...’ தனியே வர அங்கே யாரும் அனுமதித்திருக்கப் போவதில்லை என்பது தெரிந்தே கேட் டான் ரியாஸ்.

‘இல்ல...’’அவள் தலை குனிந்திருந்தாள். இவர் தான் என்னோட வாப்பாவா... ம்கூம் இருக்க முடியாதே... அப்போ என் பிறப்பு பற்றி இவருக்கு தெரியுமா... இப்போ நா அது பற்றி பேசினால் அவர்க ளோட வாழ்க்கைல பிரச்சினை வராதா... அவசரப்பட்டுட்டேனா. நிதானமாக யோசித் திருக்கலாமோ... மார்போடு அணைத் திருந்த பையோடு தலை குனிந்து அமர்ந்திருந்தவளின் முகத்தில் தெரிந்த குழப்பத்தை ரியாஸின் விழிகள் கவனிக்கத் தவறவில்லை.

‘இப்படி தனியே வாறது தப்புன்னு புரியுதா...’ ரியாஸின் வார்த்தைகளில் சற்றே அழுத்தம் தெரிந்தது.

‘ம்....’ என்றவளின் கண்களில் இருந்து கண்ணீர் பெருகிற்று.

‘ என்ன அவசரம்...’

அவள் பதில் பேசவில்லை. எப்படி... என்ன சொல்வது என்று புரியவில்லை... ஆண்டவனே என்ன ஒரு இக்கட்டில் மாட்டிக்கொண்டேன்.... என் சுயநலத்துக்காய் அவங்க வாழ்வில குழப் பத்தை ஏற்படுத்தப்போகிறேனா... இதை முன்னே யோசித்திருக்க வேண்டாமோ... சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது என்பது இது தானோ... அவ ளது மௌனத்தை புரிந்தவன்போல் அதற்கு மேல் ரியாஸ் எதுவும் கேட்கவில்லை. ஐந்து நிமிடப் பயணத்தில் வீடு வந்திருந்தது.

சிறிய அழகான வீடு. போர்ட்டிகோவில் காரை நிறுத்தி இறங்கியவன், அவளையும் இறங்கச் சொன்னான். கார் சத்தம் கேட்டு கதவைத் திறந்த பானுவைக் கண்டதும் இவள் உடலில் சிறு அதிர்வொன்று வந்தது. இவங்களா என்னோட உம்மா... இத்தனை இளமையா.... அழகா.. இது உண்மையாக இருக்காது என்று தோன்றிற்று.... இது சாத்தியமே இல்லை என்று மனம் அடித்துச் சொன்னது...இத்தனை சிறிய வயதில் இத்தனை பெரிய பெண் எப்படி சாத்தியம் ... அப்போ உம்மம்மா எதற்காக அப்படிச் சொன்னாங்க... என்னைப் பெற்றவள் பானு என்று ஏன் சொன்னாங்க....

பானுவின் முகத்தில் இவளை எதிர்பார்க்காத திகைப்பு தெரிந்தது... ரியாஸைக் கேள்வியுடன் நோக்கினாள்.

‘ஹொஸ்பிடலுக்கு உங்களைத் தேடி வந்திருந்தா...’ என்றான் அவன் அவள் கண் களின் கேள்விக்கு பதிலாய் .

‘வா.... உள்ள ... ’ என்றாள் பானு. அந்தக் குரலில் பெற்றவளுக்கான பாசம் பொங்கி வழியவில்லை என்பதைக் குறித்துக் கொண் டது இவள் மனது... பெற்றி ருந்தால் கூட ஒரு தடவையாவது தூக்கிக் கொஞ் சாமல் அந்தப் பாசம் வந்துவிடாது என்று தோன்றிற்று. இவளுக்கும் கூட அவள் மேல் அந்தப் பாசம் தோன்றுமா என்பது கேள்விக்குறியே என்கிற யதார்த்தம் நுஹாவுக்கு புரிந்தது.

தயக்கத்துடன் உள்ளே வந்தவளை அமரச் சொல்லிவிட்டு, தோளில் தூங்கி

யிருந்த மூன்று வயது மதிக்கத்தக்க சிறுவனை உள்ளே கொண்டுபோய் போட்டுவிட்டு பானு திரும்பிவந்தாள்.

'நீ வந்தது உம்மாக்கு தெரியுமா...' பானுவின் குரலில் எந்த உணர்ச்சி யுமில்லை.

'இல்ல...' இவளின் குரலில் சிறு தவிப்பு இருந்தது. ஏதோ வேகத்தில் புறப் பட்டு விட்டிருந்தாள்... அங்கே உம்மா பதறியிருப்பார்கள் என்று பட்டது.... அந்த உம்மா என்றுமே பாசத்தில் குறை வைத்ததே இல்லயே என்கிற உண்மை உள்ளத்தைச் சுட்டது.

பானு தன் கைபேசியை எடுத்து உம்மம்மாவிற்கு தகவல் தந்தாள். அவள் உம்மாவுடன் கதைப்பதே இல்லை... எல்லாமே உம்மம்மா ஊடாகத்தான் நடைபெறுவதுண்டு.

'சாப்பிட்டியா....'

வெறுமனே தலையாட்டினாள் நுஹா.

'வா சாப்பிடலாம்...' பானு எழ முயற் சிக்க சட்டென நிமிர்ந்து

'இல்ல.... முதல்ல நா உங்க கூட கொஞ் சம் தனிய கதைக்கனும் ....' என்றாள் நுஹா தயக்கத்துடன் ரியாஸைப் பார்த்தபடி.

பானுவின் இதழ்கள் சற்றே விரிந்து சிறு புன்னகையை உதிர்த்தது.

'பேசலாம்.... பேசணும்.... முதல்ல சாப்பிடு.... காலையில் இருந்து எதுவும் நீ சாப்பிடலன்னு தெரியுது... சாப்பிட்டு பேசலாம்...' என்ற பானுவின் அழுத்தமான குரலில் இவள் எழுந்து போய் அவர்களுடன் சேர்ந்து சாப்பிட்டு விட்டு வந்தாள்.

மூவரும் வரவேற்பறையில் உட்கார்ந் திருந்தார்கள். சற்று நேரம் அங்கே மௌ னம் கோலோச்சிற்று.

'என்ன பேசணும்.... பேசு ...' பானு தான் மௌனத்தைக் கலைத்தாள்.

'நா...நா... தனியே பேசணும்...' தயக் கத்துடன் ரியாஸைப் பார்த்தாள் நுஹா. இவளின் தயக்கத்தைப் பார்த்து விட்டு ரியாஸ் புன்சிரிப்போடு எழ முயற்சிக்க, அவனை ஒரு கையால் பற்றி அழுத்தி உட்காரவைத்த பானு

'இவருக்கு தெரியாம என் வாழ்க்கைல எந்த ரகசியமும் இல்ல நுஹா. அதனால எதுவா இருந்தாலும் நீ இவர் முன்னாடியே பேசலாம்...' என்றாள் நுஹாவின் முகத் தையே கூர்ந்து பார்த்தபடி.

தலை குனிந்து சில வினாடிகள் மௌ னமாய் விரல் நகங்களை ஆராய்ந்து கொண்டிருந்த நுஹா தலையை உயர்த்தி பானுவையும், ரியாஸையும் மாறி மாறிப் பார்த்து விட்டு

'நா உங்களுக்கு யாரு...' என்று கேட்டாள் தவிப்போடு... அந்தக் குரலின் தவிப்பில் பானுவின் விழிகளில் சிறிதே நீர் கோர்த்தது. பெற்ற மனதின் சிறு துடிப்பு அது.

'என் வயித்தில் பிறந்த பிள்ளை...' சிறு மௌனத்தின் பின் நிதானமாய் சொன் னாள் பானு... குரலில் எந்தத் தடுமாற்றமும் இல்லை... இது தானே நீ தேடி வந்தது என்பது போன்றிருந்தது பானுவின் பதில்.

'எ... எப்படி ....' மேலே பேச்சு வரா மல் விழிகளில் இருந்து நீர் வடிந்தது நுஹாவுக்கு.

'நீ என்ன கேட்கப் போறேன்னு புரியுது... இது எப்படி சாத்தியம்னு தோணுதா... என்னோட பதினாலு வயசில நீ பிறந்தாய்....'

அதிர்ச்சியில் வாய் பிளந்தது நுஹாவுக்கு... பதினாலு வயசிலா.. எ.... எப்படி..... கண்கள் விரிய பானுவைப் பார்த்த வளைப் பார்த்தபோது பரிதா பமாய் இருந்தது பானுவுக்கு.

'உன்னோட அதிர்ச்சி புரியுது... அந்த வயதில் எப்படின்னு உன்னால நம்ப முடியாமக்கூட இருக்கலாம்... ஆனா அது தான் உண்மை... உன்னை ஏன் நான் என் பொண்ணா வளர்க்கல என்று கூட உனக்கு தோணும். நானே அப்போ ஒரு குழந்தை... அது எப்படி சாத்தியமாயிருக்கும் சொல்லு...நீ பொறந்த போது தான் ஸரபும் உம்மாக்கு பொறந்திருந்தான்... உன்ன உம்மாகிட்ட குடுக்க வச்சு, என்னோட நிலைமை புரிஞ்சு, என்னை ஒரு ஹொஸ்டல்ல விட்டு படிப்பிச்சாங்க சாஹிதா என்கிற டொக்டர்... உடைஞ்சு போய் இருந்த என்ன இப்ப டொக்டரா உருவாக்கினதே அவங்க தான்.... இவரோட உம்மா தான் அவங்க... உனக்கும் எனக்குமான பந்தம் வெறுமனே பத்து மாதம் தான் நுஹா.... ஒரு தடவையாவது நான் உனக்கு பால் கொடுக்கல .... உம்மா தான் உன்னைப் பாலூட்டி வளர்த்தாங்க.. பெத்தது மட்டும் நானா இருந்தாலும் உனக்கு உம்மா அவங்க தான்...

'என்னோட வாப்பா யாரு....' நுஹாவின் அழுத்தமான கேள்விக்கு உடனடியாக பானு பதில் சொல்லவில்லை... ஆனால் சொல்லாமலும் முடியாது என்று தோன்றிற்று பானுவுக்கு. நுஹா வளர்ந்து விட்டாள். அவள் தன் பிறப்பைப் பற்றிய ரகசியத்தை தேடித்தான் இத்தனை தூரம் தனியே புறப்பட்டு வந்திருக்கிறாள் என்பது புரிந்தது. அதனைத் தெரிந்துகொள்ளாமல் அவள் விடப்போவதுமில்லை என்பதை அவளது முக அழுத்தம் சொன்னது. அதில் தவறும் இல்லை. தன் தாய் தந்தை யார் என்பதை அறிந்து கொள்ளும் உரிமை ஒவ்வொரு குழந்தைக்கும் இருப்பதை மறுக்க முடியாது... ஆனால்.....இதனை அவளால் எப்படி எடுத்துக்கொள்ள முடியும் என்று மலைப்பாக இருந்தது பானுவுக்கு. இப்படியான ஒரு சூழ்நிலை லட்சத்தில் ஒருவருக்கே ஏற்படும் என்றாலும் ஏற்படாமல் இல்லை என்று கசந்தது அவள் உள்ளம். ஒரு நிஜத்தை நுஹா தெரிந்து கொள்ளும் காலம் வந்து விட்டதாக பானுவுக்கு தோன்றிற்று. கசப்பான நிஜம் என்றாலும், ரொம்ப நாள் மறைக்க முடியாத விடயத்தை சொல்லியே தீர வேண்டும்.

'சொல்லுங்க....என்னோட வாப்பா யாரு...' உம்மா என்று பானுவை அழைக்க அவளுக்கு வாய் வரவில்லை... எதுவோ அவளைத் தடுத்தது.

'என்னோட வாப்பா தான் உன்னோட வாப்பாவும்....' பானுவின் இறுகிப் போன குரலில் அப்படியே ஸ்தம்பித்துப்போனாள் நுஹா.. அமிலத்தைக் கரைத்து வயிற்றில் ஊற்றியதுபோல் மலங்க மலங்க விழித்தவளை பரிதாபமாய் பார்த்தாள் பானு... இப்படியோர் திருப்பத்தை அவள் எதிர்பார்த்திருக்க மாட்டாள் என்று தோன்றிற்று.

'எ... என்ன...' திணறியபடியே கேட்டவளைப் பார்த்த பானு

' ஆமா... நுஹா... இன்னிக்கு வரைக்கும் நீ எனக்கு மகளா.... தங்கச்சியான்னு எனக்கு சொல்லத் தெரியல...என்னோட வயித்துல நீ பொறந்ததால மகளா... அல்லாம என்னோட வாப்பாக்கு பொறந்ததால தங்கச்சியான்னு எனக்கு கொழப்பம் இன்னும் இருக்கு....' என்றாள் பானு கசந்த குரலில். அவளது விழிகளில் கண்ணீர் நிறைந்து நின்றது.

அதிர்ச்சியின் உச்சத்தில், கண்களில் இருந்து கரகரன்னு கொட்டிய கண்ணீரை புறங்கையால் துடைத்தபடியே

'இ... இது எப்படி .... எ... என்னால நம்ப முடியலியே... என்று திக்கியவளைப் பார்த்து, விரக்தியாய் இதழ்களில் விரிந்த சிறுபுன்னகையோடு

'நம்பித்தான் ஆகனும் நுஹா. ஏன்னா கண்ணுக்கு முன்னால சாட்சியா நீயே இருக்கே... குடிகாரத் தகப்பனுக்கு பெத்த

புள்ள கூட வெறும் போகப் பொருளாதான் தெரிஞ்சிருக்கு... அதனைத் தட்டிக் கேட்கப் பயந்து, மறைமுகமாக துணை போன கையாலாகாத உம்மா... புருஷனுக்கு எதிரா வாய் திறக்கத் தெரியாத கோழை... அதனோட பலன் நீ.... நீ உண்டாகி இருந்தது கூட எனக்குத் தெரிந்து கொள்ள முடியாத பருவம் என்னோடது... உன்னைக் கருவிலேயே அழிக்க முடியாத கட்டத்தை நீ தாண்டி இருந்தே... என்ன செய்ய.... இதில என் தப்பு என்ன இருக்கு சொல்லு... பெத்த தகப்பனாலேயே சீர ழிக்கப்பட்ட, பாவப் பட்ட பொண்ணு நான். என்னால என்ன செய்திருக்க முடியும்.. அவரு செய்த தப்புக்கு சிறையிலேயே வாழ்க்கைய முடிச்சிட்டாரு... அவர வாப்பான்னு சொல்லவே எனக்கு நாக்கூசுது... பானுவின் குரலில் இருந்த துயரத்தின் அளவினை இவ ளால் புரிந்து கொள்ள முடிந்தது.

பானுவின் தகப்பன் ஒரு குடிகாரன். தினமும் போதையுடன் வரும் அவனுக்கு பருவ வயதில் நின்ற பானுவும் ஒரு பாவையாகத் தான் தெரிந்தாள். ஒற்றைப் படுக்கை அறை வீட்டில், போதையின் உச்சத்தில் தந்தையால் சீரழிக்கப்பட்ட போது, தாயின் கண்ணீர் வேண்டுதலுக்காக வாய்மூடி, தனக்குள்ளேயே வெதும்பி மௌனமாய் இருந்தாள் பானு. நான்கு மாத இடைவெளியில் இவளுக்கு அடுத்த தங்கை ஜானுவை, தந்தை நெருங் கிய போது, வெளியே ஓடி அவள் கத றியதில் விடயம் காவல்துறைக்குப் போனது... சிறுவர் துஷ்பிரயோக வழக்கு பதியப் பட்டு, விசாரணையின் போது, சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகளால் வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது தான் பானு பதினான்கு வயதில் கர்ப்பமாகி இருந்தது தெரிந்தது. நீதி மன்ற விசாரனைகளின் பின், பானு அவளது உம்மம்மாவின் பொறுப்பில் விடப்பட்டாள். தந்தைக்கு சிறைவாசம் விதிக்கப்பட்டது. சிறை வாழ்வின்போதே மாரடைப்பு ஏற்பட்டதில் அவர் இறந்தும்போனார். பானுவின் வைத்தியப் பரிசோதனையின்போது உடனிருந்த டொக்டர் சாஹிதாதான் இவளது வாழ்வினை திசை திருப்பி, தனது மகனையே இவளது வாழ்க்கைத் துணையாக்கினார். பானு சொல்லி முடித்த போது, பானுவின் விழிகளிலும் அருவி கொட்டிற்று.

நுஹா சட்டென எழுந்து வந்து பானுவின் முன் தரையில் அமர்ந்து, பானுவின் மடியில் முகம் புதைத்து குலுங்கிக் குலுங்கி அழுதாள். பாலியல் வன்கொடுமை பற்றி பேசும் போதும், கேட்கும்போதும் அவள் உள்ளம் அனலாய் கொதிக்கும்.. ஆனால் இப்போது என் பிறப்பே அப்படியோர் கேவலத்தில் நடந்திருக்கிறதே.. பதினாலு வயதுப் பிஞ்சின் வயிற்றில் நான் உதித்திருக்கிறேன். இதில் பானுவின் தப்பு எதுவுமே இல்லை. அந்த வயதில் அவள் மனது என்ன பாடுபட்டிருக்கும், சொந்தத் தகப்பனால் சீரழிக்கப்படும் பெண்ணுக்கு அதன் பின் வாழ்க்கையில் என்ன எஞ்சியிருக்கும்... அவள் மனதில் விழுந்த அடி எத்தனை வலித்திருக்கும்... அவளின் வாழ்நாள் துயரமாய் நான்.... நானும் என் பங்குக்கு அவளை வருத்த வேண்டாம். பானுவை உம்மா என்றழைத்து அவமானப்படுத்த வேண்டாம்... அவள் எப்போதும் போல் ராத்தாவாகவே தூர இருக்கட்டும். எந்த உண்மையை தேடி வந்தேனோ அதனைத் தெரிந்து கொண்டாயிற்று.. இதுவே போதும். இனி என் வாழ்நாள் துயரமாய் என் பிறப்பும் இருக்கப் போகிறது.... அற்ப இன்பத்துக்காக இரு பெண்களின் இதயத்துக்குள் இரும்புக் குண்டு பதிக்கப்பட்டிருக்கிறது.... இதனை என்னென்பது....

பானுவின் கை அவள் தலையை தன்னை மீறி மெல்ல வருடிற்று... நுஹா

கண்களைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்தாள். முகத்தில் ஒரு தெளிவு வந்திருந்தது. திரும்பி ரியாஸைப் பார்த்து

'என்னை பஸ் ஸ்டான்ட் வரை கொண்டு விட முடியுமா...' என்று கேட்டாள் மெல்லிய குரலில். அவன் பதில் பேசாமல் திரும்பி பானுவைப் பார்த்தான்.

'அவசரமில்லை இருந்து போ...' என்றாள் பானு.

நுஹா எழுந்தாள். இருக்கையில் அமர்ந்து நிதானமாய் பானுவை ஏறிட்டாள்.

'இல்ல ... நா போகனும்... இத்தனை நாள் எப்படி இருந்தேனோ இனியும் அப்படியே இருக்கத்தான் இப்போ நா விரும்புறன்... அது தான் சரின்னும் தோணுது. உங்க நிலமை எனக்குப் புரியுது... உங்கள சங்கடப்படுத்த நா விரும்பல... ஆனா ஒரே ஒரு உதவி உங்ககிட்ட கேட்கலாமான்னு தோணுது....'

'கேளு...'

'எனக்கு கல்யாணம் பேசுறாங்க... முதல்ல அது பரவாயில்ல என்று நெனச்சேன்... ஆனா இந்த உண்மை தெரிஞ்ச பின்னால அதனை ஒத்துக்க மன திலதைரியமில்ல... நா மேல படிக்கனும்னு விரும்புறன். படிப்பு எனக்கு ஒரு தைரியத்தையும், நம்பிக்கையையும் தரும்னு நம்புறன்... உம்மாகிட்ட இத உங்களால சொல்ல ஏலுமா... நீங்க சொன்னா உம்மா கேட்பாங்க....'

இரு பெண்களின் பேச்சுக்கிடையேயும் வெறும் பார்வையாளனாக மட்டுமே இவ்வளவு நேரம் இருந்த ரியாஸ் முதன் முறையாக வாய் திறந்தான்.

'நுஹா... உன்னோட படிப்புக்கான முழு உதவியும் எங்ககிட்ட இருந்து உனக்கு கிடைக்கும்... என்ன படிக்கணும் என்பதை நீ தீர்மானித்துக் கொள்...' என்றான்.

நுஹா எழுந்தாள். உள் அறைக்குப் போய் தூங்கிக்கொண்டிருந்த சிறுவனின் நெற்றியில் மென்மையாய் முத்தம் ஒன்றைப் பதித்தாள். திரும்பி வந்து பானுவை நெருங்கி

'ஒரே ஒரு தடவை உங்களைக் கட்டிப் பிடிச்சுக்கவா...' என்று கேட்டாள்... அடுத்த வினாடி பானுவின் இறுகிய அணைப்பில் இருந்தாள் நுஹா.

அந்த வண்டி ஊரை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. அதே ஜன்ன லோர இருக்கையில் அமர்ந்திருந்த நுஹாவின் இதயம் இப்போது பயத்தில் பட படக்கவில்லை. மாறாக பாறாங்கல்லை இதயத்தின் மேல் தூக்கி வைத்த தினுசில் கனத்துக் கிடந்தது.

பணமிருக்கு பணமிருக்கு
பந்தி இலையில
பாசமெல்லாம் பேசுவான்டா
நரவல் தலையில

எழுதிவச்சுப் படிக்கையில
எதுவும் புரியல
எட்டியெட்டி சொந்தம்போகும்
காசே கடவுளே

பெத்தாலும் பிள்ளையில்லை
இந்த உலகுல
பெட்டியில பணமிருக்கா
கொள்ளி தடையில

சுடுகாட்டில் வேகயிலும்
பாசம் உயிலுல
சொத்திருந்தா போதுமடா
சொர்க்கம் கையில

நலம் பயக்கும்
**மன்னை மணிமாறன்**

# பச்சாதாபம்

சாலையிலே ஓர் அந்தகன் கரமேந்திய தட்டிலே
சில்லறைச் சலசலப்புக்கள் பக்கத்துத் தெரு
வரை எதிரொலிக்கின்றன...

இறைஞ்சும் அவ் வார்த்தைகளில்
அனுதாபம் சொட்டிக் கொண்டே தான்
இருக்கின்றன
ஆனாலேனோ தெரியவில்லை
செவியுரும்
செவி கேட்கும் அச் செவிடர்களுக்கு
மட்டும் மனத்தினின்று ஈரம்
சொட்டவில்லையென்று...

நீட்டப்பட்ட தட்டொன்று திசை தப்பிச்
சென்று எறியப்பட
அந்தோ!
எறிந்தவனின் அகோரச் சிரிப்பு
சலசலக்கும் சில்லறைகளுடன்
நர்த்தனமாடுகிறதே...

கண்ணின்றி உலகைக் காணாதவனின்
பெயர் அந்தகன் என்றால்,
கண்ணிருந்தும் உதாசீனம் செய்யும்
இவர்களை எல்லாம் எப்பெயர்
கொண்டழைப்பது...?
அவ்விடம் பச்சாதாபப்பட்டு வெட்கித் தலை
குனிந்ததுவே மனிதம்!

**'அரமிகாக் கவி' அதீனா அபூ உபைதா,**
ஒட்டமாவடி, கிழக்கிலங்கை

# சூரியன் பேசினால்...



அதிகாலையில் ஆதவனை
இமைக்காமல் பார்க்கிறேன்
வண்ணமிகு குளுமை தீப்பந்து
வானில் மிதந்து வருகிறது!

செம்மையின் அழகுபற்றி
சூரியன் கூறி சென்றான்!

பகலில் பகலவனை
பார்த்து மகிழ முடியாமல்
கண்கள் கூசப் பார்க்கிறேன்
வானில் மிதக்கும் வெள்ளித்தட்டு
விரிந்து அதனைச் சுற்றி நிற்கும்
சுட்டெரிக்கும் சூரியக் கதிர்கள்!

சூடான அழகு பற்றி
சூரியன் கூறி சென்றான்!

அந்திவேளையில் ஆதவனை
ஆர்வத்தில் பார்த்து மகிழ்கிறேன்
வானில் வண்ணங்கள் பரப்பி
வர்ணஜாலம் காட்டியது!

வானம் சூரியன் இணைந்து
பொங்கும் அழகு பற்றி
புன்னகையுடன் கூறி மறைந்தது!

பகலும் இரவும் சந்திக்கும்
பேட்டியை வியந்து காண
ஆவலுடன் வெளியே சென்று
அண்ணாந்து வானம் பார்த்தேன்!

ஆதவன் தன் ஒளியை
விரிந்த வானப் போர்வைக்குள்
மறைத்து மறைந்து நின்றான்!



**- பூ.சுப்ரமணியன்,**
பள்ளிக்கரணை, சென்னை.



அள்ளி முடிக்கும் குழல்
அவளது அழகை கூட்டுமதை
சொல்லி முடிக்க முடியாது
சொற்களும் தான்இங்கேது

கள்ளி அவளும் தன்னிரு
காந்த விழிகளில் மெல்ல
உள்ளத்திலே ஊடுருவல்
உணராமல் இல்லை நானும்

முள்ளில் ரோஜாவாய் தானே
மோகத்தில் கோவம் மலரும்
பள்ளியறை பாடத்தில்அதுவும்
பனியின் குளிர்ச்சியாகபகரும்

தள்ளிவிட்டு தான்பிரியாள்
தாமரையிலை தண்ணீராக
புள்ளியாய் நின்றிருப்பாள்
பொனெழில் செழித்திருப்பாள்!

**- பஷத்மநாபன் நவநீத கிருஷ்ணன்**

மாநிலம் தாண்டவே அவ்வளவு
யோசிக்கிறேன்
கடல் தாண்டும் தைரியம்
எப்படி வருகிறது
வேறு மொழி தெரியாத
பறவைகளுக்கு.....

***

வகுப்பறைக்கு வெளியே
நிம்மதியாகத் தூங்கும் பூனைக்கு
யார் கற்றுக் கொடுப்பது
வாழ்க்கையைப் பற்றி....

வகுப்பறைக்குள் இருந்து
வாழ்க்கையைப் படித்த எனக்கு
யார் கற்றுக் கொடுப்பது
நிம்மதியாக தூங்குவதைப் பற்றி.....

***

விழியற்றவர்கள் அறிந்து கொள்கிறார்கள்
இலையுதிர் காலத்தை
காலடியில்
நொறுங்கும் சருகுகள்....

***



**கி.கவியரசன்**
செங்கம்



# நிம்மியின் தொகுப்புகள்

அந்நியப்படுதாமல் குறித்த தனது எழுத்துக்களில் முழு புரிதலையும் அளித்திருப்பது சிறப்பு என கூறமுடியும்.

மரபுவழி மனிதர்கள் காதலை ஒரு கெட்ட செயலாக மற்றும் சமூக தவறுகளுக்கு ஒன்றாக பார்ப்பதன் அறியாமைக்கு முற்றுப் புள்ளி வைப்பதாக அப்படியானவர்களுக்கு எதிரான ஒரு கருத்து நிலைபாட்டையும், உள்ளார்ந்தமாக இந்த கவிதைப் பிரதி சொல்ல முனைவதுடன் காதல் காதலாக பார்க்கப்படும் பட்சத்தில் அதன் அபத்தமற்ற நிலைப்பாட்டை பன்மையாக சுயமற்று பிரதியூடாக வெளிப்படுத்துகிறார் நிம்மி சிவா.

ஒரு பிரதியாளன் தன் பிரதியால் எத்தனை முன்னெடுப்புகளை சமூகம் சார்ந்து நகர்த்த முடியுமோ அத்தனை பணிகளையும் நிம்மியின் கவிதைப் பிரதிகள் நிகழ்த்துவதையும் தமிழ்க் கவிதை புலத்திற்கு நிம்மி போன்றவர்களது இயங்கு நிலை அதிகம் தேவை என்பதையும் நிம்மி சிவாவின் பிரதிகளில் உட்புற தளங்களில் பேசப்படும் அரசியலையும் இங்கு விவாதிக்கும் ஒரு நல்ல சூழல் வரவேண்டும் என மேற்கோள் காட்ட முடியும்.

என் வானிலே

கிழிந்துபோன டயரியின் மூன்றாம் பக்கம்

நிசியில் மிதக்கும் ஆதிச்சிறகு

**ஏ.நஸ்புள்ளாஹ்**



# நன்றி கடன்

மணிராம் கார்த்திக்

சுப்புலாபுரம் ,

இன்னும் ஒரு வாரத்தில் சுந்தரத்திற்கு திருமணம்.

சுந்தரம் சென்னையில் தனியார் IT அலுவலக வேலை. கை நிறைய சம்பளம். குடும்பத்தோடு சென்னையில் செட்டில் ஆகி விட்டான்.

திருமணதிற்காக தான் தன் சொந்த ஊர் மதுரை சுப்புலாபுரத்திர்க்கு குடும்பத்தோடு வந்து உள்ளான்.

தன் சொந்த அத்தை மகளை திருமணம் முடிக்க தான் குடும்பத்தோடு வந்துள்ளனர்.

பத்தாம் வகுப்பு வரை இங்கு தான் படித்தான். அதன் பிறகு தந்தையின் தொழிலுக்காக ஊரை விட்டு சென்னைக்கு சென்றனர்.

நீண்ட வருடதிற்க்கு பிறகு , இப்போது தான் ஊருக்கு வருகிறான் சுந்தரம்.

கார் ஊருக்குள் செல்லும் போது , தான் படித்த பள்ளியை பார்த்த சுந்தரத்திற்கு அதிர்ச்சி.

தான் படித்த சுப்புலாபுரம் அரசு பள்ளி மிக மோசமான நிலையில் இருந்தது. பள்ளிக்கூடம் இறுதி கட்டத்தை எட்டி இருந்தது. பள்ளி மாணவர்கள் வெளியில் அமரவைத்து பாடம் சொல்லி கொடுத்து கொண்டிருந்தனர்.

உடனே அங்கே இறங்கினான் சுந்தரம். குடும்பத்தினரை அனுப்பி வைத்து விட்டு பள்ளியை நோக்கி வந்தான்.

சுந்தரம் கண்களில் கண்ணீர் சொட்ட ஆரம்பித்தது.

தன்னுடைய பள்ளி நினைவுகள் கண் முன் கொண்டு வந்து நிறுத்தினான் சுந்தரம்.

‘தம்பி யார பாக்கணும்?’ என்று முதியவர் அவன் தோளை தட்டி கேட்டார்.

‘அய்யா, நான் வந்து…’ என்று அவரை பார்த்து பேச ஆரம்பிக்க, தன் தோழ் மீது கை வைத்தவர் கணக்கு வாத்தியார் நாராயணன்.

அவரை பார்த்ததும் மிகுந்த மகிழ்ச்சி சுந்தரத்திற்கு.

‘நாராயணன் சார், நான் தான் உங்க மக்கு சுந்தரம், 99 பேட்ச், என்னை மக்கு மக்கு சுந்தரம்ன்னு சொல்லுவீங்க. ஞாபகம் இருக்கா’ என்று ஆர்வமாக கேட்டான் சுந்தரம்.

‘கொஞ்சம் ஞாபகம் இருக்கு, சுந்தரம். என்னப்பா பள்ளிகூடத்தை இப்படி ஆச்சரியமாக பார்க்கிறாய்’ என்று நாரனயணன் வாத்தியார் கேட்டார்.

‘சார், பள்ளிக்கூடம் இப்படி மோசமான நிலைல இருக்கு, அரசாங்கம் எதுவும் நடவடிக்கை எடுக்கலையா?’ என்று விசாரித்தான் சுந்தரம்.



‘அரசாங்கம் பள்ளிகூடத்தில் யாரும் படிக்க ஆர்வம் காட்றது இல்ல. எல்லாரும் தனியார் பள்ளியில் படிக்க வைக்கிறாங்க, அதான் அரசாங்கம் மாணவர்கள் எண் ணிக்கை கம்மியா இருக் குன்னு சொல்லி இந்த வருசத்தோட பள்ளி கூடத்தை மூட சொல்லி இருக்கு. அதான் என்ன பண்றதுன்னு தெரியாம முழிச்சிட்டு இருக்கேன். மாணவர்கள் மட்டும் இல்ல ஆசிரியர்களும் தனியார் பள்ளி கூடத்தில் சேர்ந்துட்டாங்க. இப்போதைக்கு கொஞ் சம் பிள்ளைங்க தான் இருக்காங்க. அவர் களை வைத்து தான் பள்ளிக்கூடம் நடத் திட்டு இருக்கோம். அதுவும் வகுப்பறை சரி இல்லை. அதான் இப்படி பள்ளி கூட நடுவுல பந்தல் போட்டு உட்கார வைத்து பாடம் நடத்துறோம். அவ்வளவு தான் மூணு மாசத்தில் பள்ளிகூடத்தை முடிச்சிருவோம்’ என்று நாராயணன் வாத்தியார் கூறினார்.

‘பள்ளிக்கூடம் இந்த நிலைல இருந்தா யார் வந்து படிப்பாங்க நாராயணன் சார். பள்ளிகூடம் மாதிரியா இருக்கு. நாங்க படித்த போது எப்படி இருந்துச்சு. நவீன உலகத்திற்கு தகுந்த மாதிரி பள்ளிக்கூடமும் மாறுனா தான படிக்க வருவாங்க சார். அரசாங்க பள்ளியில படிச்சு பெரிய நிலைக்கு போனவங்க லட்ச கணக்குல இருக்காங்க.’ என்று சுந்தரம் கூறினான்.

‘ஆமா சுந்தரம், நான் அரசாங்க பள்ளி கூடத்தையோ , அரசாங்கத்தையோ குறை சொல்லவில்லை. அரசாங்க பள்ளிக்கு அரசு தான் நிதி உதவனும் என்பதிற்கு பதிலாக அதில் படித்த மாணவ, மாணவியர்கள் ஏதும் உதவி புரிந்தால் நல்லா இருக்குமே. பள்ளியில் படித்தவர்கள் தங்களால் முடிந்த உதவி செய்தால் நன்றாக இருக்கும். இந்த மாதிரியான செயல்கள் அரசுக்கு மிகுந்த உதவியாக இருக்கும். இந்த செயல் நல்ல உதாரணமாக அமையும்’ என்று நாரா யணன் வாத்தியார், சுந்தரத்திற்கு விளக்கம் அளித்தார்.

‘நிச்சயமாக, நாராயணன் சார். இது எனது நன்றி கடன். என்னை நல்ல மனித னாக மாற்றிய இந்த பள்ளியை நல்ல நிலைக்கு கொண்டு வருவேன், இல்லை நல்ல நிலைக்கு கொண்டு வருவோம்’ என்று தன்னுடன் படித்த நண்பர்களை வாட்ஸ் அப் மூலமாக தொடர்பு கொண்டான் சுந்தரம்.

‘நன்றி கடன் செய்வோமா!’ என்று நண்பர்களிடம் நாராயணன் வாத்தியார் கூறிய செய்தியை பரிமாறினான். செய்தி காட்டு தீ போல ஒருவர் தொடர்பில் இருந்து ஒருவராக பயணம் நீண்டு கொண்டே சென்றது.

இறுதியில் அனைவரும் தங்களால் இயன்ற உதவி செய்வதாக சொன்னார்கள். உதவி செய்ததோடு மட்டும் இல்லாமல் சுந்தரத்தின் திருமணதிற்கு வருகிறோம், அன்று அனைவரும் சந்திப்போம் என்றும், தங்களை நல்ல நிலைக்கு வளர்த்து விட்ட பள்ளிகூடத்தை நாங்கள் அனைவரும் நல்ல நிலைக்கு கொண்டு வருவோம் என்று கூறினார்கள் நண்பர்கள்.

நாராயணன் வாத்தியார் இதனை அவர் எதிர்பார்க்கவில்லை. மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். பள்ளிக்கூடம் மீண்டும் நல்ல நிலைமைக்கு வர போகிறது என்ற மகிழ் ச்சியில் நாராயணன் வாத்தியார்.

இந்த நன்றி கடன் அனைவருக்கும் உண்டு. நன்றி கடனை நம்மால் முயன்ற வரை செய்வோம். நமது பள்ளி நமது கடமை.

மாதா பிதா குரு தெய்வம்......

முற்றும்.



# முதலிரவு

.

இராயிரா  துணையை எண்ணி

இலாதுலா கனவில் வாழ்ந்தேன்

வராதரா கத்தைப் போல

வடாகரம் கட்டு தற்குக்

கராசல வீரம்  கொண்டக்

கதாகரன் புதிதாய் வந்தோர்

நராதிபன் போலே ஆண்டு

நடாத்திடு  வானா என்று

கனாக்களில் மிதக்கின் றேனே

கலால்அற ஆடி னேனே

வினாக்களில் விழிக்கின் றேனே

விடாதுளம் துடிக்கின்  றேனே

பனாட்டுகள் கசக்கின்  றேனே

பகாலமே வெடிக்கின் றேனே

தனாட்டியன் உருவை எண்ணித்

தவாக்கினி எரிக்கின் றேனே

பாலவன் குடித்த பின்புப்

பைங்கரம் பற்றி அந்தப்

பாலவன் நாக்க சக்கப்

பார்த்தொரு நகைப்பில் எந்தன்

பாலவன் சுவையைத் தேடி

பசியினைப் போக்கி அல்லின்

பாலவன் அணைப்பில் மூழ்கிப்

பகிர்ந்திடு வானா இல்லை

.

பட்டிடை சுற்றி வந்தால்

பார்த்ததும் அவன்கண் என்மேல்

பட்டிடை பற்று வானோ

பயந்துமே தூங்கிக் கைகள்

பட்டிடை விழித்துக் காதல்

படரவே  நெஞ்சில் மோகம்

பட்டிடை அகற்று வானோ

படுக்கையில் புரளு வானோ

என்னிடை ஆவல் எல்லாம்

இதழிடை முத்தத் தாலே

என்னிடை வளர்ந்துள் இன்னோர்

இனிப்பிடை சொத்தாய்  மாறி

என்னிடை மேலே துள்ளி

இமைத்திடை மழலை பேச

என்னிடை அவன்வந் தின்னோர்

இரவிடை கேட்க வேண்டும்

**ஏடி வரதராசன்**



# சமாளிப்புகள்

அசாதாரணங்களைக் கடந்து செல்வதற்கான
அழகிய ஆயுதமே சமாளிப்பு
வாழ்க்கைப் பக்கங்களில் முகவரி இல்லாமல் முகமன் கூறும்
பிரச்சினைகளுக்கெல்லாம் சமாளிப்புகளே ஒத்தடம் தருகின்றன

நிசப்தங்களுக்குள் உறங்கிக் கொண்டு
ஊனமாய் ஒதுங்கிக் கொள்ள நிழல் தேடும் நாட்களுக்கு
சுடும் வெய்யிலில் குளிர்ந்த நீராய் விடை சொல்கின்றது
சலனமற்ற சமாளிப்புகள்

சொல்லடிகளும் நிராகரிப்புகளும்
கூடவே தலையுடைத்து துவம்சம் செய்யும் நாட்களில் எல்லாம்
கண்கள் குனிந்து  தலை நரம்புகளோடு
போராட்டம் செய்யும் தருணங்களில்
எழுந்திரு என உற்சாகம் தருவதும் சமாளிப்புகள் தான்

கண்கள் சொட்டும் நீர்த்துளிகளின் அளவை அவ்வப்போது
கூட்டிக் குறைத்து அளந்து இயக்கிக் கொண்டிருக்கும்
ஆத்மார்த்தமான பணியைச் செய்து
கொள்வதும் இனிய சமாளிப்புகளே...

நினைவோடு உறவாடி வாழ்வோடு கலந்து
எதையும் கடந்து செல்ல வழிகாட்டும் நிறைவான சமாளிப்புகளின்
பிரதிபலனே இறுதியில் எம் மரணச் சடங்கில்
சங்கமிக்கும் அன்புள்ளங்களைச் சம்பாதித்து தருகின்றது...



**சேஹு மொஹம்மது பெனாஸிரா,**
முஸ்லிம் ஹல்மில்லாவ,
மதவாச்சி.

# ஊறித்ததும்பும் ஊருணி

என் துயில்
கலையாதிருக்க
இருளறையில் பொருள்
தேடும் உன்னன்பைத்தான்
நேசிக்கிறேன்

என் ஓய்வைக்
குலைக்காதிருக்க அரவமெழுப்பாமல்
அறைக்கதவு சாத்துமுன்
அக்கறையை ஆழமாய்
சுவாசிக்கிறேன்

என் சமையலை சமாதானப்படுத்த
சுமையாக நினையாமல்
நீ செய்யும்
சிறு உதவிகளையே
உருசித்துக்கிடக்கிறேன்

இன்று ஓய்வு கொள்ளென
விடுமுறை தருகின்ற
ஒவ்வொரு உபசரிப்பிலும்
உணர்வுகளில் ஊறித்ததும்பும்
ஊருணியால்
ஈரமாகிறேன்

என் புன்னகையில்
பெருமழை பொழிந்து
என் நலனின் பெருவிதானமாகிப்
படர்ந்து கொள்வதுமான
பரிசுத்த அன்பில்
ஆன்மா இளகிக் கரைந்து
நெகிழ்ந்து கிடக்கிறது



வெண்பனியின் மென்குளிராகுமுன்
தூய்மையில்
திளைத்துக் கொடுகி நிற்கிறது

பரிசுத்த நேசத்தைக்
கண்டடைந்தேன்
பளீர் வெண்மையின் முத்தென
ஆகி விடுகிறது ஜீவிதம்

பேரன்பு என்பது
பகட்டான வாழ்வை
பிறருக்குச் சொல்வதில் இல்லை...
சிறுசிறு புரிதலிலும்
சின்னஞ்சிறு ஒத்தாசைகளிலும்
உள்ளத்தில் புத்துணர்ச்சியைப்
பிறக்கச்செய்வதேயன்றி
வேறேதேனுமாக இருக்குமா?

**Dr ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர், இலங்கை

# எதிர்பார்ப்பு

**சசிகலா விஸ்வநாதன்**

காலையில் எழுந்ததுமே லேசான உடல் சூடும், கண்ணெரிச்சலும்; பொன்னாத்தாவிற்கு. கடுங் காப்பி வைத்துக் குடித்துவிட்டு அரிய நாச்சியார் கோவில் போய் கும்பிட்டு வந்தவள்; அப்படியே திண்ணையில் உட்கார்ந்து, கிறங்கி தூணில் சாய்ந்தாள்.

மடியில் அருமை பூனைக்குட்டி போல் ஒரு செல்பேசி. 'அப்பப்ப கரண்ட் ஏத்திக்கிடு, ஆத்தா! அப்பந்தான் நான் உன்னோடு பேச தோதா இருக்கும். இல்லேன்னா; ஆஃப் ஆயிடும்' என்று சொல்லிப் போன அம்மையப்பன் பேசுவான்; மாதம் ஒரு முறையோ, இரண்டு மாதத்திற்கு ஒரு முறையோ.வெட்டியா, கரண்ட் ஏத்திப்புட்டாதான் காலை கடுங் காப்பியே தொண்டைக் குழிக்குள் இறங்கும், பொன்னாத்தாளுக்கு.

போன அமாவாசைக்கு முந்தின அமாவாசை கழிந்து ஒரு தரம் பேசினான். 'விசயம் ஒண்ணுமில்ல,, ஆத்தா! நீ நல்லா இருக்கியான்னு கேட்டுக் கிடத்தான் பேசினேன்' என்றான். "நல்லாத்தாம்பா இருக்கேன்,' போனை வைச்சுட்டானா... எங்காதுக்குதான் கேக்கலியோ? தீபாவளிக்கு அவன் அப்பாருக்கு படையல் போட்டப்பக் கூட பேசலை.'வேலையாய் சென்னை வந்திருந்தானாம். குன்னக்குடி சம்பந்தி சாலாட்சி போய் பார்த்துட்டு வந்திருக்கா. சரிகை போட்ட பட்டு சேலை எடுத்து அவளிம் கொடுத்து விட்டுருக்கான் கட்டாமத்தான் கிடக்கு, ட்ரங்கு பெட்டியலே.. இளையான்குடி சூட்டுக்கு பட்டு சேலை கட்ட முடியமா? என் மன வேக்காட்டை பட்டு சேலை தணிக்குமா? எவ கிட்ட சொல்லி அழ?'

துபாயில் பொஞ்சாதி உமையாளோடும், பேரன் பூமியுடன் இருக்கிறவனுக்கு, ஆத்தாவுடன் பேச ஒண்ணுமா இல்லே? அவனுக்கே ஒண்ணுமில்லேன்னா; உமையாளுக்கு என்ன இருக்கும்? பேரனுக்கு முடி இறக்க வந்தபோது ஒரு வயசிலே பார்த்தது. இப்பம் அவன் நாலாப்பு படிக்கிறான்னு துபாய் போய் வந்த அவனோட வைரவன் கோயில் பெரிய அத்தை சொன்னா; போன வாரம். கேட்டுக் கிட்டேன். அம்பட்டுத்தான். 'அண்ணி! இந்தாரும்; உம்ம மகன் முளங்கால் வலிக்கு மருந்து கொடுத்து விட்டுருக்கான்' என்று,ரெண்டு டப்பா கொடுத்து விட்டு போனாள். நல்லபடியாய் அவளைப் பேசி அனுப்பின பிறகு பட்டா சாலையில் ஒரு பாட்டம் தனியே புலம்பி தீர்த்தேன். வேறு என்ன செய்ய சொல்றீக?

மாசா மாசம் பேங்கில் பணம் போட்டு விடறான். அதுல ஒரு குத்தமில்ல! மகராசி அதுக்கெல்லாம் ஒண்ணும் சொல்லறது இல்லையோ? தெரிஞ்சுதான் அனுப்பறானோ, தெரியாமத்தானோ? அது சரி! அதை தெரிஞ்சுகிட்டு இங்கனெ, இளையான் குடியிலே நான் என்ன செய்யப் போறேன்? இங்கிட்டு என்ன செலவு இருக்கு, எனக்கு? பெரிய நோட்டுக்கு ரெண்டு நோட்டு வரை சேர்ந்துருச்சாம். அதை எடுத்து என்னவோ டெபாசிட் பண்ணணுமாம். அப்பந்தான் கூட்டின வட்டி வருமாம். கூடுதல் வட்டி வந்து என்ன செய்ய? உண்டான பணத்துக்கே இங்கே செலவில்லை. பணத்தை திங்கவா முடியும்?'

மாணிக்கம் பய வந்தாக்க, பாங்க் புஸ்தகத்தில் வரவு வெச்சு, போனுக்கு பணம் கட்டிறச் சொல்லணும். செவ்வந்தி



யோட ஒரு நடை பழனி போய் விட்டு வரணும்‘

இப்படியே யோசனையில் இருந்த பொன்னாத்தாவுக்கு கண் செருகியது. அம்மையப்பனின்ஐயா, மணவாளஞ்செட்டி யார், ஊனும் உருவுமாக வந்து போனார். ‘ஆத்தாடி! மூணு மாமாங்க காலம் ஆச்சுதே; அவர் போய் சேர்ந்து? இப்பமும் மேனி குறுகாம, வளம் மாறாம, நெறம் கருக்காம, கண்ணு மினுங்க வந்திருக்காரு!‘ ‘பொன்னா! ஒரு செம்புல நீர் மோர் கொண்டா‘ சப்தம் கேட்டு எழுந்த பொன்னாத்தா தலை சுற்றி கீழே விழப்போக; மணவாளஞ்செட்டி, சூதானமாகத் தாங்கிக் கொண்டார். ‘என்னோடு வந்து விடு. இளையாங்குடியிலே இனி உனக்கு என்ன வேலை? அவனை வளர்த்து ஆளாக்கியாச்சு. சோத்துக்கும் உப்புக்கும் கேடாய், ‘பூமிக்கும் பாரமாய் இங்கிட்டு ஏன் தவிச்சுக் கிடக்கே?‘ என்றார் மணவாளஞ்செட்டி. ‘ராசரே! உம்ம ஒரு சொல்லுக்குதான், ஐயா, நான் காத்துக் கிடக்கேன். வந்தேன். வாருமையா, நாம் போவோம்‘ என்று பொன்னாத்தா கிளம்ப, அவள் சேலை மடியிலிருந்த செல்பேசி கீழே விழ, ‘அம்மையப்பன்‘ என்ற பெயர் ஒளிர்ந்தது.

அவன்தான் கூப்பிடுகிறானோ? வேறு எவருக்குத்தெரியும், இந்த எண்? திரும்பத் திரும்ப அந்த எண் ஒளிர்ந்து, ஒருவழியாய் அடங்கி அமைதியுற்றது, அந்த அலைபேசி, பொன்னாத்தாளைப்போல.

வேறு யார் பெயரும் அந்த செல்பேசி யில் இல்லை என்பது எவருக்குத் தெரியும்? அவனுக்கும், தன் ஐயா வந்து போனது இப்பம் வரை தெரியாது. மாணிக்கம் வந்தால் அவனுக்கு சொல்வானாய் இருக்கும்.




பயம் எதனால் வருகிறது. அச்சம் என்பதன் அர்த்தமே, நடைமுறையில் நாம் பார்க்கின்ற அல்லது நமக்கு தவறாக சொல்லப்பட்ட ஒன்றின் பதட்டமான தாக்கம் தான் பயமாக வருகிறது. பயபக்தி என்று சொல்லும்போது நல்லதாகவும், பயம் என்று சொல்லும் போது கலக்கமாகவும், இருப்பதை உணர்கிறோம். அகத்தின் உணர்வே சமயத்தில் பயமாகவும் தெரிகிறது. 'மாடு ஒன்று வேகமாக எதிரில் வரும்போது ஒருவனுக்கு பயமாகவும், சல்லிக்கட்டு விளையாட்டில் மாட்டோடு நேருக்கு நேர் மோதுபவனுக்கு விளையாட்டாகவும் இருக்கிறது. இப்போது புரியும். வளர்ந்த விதமே பயத்தைக் காட்டுகிறது'. மனக்கலக்கம் என்றும் சொல்லப்படும் பயம் எதாவது ஆபத்து வந்துவிடுமோ என்ற எச்சரிக்கையின் தொடர்ச்சியாகவும் கொள்ளலாம். இது மனதை ஆட்டு வித்தாலும் உணர்த்தும் எச்சரிக்கையால் நாம் எப்படி நடந்து கொண்டால் நல்லது என்பதையும் காட்டுகிறது. 'எதற்கும் பயப்படாமல் யாராலும் இருக்க முடியாது'. கணக்குப் பார்த்தால் சிலருக்கு கூடுதலாகவும் சிலருக்கு குறைவாகவும் பயமிருக்கிறது.

பயம் வரும்போது நம்பிக்கை கேள்வியாகிறது. பயந்தவனுக்கு படபடப்பு அதிகமாகிறது. இரத்த ஓட்டம் சீரின்றி மாறுதலுக்கு உள்ளாகிறது. இல்லாத ஒன்றை இருப்பதாக நினைப்பதும், இயலாத ஒன்றினை எதிர்கொள்ளும் போதும் பயம் நம்மை ஆட்கொள்கிறது. பயத்திற்கு மருந்து, உண்மை நிலை கண்டறியப்படுவது மட்டும் தான். எதையோ தவறாக கற்பனை செய்து கொண்டு அதை நினைத்து அறிவை மூடி வைத்து விட்டு அடுத்தவன் பேச்சால் அலைக்கழிக்கப் படுவது பயத்தின் தடமாகிறது. கவலை, மனக்கலக்கம், திகில், பீதி, அதித அச்சம், என்று பயம் பல வாறு இருந்தாலும் பயத்தின் விடை ஆரோக்கிய கேடுதான். வளரும்போதே நமக்குள் உருவாக்கப்பட்ட ஒருவகை பிம்பமாய் பயம் நமக்குள் கூடு கட்டி நிற்கிறது. சில பயங்கள் உண்மை நிலை தெரிந்ததும் மனம் விட்டு அகலும். சில பயங்கள் நீண்ட காலத்திற்கு நிலை கொண்டு வாழ்க்கையோடு விளையாடவும் செய்யும்.

பாம்பை கையில் பிடித்து விளையாடுபவனும் இருக்கிறான். பல்லிக்கும் கரப்பான் பூச்சிக்கு பயப்படுபவனும் இருக்கிறான். பயத்தைக் களைய வேண்டியது அவசியம். சில சச்சரவுகள் சில

தர்க்கங்கள் சண்டைகள் பயத்தில் முடிவடைகின்றன. பயம் என்பது வெளி உணர்வுதான் என்றாலும் மனத்துள்ளே நிலைக்கும்போது நாம் நாமாக என்றும் இருப்பதில்லை. அவநம்பிக்கை நமக்குள் இருக்கும் வரை பயமும் இருக்கும். இது நேர்மறையானதல்ல. எதிர்மறைக்கு எப்போதும் விடை கொடுக்க வேண்டும்.

சாதாரண நிலையிலிருந்து கொஞ்சம் மாறுபடும்போது பயம் பற்றிக்கொள்கிறது. ஆற்றில் குளிக்கும் போது உள்ள மகிழ்வு அடித்து வரும் வெள்ளம் முன் இருப்பதில்லை பிறந்தவர் அனைவருமே ஒருநாள் முடிய வேண்டியவர்களே என்று தெரிந்தாலும் இறப்பைக் கண்டு நம் எல்லோருக்கும் பயம் இருக்கத் தான் செய்கிறது.

பயமில்லாதவனைப் பார்க்க வழியில்லை என்றாலும் பயம் என்ற ஒரு உணர்வு அவசியமே என்று அறி வியலாளர்கள் உரைக்கின்றனர். பயமே இல்லாத ஒருவனைப் பற்றிச் சொல்லும் போது பயமிருக்க வேண்டும் நல்லது கெட்டதை உணர்வதற்கு பயம் வேண்டும் என்று சொல்கிறார்கள். பயத்துக்கே பயம் காட்டுபவர்கள் இருந்தாலும் அவர்களும் எதாவது ஒரு சந்தர்ப்பத்தில் எதாவது ஒன்றுக்கு பயப்படுவதும் உண்மைதான். ஓடியே ஒளிந்தாலும், செயல் முடக்கமே ஆனாலும், நடுக்கம் என்பது மனதுள் பயமாகிறது. மூளையை ஒரு கணினி யாக கொண்டோமென்றால் அதற்குள்ளே நாம் ஏற்றி வைத்துள்ள சில அதிர்வுகள் பயத்தை வெளிப்படுத்துகிறது.

வழக்கத்திற்கு மாறான ஒன்றை நாம் கையாளும்போது அல்லது பயணப்படும் போது பயம் வருகிறது. அதே நேரம் அதேமாதிரியான நிலையொன்றில் ஒருவர் பயணப்பட்டு அனுபவத்தைச் சொல்லும் போது பயம் இல்லாமல் போகிறது. முதலாவதாக எதையும் அணுகுகின்ற நேரத்தில் விடையொன்று தெரியாத நிலையில் மட்டுமே பயம் தோழமை ஆகிறது. பயத்தைப் பற்றி சொல்லும் போது 'மரணத்தைக் கண்டு பயப்படாதவர்கள்கூட சமயத்தில் நேர்முகத் தேர்வு சமயத்தில் பயப் படுவதாக சொல்லப்படுகிறது'. தன்னை யாரும் ஆதிக்கம் செலுத்துகிறார்களோ என்ற நிலையும், தன்னை கண்காணிக்கிறார்கள் என்ற நிலையும் மரணத்தை விட பெரிய பயமாக தெரிய வருகிறது. பயத்தை வளரவிட்டால், பயம் நம்மை செயல் இழக்கச் செய்துவிடும். பயத்தை எதிர் கொள்ளும் மனத்துணிவு நமக்கு வரவேண்டும். அதுவே பயத்தையும் போக்கி அனுபவத்தால் மற்றவரின் பயத்தையும் போக்கும்

பயத்துக்கு மருந்து மனத்தெளிவு தான் என்ற போதிலும் சத்தான காய்கறிகள் பழங்கள் என ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளும்போது பயம் பற்றிய படபடப்பை மூளையில் உள்ள நரம்புகள் குறைப்பதாக அறிய முடிகிறது. விளையாட்டாகச் சொல்லும் சில விசயங்கள் சிறு பருவத்திலேயே மூளைக்குள் உட்கார்ந்து எழ மறுத்து விடுவதை உணர வேண்டும். குழந்தை களை பய முறுத்தி வளர்க்கக் கூடாது.

வீரம் செறிந்த கதைகளை குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். 'இன்றையவிதையே நாளைய விருட்சம் என்பதை உணரவேண்டும்'. எதை விதைக்கிறோமோ அதுவே பயனாகிறது. 'பயத்தை விதைத்தால் பயத் தைத்தான் அறுவடை செய்ய வேண்டும்'. கண்டதையும் நினைத்து கவலைப்படக்கூடாது. எதுவந்தாலும் பார்த்துக் கொள்ளலாம் என்பவன் சிக்கலில் இருந்தும் வெளி வருகின்றான். எல்லாவற்றுக்கும் பயப்படுபவன் சிக்கலை உருவாக்கிக் கொள்கின்றான்.

சமுதாயப்பார்வை பரந்து விரிந்ததாக

இருக்க வேண்டும். தானே பெரியவன் மற்றவர்களெல்லாம் எனக்கிணை யில்லை என்ற ஆணவத்தோடு பயமுறுத்தும் போது, பயந்தே வாழ்பவன் ஒரு கட்டத்தில் பொங்கியெழுந்து விட்டால், நாடு சுடு காடாக மாறிவிடும். மனிதனைத் தவிர எந்த இனமும் தன் இனத்தை அடக்கியாள விரும்புவ தில்லை. மனித மிருகம் மனிதம் கொள்வ தில்லை. இனத்தால் மொழியால் வேறுபட்டாலும் அனைவரும் மனிதர் களே. தற்பெருமையும், தானே பெரியவன் என்ற நிலைப்பாடும் பயத்தை வரவைக்கும் என்றாலும், கத்தி யெடுத்தவன் கத்தியா லேயே அழிவான் என்பதை மறக்கக் கூடாது.

படிக்கும்போது பயம் அறியாதவனுக்கு தேர்வு முடிவு வரும் நாள் பயமாகிறது. அரட்டை அடித்து அனைவரையும் விமர் சிப்பவனும் பெரிய மேடைகளில் ஏறிபேசுவதற்கு பயம் கொள்கிறான். மருத்துவ மனை சென்று மருத்துவரைப் பார்க்கும் வரை இல்லாத பயம் அவர் எழுதிக் கொடுத்து நடந்த பரிசோதனை முடிவை நினைத்து பயம் கொள்கிறான். இடி இடித்தால் பயம். தொடர்மழை வெள்ளம் என்றால் பயம். மின்சாரம் இல்லாத காலத்தில் பயம் இல்லை. இரண்டு நிமிடம் இப்போது மின்சாரம் போனால் பயம் வருகிறது. ஆனால் இந்த பயங்கள் எல்லாமும் நமது நடவடிக்கை யாலே சரி செய்ய முடியும். அதற்கு மனதில் நம்பிக்கை வேண்டும்.

தியானம் மற்றும் நேர்மறையான சிந்த னைகள் பயத்தை வர விடுவதில்லை. எதையும் எதிர்கொள்ளும் நிலைக்கு மனதைக் கொண்டு வர வேண்டும்.'பயம் பயமாக இருக்கும் வரையில் பயமில்லை. பயம் மனதில் தங்கி மனநோயானால் சங்கடங்கள் அதிகம்'. இந்த நிலை வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். திட்டமிட்ட வாழ்க்கை யில் பயம் மிகக் குறைவு. திட்டமிடாமல் வரவுக்கு மேல் செலவு செய்து பின் கடன் வாங்கினால் கடனை எப்படிக் கட்டுவது என்ற பயம் வரும். பணியிடத்தில் மாட்டிக் கொள் வோம் என்ற பயம் தவறான செய்கையின் போது வரும்.

பணி நேர்காணலுக்கு செல்லும் போது அங்கு நேர்காணல் நடத்துபவர் பெண் ணாக இருந்தால் ஆண்களுக்கு பதட்டம் வரும். ஆங்கிலம் அறிந்திருந்தும் சரளமாக ஆங்கிலத்தில் பேச முடியாதவனுக்கு ஒருவிதமான தயக்கம் பயமாகத் தோன் றும். இவையெல்லாமும் சரி செய்யக் கூடிய ஒன்று என்று நம்பிக்கை கொள்ள வேண்டும். 'உனக்கு நேர் காணல் நடத்தி யவரும் ஆரம்பத்தில் உன்னை மாதிரிதான் இருந்திருப்பார் என்ற எண்ணம் வர வேண்டும்'

பயம் நோயில்லை. நோயாக ஆ(க்)கி விடக் கூடாது. பாதையே இல்லாத இடத் திலும் நீ நடந்தால் பாதையை உரு வாக்க முடியும் என உணர வேண்டும். எதுவுமே முதலில் எதிர்மறையாகத் தான் தெரியும். நம்மால் முடியும் என்ற நம்பிக்கை உனக்கிருந்தால் தாழ்வு மனப்பான்மை வராது. பயமே இருந்தாலும் காட்டிக் கொள்ளக்கூடாது. பரந்து விரிந்த கணினி யுகத்தில் வாழ்கின்றோம். வலை தளத்துள் நுழைந்தால் எதற்கும் பொருள் உண்டு. இன்னும் நிலவைக் காட்டி சோறு ஊட்டக் கூடாது. நிலவில் நாம் குடியேறும் நாள் வந்தாச்சு. அந்த காலத்தில் எதையும் பயம் காட்டியே உனக்கு சொல்லிக் கொடுத்ததன் விளைவு மரபு வழி நோய் போல பதட்டம் வருகிறது. யாரையும் சந்தேகப் படக்கூடாது. நம்பிக்கை அவ இல்லையென்றாலும் தடயத்தை உரு வாக்கு. கூடாது. தடயமே பயணிக்க பின் வர பலருண்டு. நம்பிக்கையே உன் வீரம். நம்பி கை கொடு நாளும் உயர்வு உண்டு.

# தன்முனைக் கவிச்சாரல்



பூப்பெய்தல் தொடங்கி ஒவ்வொரு 28 நாட்களுக்கும் ஒருமுறை உதிரப் போக்கு ஏற்படுகிறது. பரவலாக உதிரப் போக்கு என்று சொல்லப்பட்டாலும் அந்நிகழ்வில் வெளியேறுவது உதிரம் மட்டுமல்லாமல்; கருக்கொள்ளத் தயாராக இருந்து காலாவதியான சினை முட்டைகளும்தாம்.

பாலுறவின்போது வெளிப்படத் தயாராக இருக்கும் சினை முட்டைகள் வெளிப்படுவதற்கான வாய்ப்புக் கிடைக்காத போது, பருவம் முடிந்த 28-ம் நாளில் கலைந்து வெளியேறிவிடுகின்றன. அவ்வாறு வெளியேறும்போது, அடுத்த பருவத்தில் கருக்கொள்ள நேர்ந்தால் அதற்காகத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக உதிரத்தையும் உடல் தூய்மைப் படுத்திக்கொள்கிறது.

உதிரப்போக்கானது வெறும் மாதாந்திர நிகழ்வு மட்டுமல்ல. அது சுரப்புகளுடனும் கருக் கொள்வதோடும் தொடர்புடையது என்ற ஒருங்கிணைந்த உடலியல் பார்வை இன்றைய தலைமுறைக்கு இல்லை. விசேஷ நாட்களில், வெளியூர் செல்லும் நாட்களில், தேர்வுக் காலத்தில் உதிரப்போக்கு ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக உடலை இயந்திரமாகப் பாவித்து அதைத் தடுப்பதற்கான மாத்திரைகளை எடுத்துக் கொள்கின்றனர்.

வேறு சிலர், தள்ளிப் போவதால் ஏதும் பிரச்சினை ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தில் உதிரப் போக்கை ஏற்படுத்த மாத்திரை எடுக்கின்றனர். உதிரப் போக்கைத் தடுக்கவும், ஏற்படுத்தவும் மேற்கொள்ளும் முயற்சிகள் பிற்காலத்தில் குழந்தைப் பேற்றுச் சிக்கலை உருவாக்கும் என்பதோடு உடனடி எதிர் விளைவுகளையும் ஏற்படுத்தும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

**இடியும் மின்னலும்**
**ஒவ்வொரு செல்லிலும்**
**அந்த 3 நாட்கள்**
**வேண்டாம் கடவுளுக்கும்**

Thunder and lightning
In each cell
Those 3 days
Not even for God




**ராஜ்[6]**
**ஆரோக்கியசாமி**
பிக்சாண்டார் கோவில்

# கவிதைகள்

1

## நல்வாழ்வின் ஒளிச்சுடர்

பழும்பெருமை புற்றீசல்களுக்குள் புதைந்திடாமல்
புறமுதுகில் அழுக்கெடுக்கும் சாக்காட்டில் சிதைந்திடாமல்
நமக்கான சட்டங்களில் நாமே மீறிடாமல்
திறமைக்குக் குறுக்கே பணம் நீட்டும்
தேசத்துரோகத்தில் மாட்டிடாமல்
வேரறுக்கும் வன்முறைக்குள்
இனத்தால் மனத்தால் நுழைந்திடாமல்
ஆசைக்குள் நஞ்சு வைக்கும் ஆபாசத்தில் கலந்திடாமல்
மூடத்தனத்தின் முட்டுக்குள்
முன்னேற்றத்தைத் தொலைத்திடாமல்
நமக்கு நாமே நல்லவனெனும் நம்பிக்கையில் வாழ்ந்தால்
நாடெங்கும் பறந்திடும் நல்வாழ்வின் ஒளிச்சுடர்.

2

## சிந்தனை செய் மனமே

நித்தமும் நிகழ்ந்திடும் வாழ்வின் நகர்தலில்
மொத்தமும் விளைந்திடும் பண்பின் உயர்வில்
யுத்தமில்லா எண்ணங்கள் நிறைந்திட
எத்திசையாயினும் இழந்திடாது செய்திடுக சிந்தனை.
சத்தியம் தர்மம் சமத்துவம் என்றே
சாற்றிடும் பேச்சினில் உலகை நிறைத்திட
எத்தலைமையாயினும் விடாது செய்க சிந்தனை.





3

# கதை கேட்ட காதுகள்

பந்தங்களின் பங்களிப்பில் பாசமும் நேசமும்
பரிமாறிய காலத்தில் நேரமும் நிம்மதியும்
நிரம்பியிருந்து மனிதத்தை வளர்த்தியது.
அன்பாலும் அறத்தாலும் வளரும் பிள்ளைக்கு
அனுதினமும் அனுபவத்தை கதையாக்கி
நெறிமுறைகளை நினைவில் வைத்த
தாத்தாவும் பாட்டியும்
கதைகளில் வாழ்கின்றனர்.
இல்லத்தில் இருந்தாலும் உலகத்தின் ஓவியத்தை
எல்லோர்க்கும் காட்டிவிட்ட கதைக்குள்ளே
விட்டுக்கொடுத்தலும் பொறுத்துக்கொள்ளுதலும்
மன்னிப்பும் மறப்பும் என
கற்றுக்கொண்டவை ஏராளம்.
எதிர்வீடும் அடுத்தவீடும்
எதிரியாகிப்போன இன்றைப்போலல்லாமல்
எப்போதும் எமைத் தாங்கி
தம்பிள்ளையெனத் தாலாட்டியதும்
பேரன்பின் வழிதானே.
ஆத்திச்சூடியும் மூதுரையும்
ஆன்றதொரு திருக்குறளும்
கேட்கின்ற செவிக்குள்ளே
நாள்தோறும் விழுகின்ற கதையெல்லாம்
நாணயத்தை வளர்த்தெடுக்க
நம்பிக்கையாய் வாழ்வை அணுக
தம்மைப் போல பிறரை எண்ண
எவ்வுயிரும் இன்புற்றிருக்கவென
காட்டியவை ஏராளம்.

உறவுமுறை மாறாமல்
ஒன்றிணைந்த கூட்டுக்குடித்தனத்தில்
சகிப்புத்தன்மை உயர்ந்தோங்கி
சந்ததியை வளர்த்தெடுக்க
எவரிடத்தும் முளைத்திடாது
வன்முறையும் பழியெடுத்தலும்.
கதை கேட்ட காதுகளின் சரித்திரத்தில்
கடைசிவரை ஒலித்துக் கிடக்கின்றன
கருணையின் மணியோசையும்
அன்பின் மௌனப்பேச்சும்.

4

# நீங்கா நினைவுகள்

நகரும் வாழ்வின் நங்கூரமென நிலைத்திடும்
புலரும் பொழுதின் திசையெங்கும் அலைய வைத்திடும்
சந்திப்பின் வெளியிலும் நெஞ்சுக்குள் உழன்றிடும்
தருணம் எதுவாயினும் தன்னைப் புதுப்பித்திடும்
சஞ்சல ஊஞ்சலில் இன்பத்தை நினைவூட்டி
கொஞ்சலின் குதூகலத்தில் இளைப்பாற்றிடும்
நீங்கா நினைவுகள் நிறைந்திடும் மனதில்
சங்கமிக்கின்றன சாந்தமும் அன்பும்.

5

# உழைப்பின் உன்னதம்

மண்ணை முட்டி வானத்தை எட்டும்
விதையின் முயற்சியில் விளைகிறது உழைப்பின் வெற்றி
ஓட்டை உடைத்து உலகைப் பார்க்கும்
குஞ்சின் சிறகில் விரிகிறது வானம்





பாறாங்கல்லைத் தொடும்
உளியின் ஓயாத முட்டலில்
பார்ப்போருக்கு அருளும்
கடவுளும் புன்னகைக்கலாம்.
தரிசாய்க் கிடந்திடும் நிலத்தின் மேனியில்
வியர்வையைச் சிந்தும் உழவனின்
உழைப்பில் வாழத் துவங்குகிறது
உலகத்தின் சுழற்சி.
ஆளையும் அழகாக்கி மானத்தையும்
மாண்பையும் மெருகேற்ற
ஆடையின் நீட்சியில்
தன்னையே கரைத்திடும்
நெசவாளியின் துடிப்பில்
பளபளக்கிறது மனிதனின் நடை.
எட்டு வைக்காத காலடிக்குள்
சிலந்திகளும் வலை பின்ன
தொட்டு விடாத தூரமென துவண்டிடும்
மனதுக்குள் சோர்வு நுழைந்து விட
உழைப்பின் மேன்மையை
உணரா உள்ளத்தில்
ஓய்வே ஊஞ்சலாட
நகராத வாழ்வின் தடைக்குள்
தம்மையே இழந்துவிடும்
இழிநிலையை மாற்றிக் காட்டும்
முயற்சியின் கரத்தில்
நம்பிக்கையை விதைத்திடின்
உழைப்பெனும் உன்னதம்
உயர்த்திடும் வானமென வாழ்வை.

**இளையவன் சிவா**



# திணறல்



சில துளிகளாக
கைக்குள் அடக்கி விடலாம்
மழையை
கனமழையை...

சில துணுக்குகளாக
கைக்குள் அடக்கி விடலாம்
மண்ணை
நிலப்பரப்பை...

சிறு அளவாக
வாய்க்குள் அடக்கி விடலாம்
காற்றை
சூறாவளியை...

ஓர் அடியில்
கையால் அணைத்து விடலாம்
தீபத்தை
காட்டுத் தீயை...

சிறு உருவாக
புகைப்படத்தில் சிக்க வைக்கலாம்
ஆகாயத்தை
நிஜவானத்தை...
அடங்க வேண்டிய
வேளைகளில்
அடக்கமாகவும்
திமிற வேண்டிய
வேளைகளில்
திமிறியும் வெளிப்படுகின்றன
ஐம்பூதங்கள்

ஐம்புலன்களை
அடக்க வேண்டிய
நேரத்தில் அடக்காமலும்
அடங்கக் கூடாத நேரத்தில்
அடக்கியும் வைப்பதால்

மலர்ந்து உதிரும்
மலர் போன்ற வாழ்வில்
திணறத்தான் செய்கிறது
தினமும் மனித மனம்.

**ஐ.தர்மசிங்**
நாகர்கோவில்

# பொய்யுரைத்தல் காதலின் கலையோ

வர்ணனை இல்லா  காதல் காவியம்
இலக்கியத்தில் உண்டோ
பொய்யுரையின்றி காதலில்
வெற்றியும் கிட்டுமோ

புகழ்ச்சிக்கு மயங்காத காதலியும்
இவ்வுலகில் இல்லையே
உள்ளத்தின் உணர்வுகளில்
உவமையும் கலந்திடுமே

வசியப்படுத்தும் வார்த்தை
ஜாலங்கள் பொய்யுரையிலே
தன்வயப்படுத்திட
கற்பனையில் உதிக்கும் கவிதைகளே

உள்ளம் உவந்து
களிப்பாக்கிடும் மந்திரமே
உள்ளதை மாற்றி
உள்ளத்தை தொடுவரே

இனிமையான பேச்சினில்
இதயத்தை கவர்ந்திடுவரே
மகிழ்ச்சியில் ஆழ்த்தி
மனதை கொள்ளையிடுவரே

பொய்யுரைத்தல் காதலின் கலையோ
ஆமென்று உரைத்திடுவேன்
மறுப்பதற்கு ஏதுமில்லை
எண்ணங்கள் கலந்திட
வண்ணமாய் மாறிடுமே



ஈர்ப்பாகும் நெஞ்சமதில்
காதலும் பூத்திடுமே
சொல்லின்றி சொந்தமாகாது
உவமையின்றி உறவுமாகாது

ஆசையின் வடிவமே
மயக்கிடும் உருவமே
இதயங்கள் இணைந்திட
இவையாவும் தேவையே

ஊடலுக்கும் கூடலுக்கும்
அவசியமான ஒன்றே
சங்கமத்தில் இன்பங்கள்
இனிதாகும் வாழ்விலே

மெய்யான அன்பில்
பொய்யுரை யாவும்
பனித்துளியாய் கரைந்திடுமே

**பெ.வெங்கட லட்சுமி காந்தன்**
விருதுநகர்

# என்னை விமர்சிப்பது எளிது

என்னை பற்றியும் என்
குணத்தைப் பற்றியும் விமர்சிப்பது
மிகவும் எளிதானது தான்..
நான் பயணித்த அதே பாதையில்
நீங்கள் பயணம் செய்யாத வரையில்..!
சில இழப்புக்கள் வலியை
தருகின்றது.. சில இழப்புகள்
வலிமையை தருகின்றது.
வலிகள் என்றால் எப்படி இருக்கும்
என்பதை உணர்த்தி விட்டு தான்..
இன்பம் என்பது எப்படி இருக்கும்
என்பதை உணர்த்துகின்றது
இந்த வாழ்க்கை..!
மாறி விட்டோம் என்பதை
விட பல வலிகள் நம்மை
மாற்றி விட்டது என்பதே
உண்மை.
என் மனம் வலிகளை
சுமக்கின்றது.. என் புத்தி
குழப்பங்களை சுமக்கின்றது..
இதற்கு இடையில் தான்
நடக்கிறது என் வாழ்க்கை..!
கவலையை மறக்க அழுதேன்
அழுகையை மறைக்க
மௌனமானேன் மௌனத்தை
மறைக்க தனிமையானேன்.
இழந்தவை என்பது பலருக்கு
வார்த்தை சிலருக்கு வாழ்க்கை..!
எத்தனையோ வலிகள்
என்னிடம் உண்டு..
எண்ணிக் கொண்டிருந்தால்
மீள முடியாது..
சொல்லிக் கொண்டே இருந்தால்
வாழ முடியாது.
நகர்ந்து கொண்டே இருக்கின்றேன்..
ஒவ்வொருவரிடம் இருந்தும்
ஒரு பாடத்தை
கற்றுக்கொண்டு என்
வாழ்க்கை பாதையில்..!
ஒரு முறை அழுது விடு..
சோகம் குறையும்.
ஒருமுறை கத்தி விடு..
கோபம் குறையும்.
ஒருமுறை சிரித்து விடு..
பாரம் குறையும்.
ஒருமுறை விலகி விடு..
நேசம் புரியும்.
என் வலி சிலருக்கு சிரிப்பை
தரலாம்.. ஆனால்
என் சிரிப்பு யாருக்கும்
வலியைத் தராது.
வலியோடு வாழப் பழகி கொண்ட
பிறகு தான் வாழ்க்கை
என்றால் என்னெவென்று
புரிய தொடங்குகின்றது..!
சில நேரங்களில் அழுவதற்கு
கண்ணீர் இல்லை.. ஆனால்
காரணங்கள் அதிகம்
இருக்கிறது.

**பாத்திமா நளீஃபா**

# ஆசைத்தீர பேசி அன்பாக வாழ்வோம்!

அரும்பு மீசைக்கார மச்சானே மயக்குறியே
ஆசையாச்சு ஒம்மேல மனசும் கேட்குதே
மகிழம்பூ வாசம்ஒம்மேல வீசிடுதே
ஒன்னோட குணம் எனக்கு பிடிச்சிருக்கு

சிரிச்சிப் பேசியே சின்னவளைக் கவர்ந்தாயே
காளை அடக்கி வீரம் காட்டினமச்சானே
வட்டக்கல்தூக்கி சாதனை செய்தாயே
தக்காளி சிவப்பழகியாய் நானிருக்கிறேனே

அரவணைத்து அணைச்சிடத்தான் துடிக்கிறியே
கன்னிப்பொண்ணு நெஞ்சுக்குள்ளநீயிருக்கிறாய்
ஒம்மனசு புரியுதய்யா பரிசம் போடவருவாயா
தங்கம் வைரம் வெள்ளிபாத்திரமும் தருவாயா

நல்லநாளும் பார்க்கலாமே ஊரைஅழைக்கலாமே
கெட்டிமேளம் கொட்ட கல்யாணமும்செய்துக்கலாம்
ஊருசனம் சொந்தபந்தம்நட்பும் திரட்டிடலாம்
ஆசதீரப் பேசித்தான்அன்பாகவே வாழ்ந்திடலாம்....



கவிஞர் இரா.சீ.பாலகுமார் .M.A .,



# பேத்தியெனும் மந்திரம்

பசிப் போக்கும் புன்னகையே! பவளவாய் மல்லிகையே!

உள்ளத்தை கிரங்கச் செய்யும் உறங்காத மந்திரமே!
இல்லத்தில் சுழல்கின்ற எழிலான பம்பரமே!

விழியால் மடல் எழுதும் அதிகாலை விடிவெள்ளி!
உறவால் ஆளுகிறாள் ஆயிரமாய் கதை சொல்லி!

முதுமைக்கு ஆறுதலாய் பதுமையுன் நடிப்புகள்!
உன்னாலே தொடருதடி எங்கள் உயிர்துடிப்புகள்!

உடல்வலிக்கு ஒத்தடங்கள் தருகின்ற ஆரணங்கு!
பாசத்தால் எனக்கிங்கு போடுகிறாள் பூவிலங்கு!

கவலைகளை களைகின்ற சந்தோச சமுத்திரமே!
அறிவார்ந்த சொல்லாலே படைக்கின்றாய் சரித்திரமே!

பேரன்புப் பெட்டகமே கவிதைகளின் புத்தகமே!
பேத்தியெனும் வடிவில் வந்த பொன்மணியே ரத்தினமே!

லீ.லியாகத்அலி.



# அ.த.பன்னீர் செல்வம்
# நேர்காணல்



**நக்கீரர் வழியில் பட்டுக்கோட்டை (நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே)**

பட்டுக்கோட்டை நகரில் புகழ் பூத்த தமிழ்க்குடும்பம் மீ. தங்கவேலனார் அவர்கள் குடும்பம் அந்தக் குடும்பத்தில் மூத்த தலைமகன் திரு அ.த. பன்னீர்செல்வம் அவர்கள் பட்டுக்கோட்டை நகரில் நக்கீரர் என்று பெயர் பெற்றவர் ஆய்வுச் சுடர் என்ற பெருமைக்குரியவர்..

தலைமுறை தலைமுறையாக தமிழ் வளர்க்கும் பெருமிதம் குடும்பத்திற்கு உண்டு..

கவி முகில் தங்க அன்பு வல்லிஅவர்களின் மூத்த சகோதரர். தென்றல் கவி தமிழ்ச்சிட்டு சுந்தரபாண்டியன் அவர்களுடைய தாய் மாமன் என்பதும் குறிப்பிடத்தக்கது

செங்கிஸ்கான் என்ற சிறந்த வரலாற்று நூலை மொழிபெயர்த்து வெளியிட்டு இருக்கிறார் இன்னும் மார்க்கோ போலோ மன்னன்

சாலமனுடைய சுரங்கங்கள் ஆகிய நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு அச்சுக்குக் காத்திருக்கின்றன அத்தகைய பெருமைக்குரிய அறிஞர் பெருமகனின் நேர்காணலை வெளியிடுவதில் தமிழ்நெஞ்சம் மின்னிதழ் மகிழ்ச்சி அடைகிறது.

நேர்கண்டவர்
ஆய்வறிஞர் பாவேந்தன் மாத்தூர்

■ **வணக்கம். பல்லாற்றானும் மூத்த உங்களுடன் பேசுவதில் எங்களுக்கு உவப்பே. முதலில் உங்களைப்பற்றி அறிமுகப் படுத்திக்கொள்ளுங்களேன்.**

வணக்கம். உங்களோடு உரையாடுவதற்கு மகிழ்ச்சி. நானும் எல்லாரையும் போல எளிய குடும்பத்தில் பிறந்தவன்தான். என் தந்தையார் பெரும் புலவர் மீ. தங்கவேலனார், மாவட்டக்கழக உயர் நிலைப்பள்ளித் தமிழாசிரியர். தாயார் தில்லையம்மாள் முறையான கல்வி பயின்றவர் இல்லை. ஆனால் இயற்கை அறிவு மிக்கவர். குடும்பத்தலைவி. எங்கள் எல்லார்க்கும் தலைவி. என் தந்தையார்க்குத் தன் மக்களைப் பட்டந்தாங்கிகளாக ஆக்கி விட வேண்டும் என்ற குறிக்கோள் இருந்தது.. அப்பொழுது (1961) இளங்கலை பட்டப்படிப்புக்குத் தமிழ்வழிக்

கல்வி வழக்கத்துக்கு வந்தது. நான் தமிழ் வழியில்தான் பட்டக்கல்வி பயில வேண்டும் என்று கோவை அரசினர் கலைக் கல்லூரியில் சேர்த்தார்கள். இளங்கலை புவியியல் படித்தேன். தேர்வுமுடிவுகள் வந்தவுடனேயே ஆசிரியர் பணியும் கூடவே வந்தது. பட்டந்தாங்கி ஆசிரியராகப் பணியேற்றேன். பிறகு தமிழில் முதுகலை பயின்று மேல்நிலை வகுப்புகளுக்குத் தமிழ்ப் பாடம் பயிற்றினேன். காலப் போக்கில் மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியராயும் பணியாற்றி ஓய்வு பெற்றேன் ஆக 13 ஆண்டுக்காலம் ஆங்கிலமும் வரலாறும் புவியியலும் கற்பித்து வந்த நான் 18 ஆண்டுகள் மேல்நிலை வகுப்புகளுக்குத் தமிழ் ஆசிரியராகவும் 18 ஆண்டுகள் பணிபுரிந்து, 5 ஆண்டுகள் தலைமை ஆசிரியராகவும் இருந்து பணி ஓய்வுபெற்று இருக்கிறேன். பணி ஓய்வுக்குப்பின் மனத்தின் ஓரெழுச்சியினால் அரசுப்பணியாளர் தேர்வாணையத் தேர்வுகளுக்கும் இளை யோரைப் பயிற்றினேன். இதிலும் ஒரு 12 ஆண்டுகள் கழிந்தன. இக்காலத்தில் நானும் புதிய கோணத்தில் கற்றேன் என்றும் சொல்லாம்.



■ **அப்பயிற்சியினால் பயன்பெற்றோர் எவ்வளவுபேர் இருக்கலாம்.**

மாநில அரசுப்பணி பலவற்றிலும் ஏறத் தாழ 250 பேர் இருக்கிறார்கள். நடுவண் அரசுப்பணியிலும் (ஆட்சிப்பணி) யிலும் இருக்கிறார்கள்.

■ **உங்களுடைய பரந்துபட்ட கல்வி யறிவு வியக்கவைக்கிறது. இதில் தமிழ்க்குடும்ப வழிவழிப் பெற்ற பட்டறிவினையும் நீங்களாகத் தேடிச் சேர்த்ததையும் பற்றித் தெரிந்து கொள்ளலாமா?**

எங்கள் தந்தையார் ஆழமான தமிழறிவு உடையவர். எங்கள்தாயார் உலகத்தோடு ஒட்ட ஒழுகும் பண்பு மிக்கவர். தம்பி தங்கையரைத் தொட்டிலில் போட்டுத் தூங்கவைக்கும்போது கம்பராமாயணம் தேவாரம் போன்றவற்றிலிருந்து பாடல் களைத் தந்தையார் பாடுவார்கள். தமிழா சிரியர் ராகம் என்று ஒன்று உண்டு அந்த ராகத்தில்தான் பாடுவார்கள்! தானாக நான் நூல்களைப் படிக்கத் தெரிந்து கொண்ட நாள் தொடங்கி திருக்குறள் மனப் பாடம் செய்வதற்கு தந்தையார் பயிற்சி கொடுத்தார்கள். அந்தக் காலத் திலேயே திருக்குறள் முழுமையும் எனக்கு மனப்பாடம். அறத்துப்பால் முழுமையும் பரிமேலழகர் உரையுடன் தெரியும். அத னால் இலக்கியங்களைச் சுவைக்கும் மனமும் பெற்றேன். தந்தையாரிடம் தனிமாணவராகத் தமிழ் படிக்க வீட் டுக்குப் பலர் வருவர். அவர்களுக்குத் தமிழ் இலக்கணம் பயிற்றும்போது நானும் கவனிப்பேன். அதனால் தமிழ் இலக்கணத்தில் தனி ஈடுபாடு உண்டு. குறிப்பாகத் தொல்காப்பியம் எனக்குப் பிடிக்கும். தொல்காப்பியப் பற்று ஆய்வு உணர்வை ஊட்டியதால் எல்லா வற்றையும் ஆய்ந்து பார்க்கும் மனப் பான்மைதான் எனக்குள் விழுந்த விதை.



தொல்காப்பியருடைய எளிமை நேர்மை ஆகியவை என்னைக்கவர்ந்தவை.

■ **தொல்காப்பிய நேர்மை என்றால்?**

தன்னூலில் தனக்கு முன்னால் இலக்கணங்கண்டவர்களின் கூற்று இவை. தான் செய்தவை இவை என்று தனித் தனியாக்க் கூறும் நேர்மைதான்.! நூலைத் தொடங்கும்போதே எழுத்து எனப்படுப என்றுதான் அவர் தொடங்குகிறார். தமக்கு முன்னோடியான இலக்கணிகள் சொன்ன தமிழ் எழுத்துகள் முப்பஃது. அவர்கள் சார்ந்துவரும் எழுத்துகளைக் கணக்கில் கொள்ளவில்லை நான் சார்பெழுத்துகள் மூன்றை எழுத்தாகக் கொள்கிறேன் என்பன போன்று கூறும் நேர்மைதான். பிற் காலத்தில் நன்னூலார் சார்பெழுத்துகள் பத்து என்று கூறுகிறார். இது அவருக்குத் தொல்காப்பியர் கொடுத்த உரிமை

■ **பல்துறையிலும் உங்கள் நாட்டமும் வெற்றியும் எப்படி வாய்த்தன.**

கல்லூரிக் காலத்தில் எங்கள் பேராசிரியர்கள் எனக்குத் தேடிச் சேர்க்கும் கலையைக் கற்றுத் தந்தார்கள். தேடுதல் நேர்மையோடு நிறையச் சேர்த்திருக்கிறேன். இன்னும் தேடல் முந்த பாடில்லை. கல்வி கரையில என்ற தொடரின் முழுமையான பொருள் இந்த 81 ஆம் அகவையில் எனக்கு நன்றாகத் தெரிகிறது.

■ **உங்கள் மேடைத் தமிழ்பற்றி....**

எங்கள் காலத்தில் மேடைகளில் அடுக்கு மொழித் தமிழ் முழங்கியது. சங்க இலக்கியங்கள் அச்சில் வெளிப்பட்ட காலம். அதனால் அவை பரவலாக்கம் பெறவேண்டிய சூழல் எழுந்தது. பேச்சு மேடைகள் இடந்தந்தன. பொதுமக்களில் பெரும்பாலானவர்கள் இலக்கியங்களைச் சுவைக்கும் மனமும் திறமும் பெற்றனர். பின்னர் கவியரங்கங்கள் புகழ்பெற்றன.

கவியரங்கங்களில் எனக்கு அவ்வளவான ஈடுபாடில்லை. அங்குக் கவிதைகளை எழுதிப்படிப்பார்கள். அதுதான் சரியான முறையுங்கூட. ஆனால் எழுதியவற்றை மட்டுந்தான் படிக்கமுடியும் அவ்வப்போது தோன்றும் புதிய சிந்தனைகளுக்கு அங்கு இடமில்லை. எனக்கு ஏதேனும் ஒன்றைப் பற்றிச் சொல்லும்போதே புதிய எண்ணங்கள் தோன்றும் ஆகையால் மேடையில் எனக்கு அப்படியொன்றும் பெரிய வெற்றி ஏதுமில்லை.

■ **இன்றைய மேடைகளைப் பற்றிச் சொல்லுங்கள்.**

நிறைய மக்கள் இலக்கிய நிகழ்ச்சிகளுக்குக் கூடினார்கள். அதே போல நிறையச் செய்திகளும் பரவின. இன்றைக்கு மக்களுக்குப் பொழுது போக்கு வழிகள் மலிந்துவிட்டன. எனவே கருத் துரைத்து மக்களை நெறிப்படுத்தி வந்த மேடைகள் நகைச்சுவை மன்றங்களாக மாறி மக்களைக் கவரவேண்டியநிலைக்கு ஆளாயின. இப்போது நகைச்சுவை மட்டுமே கோலோச்சுகின்றன.



■ **இளையோர்க்கு இலக்கணம் பற்றிச் சொல்வீர்களா?**

என் போக்கில் நிறைய மாணவர்க்கு இலக்கணம் பயிற்றியிருக்கிறேன். ஆயினும் காலத்தால் எழுகின்ற புதிய புதிய இலக்கணத் தேவைகளை, மொழின் போக்கினைத் தமிழறிஞர்கள் எளிதில் ஏற்பதில்லை. அதனால் இலக்கணக் கோட்பாடுகளைத் தேவைக்கேற்ப அவ்வப்போது சொல்வதுண்டு.

■ **சுவைத்தலைத் தாண்டி தமிழ் இலக்கியம் மக்களுக்கு என்ன உணர்த்துகிறது..**

இலக்கியம் என்பது ஒருவகைக் கலை. மனத்தோடு தொடர்புடையது. அது மிகத் தெளிவாக மக்களுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்திருக்கிறது. தீதும் நன்றும் பிறர்தரவாரா என்பது வழிகாட்டல் இல்லையா. குலங்கோத்திரங்கொண்டு என் செய்வீர் என்று கேட்கவில்லையா. அரசு வரைமுறையற்று வலிந்து விதிக்கும் வரிமுறைகள் (கோலொடு நின்றான் இரவு) வேலோடு நின்றான் இடு என்று அச்சுறுத்துவது போன்றது என்று எடுத்துக் காட்ட வில்லையா இளையோர்க்கு அறஞ்செய விரும்பு என்று எடுத்துரைத்தது. இலக்கியங்கள் தாம். ஆனால் தற்காலத்தில் "இதுதான் இலக்கியம்" இவர் சொன்னது தான் வழிமுறை என்று தங்களை ஒருவட்டத்துகுள் சுருக்கிக் கொள்வது







முறையில்லை. இதனால் சாறு குறைந்து சக்கைகள்தாம் கிடைக்கும்.

■ **இளைஞர்க்கு நீங்கள்சொல்லும் செய்தியென்ன?**

எல்லாவற்றையும் சுவைக்கக் கற்றுக் கொள்ளுங்கள். நிறையப் படியுங்கள். வரியிடை இருக்கும் செய்திகளைப் புரிந்து கொள்ளுங்கள். சிந்தியுங்கள். செயல்படுங்கள். வழி சொல்பவன் கூட வர வேண்டும் என்று விரும்பாதீர்கள். நீங்களாகச் சென்று அடைய முயலுங்கள். சான்றாகப் புகழ்பெற்ற ஒரு தொடரைச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கதவு பாதி மூடியிருக்கிறது என்றால் பாதி திறந்திருக்கிறது என்றும் புரிந்து கொள்ளவேண்டும் என் கிறேன். தனி மனிதப் புகழ்ச்சி செய்வதை விட்டொழியுங்கள் என்பதே என் வழி காட்டுதல்

■ **அறிஞர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே உள்ள இடைவெளி கூடிக்கொண்டே போகிறதா?**

மக்களிடையேதான் அறிஞர்களும் இருக்கிறார்கள். நாம்தாம் அவர்களைப் புரிந்து கொள்ளவேண்டும். ஆனால் சிலரை மட்டும் அளவுக்கு அதிகமாக நாம் புகழ்ந்து கொண் டிருக்கிறோம். அவ்வளவு தான். பொருந்தாப் புகழச்சி என்பது வீழ்ச்சியைத்தான் தரும்.

■ **நாங்கள் இளைஞர்களுக்குக் காட்டும் வழி என்ன.**

இன்றைய இளைஞர்கள் நிறையக் கற்க வேண்டும். குறிப்பறியவேண்டும். தன்னம்பிக்கை மட்டுந்தான் வெற்றிக்கு வழி. நம் உழைப்புதான் நம்முடையது என்று உணரவேண்டும். வெற்றி உங்களைத்தேடி வரும். அரசு எல்லார்க்கும் கல்வி எட்டுவதற்குரிய வழிவகை செய்ய வேண்டும் தடைகள் வந்தால் அவற்றைத் தாண்டிச்செல்லும் வழி முறைகளை வகுக்கவேண்டும். நல்வாழ்த்துகள்.

உங்களோடு உரையாடியதில் மிக்க மகிழ்ச்சி நன்றி சொல்லி விடை பெற்றுக் கொள்கிறோம்.



# தாய்மொழி நாள் தன்முனை இயையுக்கவிதைகள்

தாலாட்டுப் பாடியும்,
தூங்கவில்லை குழந்தை
தாய்மொழி தெரியாமல்,
தாலாட்டும் மடந்தை

பிறமொழி அறிவால்,
தனித்திறன் பெறுவதா?
தன்மொழி அறியாமல்,
இனத்தை அழிப்பதா?

சிந்தனையின் திறவுகோல்,
எல்லோர்க்கும் தாய்மொழி
சிந்திந்தே பயில்வோம்,
சிறப்பிக்கும் நம்மொழி



உணவில் நஞ்சை
ஊட்டி வளர்க்காதே!
உன்மொழி தன்னுள்,
பிறமொழி கலவாதே

பொருளில் கலப்படம்,
உயிர்க்கொல்லி யாமே!
மொழியில் கலப்படம்,
இனக்கொல்லி யாமே!

தாயை மதிப்போம்,
தன்மொழி அறிவோம்
தாய்மொழி பயின்றே,
சிந்தனை வளர்ப்போம்

**திருமதி. இரா.இராஜாமணி**
ஈரோடு

# துளிப்பாக்கள்

1. நடவு காலம்
வீட்டு முற்றங்களில்
தவளை சப்தம்

2. வானம் பார்க்கும் பரிசல்
விளையாட்டுகளால் நிறைகிறது
நீரற்ற ஆறு

3. காற்றின் கருணை
குளத்தில் அலைகள்
கரை சேர்கிறது பூ

4. திறக்கும் பாடநூல்கள்
குடிசையில் ஒளியேற்றுகிறது
லாந்தர் விளக்கு

5. குடிசையில் ஓட்டை
சிக்கித் தவிக்கிறது
ஒற்றை நட்சத்திரம்

6. மணலில் மீன் ஓவியம்
தாவி வந்து தழுவுகிறது
கரையேறி அலை

**ஐ.தர்மசிங்**
நாகர்கோவில்

# சிறகுகள் சிறைபடுவதில்லை

தொடர்...

## 1.

## அம்மா எங்கே?



மாட்டு வண்டியில் பயணம் செய்த அனுபவம் உங்களுக்கு இருக்கா?

எனக்கு உண்டுங்க!

அப்போ எனக்கு இரண்டரை வயது இருக்கும் அம்மாவின் மடியில் படுத்து இருக்கிறேன். வண்டியின் சக்கரம் உருள்வதற்கு ஏற்ப எனது தலையாடுகிறது.

'அம்மா எங்கே போகிறோம் அம்மா' 'மருத்துவச்சி வீட்டுக்கு, நீ உள்ளே வரக்கூடாது. வெளியிலே இரு! அம்மா போயிட்டு வந்துவிடுகிறேன். அங்கே கசப்பு மருந்து குடுப்பாங்க

அதனால நீ வராதே!'

'வண்டியோட்டி தங்கைய்யன் கூட இரு.

நான் போயிட்டு வந்துவிடுகிறேன்'. சொல்லி விட்டு சென்ற அம்மா வரவேயில்லை!!

அது தாழ்வான நுழைவாயில் கொண்ட ஒரு ஓட்டு வீடு

வாயிலில் திரைச்சீலை தொங்கியது. பழைய சேலைத் துணியில் தைத்தது.

மாட்டு வண்டியில் அமர்ந்திருந்தேன். அம்மா வரவில்லை

யாரோ ஒரு அம்மா திரைச்சீலை ஒதுக்கி' நீ பிள்ளையைக் கூட்டிக்கிட்டுப் போ அவங்க பாட்டிக்கிட்ட விட்டுவிடு'

'அவுங்க காலையில் வருவாங்க' என்றாள்.

தங்கையன் மாட்டுவண்டி திருப்பி 'ஹை ஹை' என்றான்

நான் பாட்டியிடம் 'அம்மா எப்ப வருவாங்க' நூறு முறை கேட்டிருப்பேன்.' நீ சமத்தா சாப்பிடு'

'அம்மா வந்திடுவாங்க'

சாதம் பிசைந்து பாலூற்றி வாழைப் பழம் சீனிப் போட்டு பிசைந்து ஊட்டினார். அதுதான் எனது இரவு உணவு.

சாப்பிட்டேன் உறங்கினேன். அம்மா வரவேயில்லை....

உறக்கத்தில் கனவு...

எனது அம்மா கயல் வரவேயில்லை...

கருமை பூசிய வானத்தில் ஜகசோதியாய் நட்சத்திரம். என்னை மேலே இழுக்கிறது...

மேலே எழும்பி மேலே மேலேப் போகிறேன்....

வானத்தில் ஒட்டிக்கொள்கிறேன்...

பயமாக இருக்கிறது.

மீண்டும் விழுந்துவிடுவேனோ என்ற பயம்.

பயத்தில் அடிவயிறு பிசைய எனது படுக்கை சிறுநீரில் நனைகிறது.

கயல் எனது அம்மா வரவேயில்லை...

# 2.

# நான்...

காலையில் முழித்தேன்..
ஒரு அசாதாரண அமைதி...
இன்னும் முகம் கழுவவில்லை
எதுவும் அருந்தவும் தரப்படவில்லை



நானும் எனது அண்ணனும், அக்கா மூவரையும் தங்கையன் எங்கள் மாட்டு வண்டி யோட்டி வண்டியில் ஏற்றி அழைத்துப்போய் எங்கள் பெரியப்பாவின் மாமியார் வீட்டில் விடுகிறான்.

எங்களுக்கு ஒரே சந்தோசம்..
அங்கு நிறையக் குழந்தைகள்..
உண்ணவும், குடிக்கவும் தருகிறார்கள்.

அங்குள்ள ஒரு பாட்டியின் மடியில் அமர்ந்தேன்.. பாட்டி அம்மா வேண்டும் என்றேன்.

கண்கலங்கிய அவர்கள் எனது அம்மா கயல் சிறு வயதைப் பற்றி சொல்கிறார்கள்....

அவர்கள் சொன்னது என்மனதில் பதிந்து இன்று உங்களுக்கு காட்சியாகிறது...

# 3.

# கயல்

அங்கே பிரமாண்ட பந்தல் அலங்காரம். எங்கும் ஒளி வெள்ளம், பட்டாடை பெண்கள், நகைகள் பூண்டு சொலித்துக் கொண்டிருந்தார்கள்.

வாங்கள் நம் கதாநயகியைப் பார்ப்போம். அது அந்த சிறுப்பெண்தான்.

எதையோ மும்முரமாகத் தேடிக் கொண் டிருந்தாள். அது ஒரு இறகு!. பஞ்ச வர்ணக் கிளியுடனானதாக இருக்க வேண்டும். பறந்துவிட்டது பிடிக்க நினைக்கையில் பறந்துப் போனது....

வாழ்க்கையும் அப்படித்தாங்க வாழ்க் கையின் வர்ண சாலங்களில்

சில நேரம் நம்மை தொலைத்து விடுகிறோம். பின்னர் தேடுகிறோம். தேடல் சில நேரங்களில் சுகமானது.

நம் கதாநாயகியின் பெயர் கயல்.

பட்டுப்பாவாடையை தூக்கிக் கொண்டு நடப்பதில் ஒரு ஒயில். இந்த செல்ல முயலின் வயது நான்கு!

நாளை விடிந்தால் கல்யாணம் ,

எதிர்த்த வீட்டு அத்தை மகன்கள் சனா, ஆனந்திற்கு.

அவளுக்கு ஏக ஆனந்தம், தோழிகள், விளையாட்டு என்று தான்!!

நாதஸ்வர இசை களைக்கட்டியது...

மாலை மயங்க மயிலாட்டம், ஒயிலாட்டம், பொய்கால் குதிரையாட் டம், ஆரம்பம். இரவில் விடிய விடிய கதா கலாச்சேபம் .

ஒயிலாட்டம் என்பது, ஒரே நிறத் துணியைத் தலையில் கட்டிக் கொண்டு, கையில் ஒரே நிறத்திலான துண்டு ஒன்றை வைத்து இசைக்கேற்ப வீசி ஆடும் அழகான குழு ஆட்டம். அழகு, அலங்காரம், சாயல், ஒய்யாரம் எனப் பல பொருள் தாங்கி நிற்கும் ஒயில் என்ற வார்த்தையே, இவ் ஆட்டத்தின் பெயராகியுள்ளது. இது முற்றிலும் ஆண்கள் சார்ந்த கலை.

சிறகை விரித்தால் மயிலாட்டம். சேர்ந்து குதித்து ஆடினால் ஒயிலாட்டம்.

இப்போதெல்லாம் இந்த கலை ஞர்களைக் காண்பது அரிதாக இருக்கிறது.

தெருவில் இருமருங்கும் பெரிய லாந்தர் விளக்குகளை தூக்கிக் கொண்டு ஒரு இருபது பேர் வரிசையாக நின்றனர்.

அந்த விளக்கு நீலநிறத்தில் ஒளிர்ந்தது. மிகவும் உஸ்ணமாக இருந்தது.

அப்பா வந்தார் கையில் ஒரு லட்டுயைக் கொடுத்து தூக்கிக் கொண்டார்.

‘அப்பா’ என்றாள் ‘என்னடா’ என்றார்.

‘எவ்வளவு நேரம் இப்படி நிற்பார்கள்?‘ என்றாள்.

‘விடியும் வரை‘

‘பாவம் இல்லையாப்பா‘

‘கால் வலிக்காதா‘ என்றாள்.

‘என்ன செய்ய, சிறு வயதில் படிப்பு வரவில்லை என்றால் தீவட்டி தூக்கத்தான் லாயக்கு என்பார்கள்‘

‘அப்போ தீவட்டி இப்போ பெட்ரேமாஸ் ‘

‘இந்த விளக்கில் மண்ணெண்ணெய் அல்லது பேரபின்னூற்றி காற்று அடித்து நீலவெளிச்சம் வெப்பமாக ஒளிர செய்வார்கள்‘

‘கண்ணா அவரவர்கள் திறமைக்கேற்ற வேலை ‘

மயிலாட்ட அழகில் மயங்கிப் போய் பார்த்துக் கொண்டிருந்த கயல் உறங்கிப் போனாள்....



# உன் உள்ளம் அன்பினால் அடிக்கடி ஏமாற்றம் அடைகிறதா...???



உன் அன்பை புரிந்துகொள்ளாமல்
அலட்சியம் செய்கிறார்களா...??
நீ அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தும்
அவர்கள் உனக்கு முக்கியத்துவம்
கொடுக்கவில்லையா...???

உயிர் பிரியும் வரை கூடவே
இருப்பேனென்று
பொய் வாக்குறுதி கொடுத்துவிட்டு
காணாமல் போகிறார்களா ...???

அவர்களெல்லாம் தன் தேவைக்காக
மாத்திரம் உன்னிடம் வேடம் நிறைந்த
அன்புடன் உறவுகொண்டவர்கள்...!!!

தன் தேவை முடிந்ததும் போய்
வருகிறேனென்று
கூட உன்னிடம் கூறாமல்
சென்றுவிடுவார்கள்.
நீ உண்மையாயிரு,
உன் மனதை தூய்மையாக வைத்திரு....!!!
எவருக்கும் துரோகம் செய்யாதே...!!
அவரவர் செய்ததை அனுபவித்தே தீருவர்.
உன் அன்பு மலையளவு இருந்தாலும்,
பொக்கிஷமாக கருதும் உள்ளத்திடம்
உனதன்பு செல்லாத வரை,
குப்பை தான்.

மரத்திற்கு களைப்பார வந்த பறவைகள்
தன் களைப்பு தீர்ந்த பின் வேறு மரத்தை
தேடி சென்றுவிடுவது வழக்கம் தான்.

எந்தவொரு எதிர்பார்ப்புமில்லாமல்
நிழல் கொடுக்கும் மரங்கள்,
களைப்பார எங்கிருந்தோ வந்த பறவைகள்
தன்னிடம் நிரந்தரமாக கூடு கட்டி
வாழுமென்று உறுதியாய் நம்புவது தான்
முட்டாள் தனம்.
பறவைகளை பிடித்துண்ணும் நச்சு
மரங்கள் சிரித்துக்கொள்கிறது....

அம்ஹர் அப்துல்லாஹி



# இந்த காரிருள் நிலைப்பதில்லை..!!

மெழுகின் ஒளியாய் சில உறவுகள்
உனக்காய் திரி கொண்டு ஒளிதர
காத்திருக்கின்றது..!!
கண்ணீர் துடைத்து
விழித்திரை கரைத்து
மனம் கொண்டு பார்த்திடு..!!

ஏமாற்றம் படிப்பினையே..!!
மாயை விரைவில் மறைந்துவிடும்..
மனமும் அதிலே மறைந்து விட்டால்
மண்ணில் மனிதம் தழைக்காது..!!
உலகம் உனக்கானது..!!

உறவுகள் புதியது
உன்னை அழைத்து
பாசம் கொண்டு முத்தமிட
கை நீட்டி காத்திருக்கின்றது ..!!

இழப்புகள் வாழ்க்கையின் இறுதியல்ல..!!
இந்த உலகம் விசித்திரமானது..!!
இன்முகம் கொண்டு எழுந்து வந்திடு ...!!

வாழ நினைபவர்க்கு
மிக அழகிய வழி ஒன்றை
வடிவமைத்து
வைத்திருக்கின்றது வாழ்க்கை....

பாத்திமா நளீஃபா



கவிதை வடிக்க மறந்து
மயங்கிக்கிடந்தது
காற்று

- தமிழ்ராணி

# மதியாடிய பெரும் ஆழி

1.
புனல்பொங்கிடும் புதுவாழ்வது
முறையால்வழி புகுந்தால்வரும்
தணல்மேவிடும் உணர்வால்நனி
தமிழால்இனி விழிப்பூத்திடும்
கனவோங்கிடும் கவிபாடிடும்
கதைபேசிடும் உறவாடுமே
மனமோங்கிடும் மகிழ்ந்தாடிடும்
மதியோடிவள் சுகம்காணவே

2.
நதியாகிட நலம்காணவே
நகைபூத்திட வருமாமொழி?
விதியோவென சதியாகவே
விளையாடியே வினையாகுமா?
மதியாடியப் பெருமாழியாய்
மனம்சோர்ந்திட அனலாகுமோ?
கதியேயெனக் களமாடிய
கவியோயினி கரைசேருமோ?

3.
விதியோயிது நிலையாகிட
விதை போடவும் வதமாகுதே
பதிலோடுநீ கதைகூறவும்
பழியாகிடும் பதம்யாவையும்
சதியோயிதாம் எனபார்த்திடச்
சரிதானென தலையாட்டுமே
மதியாவுமே மறைந்தாடுது
கரைந்தேகுது மனவானிலே



**தென்றல்கவி**

# ஹைக்கூ...

## பேச்சற்றபொழுது

வயலை விற்ற இரவு
பறவைகளின் குரல்கள்
வேறாய் ஒலித்தன.

இதில் ட்விஸ்ட் இருக்கிறது என்று விளக்கம் சொல்வர். இதன் சாராம்சம் வேறு. இதில் மனதின் பாடல் புரிபடுகிறது. சோகம், இழப்பு, உடைமை அதனால் வாழ்தல் முறையில் மாற்றம் எல்லாமே வருகிறது. ஹைக்கூவிற்கு அகராதிகள் இல்லை. இந்த அனுபவம் மகத்தானது.

ஜப்பான் போன்ற நாடுகளில் கொண்டாட்டத்தை வாழ்க்கை முறையாக ஏற்றனர். சநோயு தேநீர் விருந்து 'நோ 'நாடகம் 'மீரூ சாக்கே' செர்ரிப் பூ பூப்பதற்குக்கொண்டாட்டம் என்று நாட்களை அதி உன்னதாமான பொழுதுகளாக்கினர் 'இகபானா' மலர் அலங்காரம் என்று ஆராதிக்கும் பழக்கம் இருந்தது. இப்படியான ரசனை மிக்க வாழ்வு. தற்கொலை கூட அங்கமே. ஹரஹரி திடீர் எனக் கத்தியால் தன்னை வகிர்ந்து கொள்ளுதல். மாய்த்துக் கொள்ளுதல், ஆடை மாற்றத்திற்கும் ஒரு குதூகல விழா. ஆடை மாற்றக் கொண்டாட்டம்

எனக்கோரு காதலனும் இல்லை.
ஆனாலும் மகிழ்ச்சி
ஆடை மாற்றம்.

எப்படியான ரசனை? அதை அப்படியே சொற்களில் வடிப்பது. உலகிற்குத் தம் அனுபவத்தைக் கடத்துவது. உக்கிரமான நெருப்புக்கிடையே குளிர்ச்சி தேடுவது, இதைத் தியானம் என்றனர்

இருட்டிவிட்டது நண்பர்களே
என் செம்மறியாட்டைக் காணோம்
விடிந்தால் திருவிழா.

கரையில் நெருப்பு
பயமின்றி ஊடே பயணம்
குளத்து மீன்.

உயர்ந்த பாறை
ஓய்வெடுக்க முடியவில்லை
திரும்பும் கடலலைகள்.

கொட்டும் அருவி
பாறையில் துவைக்கப்படும்
பௌர்ணமி நிலவு.

வானத்தில் நாற்று நட-
கால்களைக் கவ்விப் பிடிக்கும்
சேற்றுவயல்.
(வஃபி)

மூன்று வரிமூன்று வரி என்று ஜபம், செய்து கொண்டிருக்கலாகாது. நம்மால் முடிந்தது மூன்றுவரிதான் என்று ஒரு சித்திரம் படிந்துவிட்டது. மூன்றுவரிஎன்ற கணக்கீட்டை ஓரமாக வைத்து விடுங்கள். மூன்றுவரி 17 அசைகள் மட்டுமே ஹைக்கூ

*என்று புகட்டப்பட்டதை அகற்றுவது முக்கியம். ஜென் பற்றிய புரிதல் இன்றேல் ஹைக்கூ வரையவே முடியாது. அப்புறம் இதுவரை ஹைக்கூ என்று எதையோ எழுதிவிட்டோம். இப்போது அவற்றை எப்படி மறுப்பது என்ற மனோபாவம் கூடாது. மாறுதலை, அல்லது தன்னை மறுப்பது குற்றமன்று. இது வளர்ச்சியின் ஒரு கட்டம் என்று ஏற்கவேண்டும்.*

*எல்லா மனிதர்களும் அழகானவர்களே. இருளில் நின்றவர் அழகற்றவர் என்ற கருத்தே இல்லை. நமது சுயமான முகம் முக்கியம். சிக்கலே இல்லை. ஜென் மன நிலையாளன் பாஷாண்டியல்ல. பிழைகள் குற்றமன்று. ஹைக்கூவில் திறந்த உரையாடல் வேண்டும். நாம் இணைந்து வளர்த்தெடுக்க வேண்டயதில் பிரச்சனை ஏது?*

இறந்த சாமந்திப்பூ
எனினும் அதில் எதுவோ
மிச்சமிருக்கிறது இன்னும்.

இந்தப் பட்டாம்பூச்சி
எதையோ மெல்லும் சப்தம்
அவ்வளவு மௌனம்?

*க்யோஷி என்ற ஜென் ஞானியின் ஹைக்கூ முக்கியமானது. பிரக்ஞையுள்ள ஹைக்கூ என்று வருணிக்கலாம். வாழ்க்கையை உன்னிப்பாக அவதானிக்கும் ஆற்றல் மிக்க கவிஞர். பிரபஞ்ச ரகசியம் இன்னதென்று உணர்ந்தவர். தும்பியொன்று பாறையின் மீது நண்பகல் கனவுகள் என்பதுண்டு. இது தியாயம் தான். பிரபஞ்சத்துடன் இரண்டறக் கலக்க வேண்டும். அனுபவதத்தின் சுகந்தம் என்று பேசும் ஜென்.*

காற்று வீசுகிறது
இறந்தவர் ஆன்மாவின்
வருகை தெரிகிறது. (க்யோஜி)

கடவுளென்று என்னை நம்பி
பாறையைக் கடிக்கின்றன
சோகையான இரவு நிலவு.

மென்மையான நில நடுக்கம்
புல் துளிர்விடுகிறது.
பூமியின் மேல்.
(க்யோஜி)

வைகறைத் தேவவேளை
அந்திவானம் தியானத்தில்
இன்னும் புரியாத இரவு
(அமரன்)

புலர் காலை-
குழந்தை அரற்ற
பனி துரத்தும தெருநாய்
(நா.விச்வநாதன்)

கிளையில் அமர்ந்த பின்
பறக்கத் தொடங்கியது
குயிலின் பாட்டு.
(துஷன்)

ஒருபனிக்காலச் சூறைக்காற்று
மூங்கில்களுக்கிடையில் மறைந்து
அமைதியில் ஒடுங்குகிறது
(பாஷோ)

*தமிழில் ஹைக்கூ மாஸ்டர்கள் நிச்சயம் இருக்கிறார்கள். தேடிக் கண்டடைந்து அடையாளப் படுத்துவோம். சீனியர் ஜூனியர் என்று வகை பிரிக்காமல் சிறந்த ஹைக்கூ தென்பட்டால் அதை முன்னிருத்தி கௌரவப்படுத்துவோம்*

**நா.விச்வநாதன்**

# ஒளி பேசும் மொழி



24

**நெல்லை க. சோமசுந்தரி**
(கவிஞர். எழுத்தாளர். நெல்லியல் ஆர்வலர்)
சென்னை, தமிழ்நாடு



கலைகளின் மூல ஆதாரமாக நம் மானுட சமூகத்தில் நாகரீக வளர்ச்சியில் பல பரிமாணங்களைக் கடந்து ஓவியக் கலையானது பூகோள வேறுபாடு இன்றி இப்புவி பரப்பில் எங்கும் வியாபித்திருக்கிறது. அவ்வளவு சிறப்புப் பெற்ற ஓவியக் கலையை ஆதாரமாகக் கொண்டு வளர்ந்த சிற்பக் கலையானது அதன் பரிணாமத்தை அடுத்த நிலைக்கு இட்டுச் சென்றதை நம் ஆலயங்களின் மூலம் அறிய முடிகிறது. அவ் வழியே ஓவியக் கலையும் சிற்பக் கலையும் ஒருங்கிணைந்து வளர்ச்சி அடைந்து சிறப்புப் பெற்ற பழங்கால தொண்டை நாடான ஸ்ரீகாளஹஸ்தி என்பதனை நம்மால் இன்றும் உணர முடியும். சிற்பங்களின் சிறப்புகளானது ஆலயங்களின் வழியே வெளிப்படுகிறது. அவ்வகையில் ஸ்ரீகாளத்தியப்பர் ஆலயமானது கலை நயமிக்க, சிற்பக்கலையின் நளினத்தை வெளிப்படுத்தும் விதமாகப் பல சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இத்திருக் கோவிலானது கிழக்கு தொடர்ச்சி மலையினுடைய ஒரு புறத்திலேயே அமைந்துள்ளது.

இவ்வாலயத்தின் மூலவரான ஸ்ரீகாளத் தியப்பரை ஆதாரமாகக் கொண்டே அவ்வூரின் பெயரானது வழங்கப்படுகிறது. அப்பெயரில் 'ஸ்ரீ' என்பது சிலந்தி என்றும் 'காளம்' என்பது பாம்பு எனவும் 'அத்தி' என்பது யானை எனவும் பொருள் கொள்ளப் படுகிறது. சிலந்தி, பாம்பு, மற்றும் யானை ஆகிய மூன்று உயிரினங்களும் இவ் வாலயத்தின் மூலவரை வழிபட்டுப் பேறு பெற்றதால் அம் மூன்றின் பெயர்க் காரணத்தைக் கொண்டே இவ்வாலயத்தின் மூலவர் அழைக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் அவ்வூரின் பெயரும் அவ்வாறே அழைக்கப்படுகிறது.

இவ்வாலயத்தின் மூலவர் சுயம்பு லிங்கமாக உருவானதாகக் கருதப்படுகிறது. இவ்வாலயத்தில் இறைவனுக்கு எப்பொழுதும் தங்கக் கவசத்தினால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இக்கவசத்தினை நீக்கி ஆரத்தி எடுக்கும் போது, பார்த்தால் ஸ்ரீகாளத்தியப்பரின் அடிப் பாகத்தில் சிலந்தி வடிவத்தையும், நடுவில் நீண்டு கூடியன போன்று உள்ள யானையின் இரு கொம்புகளையும், அத்திருமேனியின் மேல் உச்சியில் ஐந்து தலை பாம்பு படம் எடுத்துள்ள வடிவத்தையும், வலப்புறத்தில் கண்ணப்ப நாயனார் பெயர்த்துப் பொருத்திய ஒரு கண்ணின் வடுவையும் காணமுடியும். இம்மூலவருக்கு அருகில் அமைந்துள்ள ஆவுடையாருக்கே அபிஷேக ஆராதனைகள் செய்யப்படுகிறது.

இம்மூலவரினுடைய சிறப்பாக மனித கரமானது மூலவர் மேல் படக்கூடாது என்கிற ஒரு ஐதீகமும் இக்கோயிலில் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. மேலும், கருவறையில் காளத்தியப்பருக்கு அருகில் அம்மன் செப்புத் திருமேனியில் காட்சியளிக்கிறார். இவ்வாலயத்தின் கருவறையில் உள்ள தூண்டா விளக்கின்



**இரட்டை கால் மண்டபம்**



தீபம் ஆனது தொடர்ந்து காற்றில் அசைந்து கொண்டே இருக்கும். ஆனால், கருவறைக்குள் வெளிக் காற்று உள்ளே வருவதற்கான வழிகள் ஏதுமின்றியும், தீபமானது காற்றில் அசைந்து கொண்டிருக்கிறது என்பதே மிக அதிசயமான ஒன்றாகும். இவ்வாலயத்தில் ஒரு அதிசயமிக்க நிகழ்வாகவும், வாயு ஸ்தலமாக இருப்பதற்கான அத்தாட்சியாக அந்த நிகழ்வு நம் கண் முன்னே காட்சியாக நிற்கிறது. இந்த கருவறை இடமானது ஒரு அகழியைப் போன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆகையினாலேயே வாயுத்தலமாக இன்றும் அனைவராலும் வழி படப் படுகிறது.

இவ்வாலயத்தின் நுழைவாயிலின் எதிரில் இரண்டு கொடி மரங்கள் உள்ளன. ஒன்று கவசத்தினாலும் மற்றொன்று ஒரே கல்லில் அமையப்பெற்றும் உள்ளது. இது ஏறக்குறைய 60 அடி உயரம் உடையது. அவ்வகையிலே கவசத்திலான கொடி மரத்தின் அடிப்பகுதியில் கண்ணப்ப நாயனார் தன் கண்ணினை எடுத்து இறைவனுக்குப் பொருத்திய காட்சி மற்றும் காளத்தியப்பரின் அருள்கொண்டு முக்திய டைந்த சிலந்தி, பாம்பு மற்றும் யானை ஆகிய வற்றையும் சுற்றாக ஒவ்வொரு புறமும் வடிக்கப்பட்டுள்ளது.

அவ்வகையில் மூலவருக்கு எதிரில் வெள்ளை நந்தியும், பித்தளை நந்தியுமாக இரு நந்திகள் உள்ளன. மேலும் இத்திருக்கோயிலின் வெளிப் பிரகாரத்தில் இரண்டு கால்கள் கொண்டு அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தில் விநாயகர் சன்னதியானது அமைந்துள்ளது. இம் மண்டபமானது, முன்புறம் இரண்டு தூண்களைக் கொண்டும் பின்புறம் சுவரோடு ஒட்டியும் எழுப்பப்பட்டுள்ளது. இரண்டு தூண்களைக் கொண்டு தாங்கி நிற்பதால் இது இரட்டைகால் மண்டபம் என வழங்கப் படுகிறது. அதன் வழியே மற்றொரு விநாயகர் சன்னதியானது தரைதளத்தில் இருந்து 20 அடிக்குக் கீழே அமைக்கப்பட்டுள்ளது. இதனைப் பாதாள விநாயகர் கோயில் என்று அழைக்கின்றனர். இத்திருக் கோயிலானது பல நூற்றாண்டுகளாக, அதன் கலைநயமிக்க அழகு மிளிர்வுடன் இன்னும் அதன் தன்மை மாறாமல் காண்பவரின் மனதில் நெகிழ்ச் சியினை ஏற்படுத்துகிறது என்பதனை நம்மால் உணர முடியும். அவ்வழியே, மேலும் பல ஸ்ரீகாளத்தியப்பர் ஆலயத்தினை பற்றி அறிந்து கொள்ள உளியின் மொழியோடு தொடர்ந்து பயணியுங்கள்.

(உளியின் மொழி தொடரும்)



பாதாள விநாயகர்

காளஹஸ்தி கோயில் சென்றிருக்கிறேன். சுவாமியை வழிபட்டு வந்ததோடு சரி. உங்கள் கட்டுரை மூலமாகத்தான் அதன் பெருமைகளை அறிகிறேன்.

அதேபோல, கலம்காரி ஓவியக் கலை பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். அதன் சிறப்புகளை உளியின் மொழிதான் புட்டுப் புட்டு வைத்திருக்கிறது. இவ்வளவு நுணுக்கமான தகவல்களை எப்படித்தான் சேகரிக்கிறீர்களோ? ஒரு நிருபரான எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. உளியின் பயணம் சிறக்கட்டும்.

**திரு. பழனியப்பன்** அவர்கள்,
(எடிட்டர், எழுத்தாளர்
தினத்தந்தி - தேவதை)

# நூல் வெளியீடு

## எழுத்தாளர் கவிஞர் நூலாசிரியை டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்களின் மூன்றாவது நூலான மஞ்சள் மாம்பூ ஹைக்கூ நூல் ஏறாவூரில் வெளியீடு






ஏறாவூர் நகர சபை பொது நூலகங்கள் இணைந்து நடாத்திய தேசிய வாசிப்பு மாதம்-2024 இறுதி நாள் விழாவும் டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்கள் எழுதிய மஞ்சள் மாம்பூ ஹைக்கூ கவிதை நூல் வெளியீடும் கடந்த

21/2/2025 வெள்ளிக்கிழமையன்று பிற்பகல் 4 மணிக்கு வாவிக்கரைப் பூங்காவில் மிகவும் சிறப்பா கவும் கோலாகலமாகவும் நடைபெற்றது.

ஏறாவூர் பொது நூலக ஏற்பாட்டில் இவ்விழா பலவிதமான நிகழ்வுகளோடு ஜனரஞ்சகமாக அமையப் பெற்றிருந்த இவ்விழாவில்

ஏறாவூர் நகரசபையின் செயலாளர் எம்.எச்.எம் ஹமீம் தலைமை தாங்க ஏறாவூர் நகரபிரதேச செய லாளர் எஸ்.எச். முஸம்மில் பிரதம விருந்தினராக



கலந்து கொண்டார். செங்கலடி பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் எச் எம் மௌஜூத், வைத்திய அதிகாரி டாக்டர் ஜலீலா முஸம்மில், ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சாபிறா வஸீம், சிரேஷ்ட சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அன்பழகன் குரூஸ், ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய அதிபர் சுதாகரி மணிவண்ணண், கலாச்சார உத்தி யோகத்தர் அஷ்ஷெய்க் ரிஸ்வான் மௌலவி, கலாசார மத்திய நிலைய பொறுப்பதிகாரி எம்.ஐ.எம்.எம் மஹ்பூல் ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் நஸீரா எஸ் ஆப்தீன் , ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளரும் கவிஞருமான எஸ் ஏ றஸாக் ஆசிரியையும் கவிஞருமான என் எம் ஆரிபா, ஆசிரியை திருமதி நுஸ்ரத் லியா உல் ஹகீம், மூத்த கவிஞர் ஏறாவூர் தாஹிர் ஓய்வு பெற்ற ஆசிரியரும் மூத்த கவிஞருமான ஏ.ஹலீம், மூத்த கவிஞர் மருதூர் ஜமால்தீன், மூத்த கவிஞர் அப்துல் ரகுமான், திடீர் மரண விசாரணை அதிகாரி எம் எஸ் எம் நஸீர் , ஓய்வு பெற்ற பிரதி அதிபர் திருமதி பரீனா நஸீர், விவசாயப் போதனாசிரியர் ஏ.எச். முர்ஷிதா ஷிரின், அஞ்சல் பயிற்சிக் கல்லூரி போதனாசிரியர் கே.பாத்திமா ஹஸ்னா, ஊடகவியலாளர் ஏ.எச்.ஏ.ஹுஸைன் உட்பட பிரமுகர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கவிஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பங்கு கொண்ட இப்பெரு விழாவில் சிறப்பு அம்சமாக டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்களின் மூன்றாவது நூலான 'மஞ்சள் மாம்பூ' ஹைக்கூ கவிதை நூல் வெளியீடு செய்யப்பட்டது. முதல்பிரதியை டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்களின் தாயார் அவர்கள் பெற்றுக் கொள்ள அடுத்தபடியாக அதிதிகளும் கவிஞர்களும் இலக்கிய ஆர்வலர்களும் நூல்களைப் பெற்றுக் கொண்டனர்.

'முற்றத்து மல்லிகை' எனும் ஏறாவூர் எழுத்தாளர்களின் ஆவணக்காப்பகத்திற்காக ஏறாவூர் பொது நூலக நூலகர்







அவர்களுக்கும் மஞ்சள் மாம்பூ பிரதி வழங்கி வைக்கப்பட்டது.

நூல் நயவுரையை மிகவும் சிறப்பான முறையில் ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளரும் கவிஞருமான எஸ் ஏ றஸாக் அவர்கள் நிகழ்த்தினார்கள். ஏற் புரை எழுத்தாளர் கவிஞர் நூலாசிரியை டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்களின் இந்த 'மஞ்சள் மாம்பூ' ஹைக்கூ நூலானது 2024 ஜூன் மாதம் தமிழ் நாடு புதுச்சேரியில் இடம்பெற்ற ஹைக்கூ மாநாட்டில்

சர்வதேச கவிஞர்களின்

(அமெரிக்கா, மலேஷியா, இலங்கை, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஐக்கிய அமீரகம் மற்றும் தமிழ் நாடு)

63 ஹைக்கூ நூல்களின் ஒருமித்த வெளியீட்டு உலக சாதனை விழாவில் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. இம்மகாநாடும் நூல் வெளியீடும் ஒரு சாதனை நிகழ்வாக

'ஆல் இந்தியா புக் ஆப் ரெக்கார்டு' - 'ALL INDIA BOOK OF RECORDS" இல் இடம் பிடித்து சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கப் பட்டமை குறிப்பிடத் தக்க விடயமாகும்.

நூல் பெற தொடர்பு கொள்ளுங்கள்

**+94771308495**
jaleelamuzammil@gmail.com

# கற்பகத்தின் கல்யாணம்





அன்புச்செல்வி சுப்புராஜு
பட்டாபிராம்

**பகுதி – 1**

கிராமமும் இல்லாத நகரமும் இல்லாத அந்த ஊருல நடுத்தர குடும்பத்துல பொறந்த கற்பகம் மாநிறம். நீளம் கொறவுழினாலும் சுருண்ட முடி. ஆனாலும் தெனமும் முடி நீளத்துக்கு கனகாம்பரம், மல்லிகைப்பூ என ரெட்டை அடுக்குல பூ வச்சு, கை நெறய கண்ணாடி வளவி அடுக்கி, கண்ணுக்கு மை, நெத்தில குங்கம நெறத்துல ஒட்டுப் பொட்டு வச்சு பாவடை, தாவணியோட வலம் வர கற்பகத்துக்கு நடப்பு பத்தொம்பது வயசு.

சின்னதுல இருந்தே வீட்டு வேலைகள எல்லாம் சுறுசுறுனு செய்வா. படிக்குறது கூடவே நூல் சுத்தறது, தம்பி தங்கச்சிகள பார்த்துக்கறதுனு அவளுக்கு ஒரு நாள் பொழுது போதாது. பத்தாவது படிக்கும் போது ஆறு, ஏழாம் வகுப்பு பிள்ளைகளுக்கு டியூசன் எடுப்பாள். அம்மா தச்சு வச்சிருக்கும் துணிகளுக்கு பட்டன், கொக்கி வைப்பாள். ஆக மொத்தம் பொறுப்பான பெண்ணுனு ஊருக்குள்ள நல்ல பேரு.

அந்த ஊர் சனங்க எல்லாம் ஒன்னு, மண்ணா ஒறவுகளா கலந்து பழகுவாங்க. வானம் பார்த்த பூமி. வெள்ளாம, வெளச்சல் ஏதுங் கிடையாது. பொதுவா நெசவுத் தொழில்ங்கிறதாலே போதாக்குறை வருமானந்தேன். வானம் பார்த்த பூமி. ஆனா பாசத்துக்கு கொறையில்ல.

தும்பப்பூவா வெளுத்த வெள்ளை வேட்டி, சட்டை, முறுக்கு மீசையோட கம்பீரமா நடக்குற கற்பகத்தோட அப்பாவுக்கு ஊர்ல நல்ல மதிப்பு, மரியாதை. அவர் சொல்லுறதுதான் வேத வாக்கு. சின்ன வயசுல கடைவீதிக்கு போகும் போது யார் அப்பாவோட விரல பிடிச் சுக்கறதுனு தம்பி, தங்கச்சிக்குள்ள சண்டையே

நடக்கும். நாளுக்கொருவரா மொற வச்சி பிடிச்சுப்பாங்க.

மாசச் சம்பளம் வாங்குற அப்பா ஒரு மாசங் கூட முழுசா சம்பளத்த வீட்டுக்கு கொண்டு வந்து கற்பகம் பார்த்தது இல்லை. வரும் வழியிலேயே யாராவது எதாவது ஒதவினு கேட்டா பணத்த கொடுத்துட்டு மிச்சம் இருக்கிறது... சமயத்துல வெறுங் கையோட வீட்டுக்கு வருவார். பையில ரெண்டு காராசேவு பொட்டலம் இருக்கும். பார்த்ததும் அம்மாவுக்கு கோவம் வரும். வீட்டு வாடகை, மளிகை, பசங்க படிப்பு எல்லாம்யார்பார்ப்பாங்க... கொஞ்சமாச்சும் கொண்டு வந்துருக்கலாமுலனு சத்தம் போடுவாங்க. 'அதுக்குதான் நீ இருக்கியே, அதெல்லாம் சமாளிச்சுப்ப' சிரிச்சிட்டே அப்பா சொன்னதும் அம்மா கோவம் போன இடந் தெரியாது. 'இதுக்கொண்ணும் கொறச்சல் இல்ல' மொணங்கிக்கிட்டே சாப்பாடு எடுத்து வைப்பாங்க.

'அளவாதான் சமைக்கிற, ஆனா யாராவது பிள்ள சோறு கேட்டு வந்தா உள்ளத அவங்களுக்கு கொடுத்துட்டு உம் பசிக்கு பச்சத்தண்ணி குடிச்சிட்டு படுத்து தூங்குறல ... அதுபோலதா நா செய்யறதும்' அப்பா சொல்லவும் அம்மா சிரிச்சிட்டே 'சாப்பிடுங்க... சேர்ந்து சமாளிப்போம்ல்'னு பரிமாறுவாங்க.

வரவுக்கும், செலவுக்கும் சரியாக, சிறு வாடு ஏதுமில்லாம பொழப்பு நடந்துட்டு இருக்கிற நேரத்துல படிச்சு முடிச்ச கற்பகம் வேலைக்கு சேர்ந்தாள். கூடவே தட்டச்சு, சுருக்கெழுத்துனு படிக்க ஆரம்பிச்சா. கெடச்ச சம்பளத்துல கற்பகத்தோட அம்மா நகைச்சீட்டு, பாத்திரசீட்டுனு போட ஆரம்பிச்சிட்டாங்க.

கூடுதலா கொஞ்சம் காசு வருது, நிம் மதியா இருக்கலாமுனு மூச்சு விட்ட நேரம் கற்பகத்தோட அப்பாவுக்கு திடீர்னு ஒடம்புக்கு முடியாம போயிடுச்சு. உள்ளூரு டாக்டருகிட்ட காண்பிச்சும் எள்ளளவும் சரியாவல, பேசாம மதுர பெரியாஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போயிடுங்க... மாசக் கணக்கோ, நாள் கணக்கோனு டாக்டர் சொல் லிட்டார்.

அவசரம், அவசரமா அப்பாவை மதுரைக்கு கொண்டு போய் சேர்த் துட்டாங்க. பெரியாஸ்பத்திரில நோயா ளிகளை கவனிச்சுக்க கூட்டம் அதிகமா இருக்கக் கூடாது, யாராவது ஒத்த ஆம்பள போதுமுனு சொல்லவும் அப்பா வுக்குத் தொணையா கற்பகத்தோட தம்பிய இருக்க வச்சாங்க. அம்மாவும், கற்பகமும் மாத்தி, மாத்தி சாப்பாடு கொண்டு போய்க் கொடுத்துட்டு பார்த்துட்டு வருவாங்க.

சொந்தக்காரங்களாம் கற்பகத்துக்கு தீவிரமா மாப்பிள்ளை தேடத் தொடங் கவும் ஆச்சரியமா இருந்துச்சு....

அப்பாவிற்கு உடம்பு முடியாதப்ப எனக்கு எதுக்கு கல்யாணமுனு அம்மா கிட்டே கேட்டாள்.. அப்பா கண்ணாசை பார்க்கத்தானு அம்மா சொல்லவும்.. இன் னும் இரண்டு வருசம் போகட்டுமுனு கற்பகம் முணுமுணுக்க... உறவுக ஒவ்வொ ருத்தரா வந்து ஒவ்வொரு புத்திமதி சொல்ல தொடங்கிட்டாங்க..

ஆத்தி.. என்னமோ கையோட மாப் பிள்ளைய வச்சிருக்கிற மாதிரி ஆளா ளுக்கு பேசறாங்களே .. தாங்கலடா சாமி... இப்போதைக்கு தலைய ஆட்டுவோம்.. யாராச்சும் வந்தா பொறவு யோசிப்போமுனு நெனச்சிக்கிட்டே சரின்னு சொன்னா கற்பகம். எப்படியும் வர்ற மாப்பிள்ளை வீட்டைப் பார்த்ததும் வேண்டாமுனு போயிடுவாங்கனு பெரும் நம்பிக்கை அவளுக்கு...

# புரிவாயா அவளை...

அழுக்காடை அவளது
அலுக்காதது உனக்கு..

சமையலில் கெட்டிக்காரி
சடை நீள பின்னல்காரி..

இயந்திர உழைப்பினாள்
இரங்கும் இயல்பினாள்..

ஒதுங்கும் நிழல்
ஒத்தட கரங்கள்..

வரண்ட மேனிக்கு
வாய்க்காத வரங்கள்..

ஓய்வில்லை என்பதற்காய்
உணர்வில்லை என்றாகுமா..

அடிமைத்தளை போதும்
அவளும் பெண்தானே..

வேண்டாம் அவளுக்கு
வேங்கைகளின் சுற்றம்..

வேரற்று நிற்கும்
வேடமணியாப் பேதையவள்..

கரும்பாக இனிக்கும்
கள்ளமில்லா காரிகையவள்..

உடைந்த உள்ளத்தால்
உருமாறிப் போயிருப்பவள்..



உணர்வாய் நன்றே
உனக்கானவளே அவள்..

புரிவாய் இன்றே
புனிதமான உறவவள்..

மனையாள் எனும்
மணமிக்க மலரவள்..

அன்பால் இணைந்து
அரவணைத்து மகிழ்..

கூடுமவள் அழகில்
குழைந்துதான் போவாய்...

**நுஸ்ரா லியாகத் அலி**
(என்.நூர்)
தர்கா நகர்.

தொடர் 18

எழுத்தாக்கம் **பாதிமா நளீபா**



# சிரிப்பால் மறைத்த சோகம்

அடுத்த கட்டமாக உயர் தர கற்கையை தொடர வேண்டும் என்ற பிராத்தனை களுடன் தன் பாடசாலை நாட்களை அழகாக மாற்ற முயற்சி செய்தாள். முதல் நாள் பாடசாலை செல்கிறாள். ஒரு ஆசிரியர் அவளை அழைக்கிறார். அவளும் அவர்களை நோக்கி நகர்ந்தாள். நீங்க ஏன் பாடசாலை வந்தீங்க என்று ஒரு கேள்வி எழுப்பப்பட்டது.. இது என்ன கேள்வி?

ஹ்ம்ம்..

அவள் புன்னகைத்தவாறு நீங்க ஏன் டீச்சர் ஸ்கூல் வந்தீங்க என்று கோபத்தை மறைத்து விட்டு புன்னகையுடன் கேட் டாள்.. ஆசிரியரும் சிரித்தவாறு 'படிச்சி கொடுக்க வந்தேன்' என்றார். அதே சிரிப்புடன் பதில் கூறினாள் 'நான் படிக்க வந்திருக்கேன்' ஆசிரியரின் வாய் மூடப் பட்டது. இருந்தும் மறுபடியும் ஆச்சரி யமாக நீ exam pass ஆகிடியா ?!

மரியம் கூறினாள் இப்போ தான் இந்த நிமிசம் lifele பாஸ் ஆகிடன். என்ன சொல்ற நீ புரியல்ல. நல்லது அப்படியே இருக்க டீச்சர்... என்று கூறி புன்னகைத்தவாறு ஆசிரியரும் ஒன்றும் புரியாத குழப்பத்தில் இருவரும் இரு புறம் செல்கிறார்கள்....

முதல் வாரம் சிறப்பாக அமைந்தது. இரண்டாம் வார ஆரம்பத்தில் பாடசாலை அதிபர் வகுப்பறைக்கு வந்தார். சிறிது நேரம் உரையாடி விட்டு. இறுதியாக A/l project விடயம் குறித்து கூறவேண்டும் என்று ஆரம்பித்து நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தனிப்பட்ட தலைப்புகள் தெரிவு செய்து மூன்று மாதங்களில் project submit பன்ன வேண்டும் என்று கூறிச் சென்றார். அனைவரும் தயாரானார்கள்.

ஹ்ம்ம்..

மரியம் தெரிவு செய்த தலைப்பு 'உளவளத்துணை'

மூன்று மாதங்களில் ஒப்படைக்கப்பட வேண்டிய project மூன்று வாரங்களில் ஒப்படைக்கப்பட்டது. அதிபரின் பார் வைக்காக அவர்களது மேசையில் வைத்து விட்டு அவளும் வகுப்பறைநோக்கி நகர்ந்தாள்.

அடுத்த நாள் காலையில் அதிபரின் மேசையில் அந்த புத்தகத்தை காணவில்லை சுற்றி எல்லா இடத்திலும் தேடினாள். என்ன செய்வது என்று தெரியாமல் வகுப் பறைக்கு சென்றாள் சிறிது நேரத்தில் சிரித்த முகத்துடன் அதிபர் வகுப்பறை

நோக்கி வந்தார். சிரித்த முகத்துடன் வந்தவர் கோபத்துடன் உங்கள் வகுப்பில் மரியம் என்பவர் யார்?

மரியம் எழுந்து நிற்க இன்னும் அரை மணி நேரங்களில் எனது அலுவலகத்திற்கு வர வேண்டும் என்று கூறிச் செல்கிறார்.. என்னவாக இருக்கும் என்று பதற்றமும் நடுக்கமும் அவளை சூழ்ந்து கொள்ள அவளது நண்பிஒருவருடன் அலுவலகம் நோக்கி நகர்ந்தாள்..

அலுவலகம் நுழையும் போது அவள் நினைத்துப் பார்க்க முடியாத ஒரு விடயம் அங்கு நடைபெற்றது அது என்னவாக இருக்கும்?



தொடர் 19

## சிரிப்பால் மறைத்த சோகம்

அலுவலகத்தின் கதவுகள் திறக்கப் பட்டன. அதிர்ச்சியில் உறைந்த அவள் முகங்கள் எதிர்பாராத கைதட்டலுடன் வர வேற்கப்பட்டாள். மகிழ்ச்சியின் உச்சகட்டம் முதல் முறையாக அவள் உணர்ந்தாள்.

மரியம் - எதற்காக சேர் இப்படி வரவேற்பு?

அதிபர் - எதிர்கால உளவளத் துணை யாளரை இப்போது காண்கிறோம்

மரியம் - புரியல்ல சேர்

அதிபர் - மகள் நீ எழுதின இந்த புத்த கம் எவ்வளவு பெறுமதி வாய்ந்தது என்பது உனக்கு தெரியுமா, அதுவும் இந்த வயசுல இப்படி ஒரு படைப்பு உன்கிட்ட இருந்து வரும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை மகள் All The Very Best

மரியம் - ரொம்ப நன்றி சேர் அல்ஹம்து லில்லாஹ்!

அதிபர் - இத எப்படி எழுதின நீங்க?

மரியம் - ஆறுமாத உளவியல் கற்கையை நிறைவு செய்தது பற்றி கூறும் போது (அவ்விடத்திற்கு மரியம் உதவி ஆசிரியராக பணியாற்றிய வகுப்பின் ஆசிரியர் வருகிறார்)

ஆசிரியர் - மரியம் இது நீங்க எழுதினது தானே

மரியம் - யேஸ் டீச்சர்

அதிபர் - உங்களுக்கு இந்த புத்தகம் பத்தி தெரியுமா டீச்சர்

ஆசிரியர் - ஓ சேர் மரியம் சொல்லி இருக்காங்க சேர் அது மட்டும் இல்லாம என்னோட வகுப்பில் தான் மரியம் உதவி ஆசிரியராக பணியாற்றியது பிள்ளை களுக்கு மரியத்த ரொம்ப பிடிக்கும் சேர்.

அதிபர் - உதவி ஆசிரியராக இருந்தாங் கலா! மாஷா அல்லாஹ்...

அதிபர் - சரி மகள் இத கண்டிப்பா ஒரு சிறந்த புத்தகமாக இந்த ஊர்ல ஒரு விழா ஏற்பாடு செய்யப்பட்டு வெளியீடு செய்வோம் நீங்க அதுகான வேலைகளை மும்முரமாக செய்க இன்ஷா அல்லாஹ் விரைவில் முழுமையான ஒருபுத்தகமாக இதுஅனைவருக்கும்சென்றடைய வேண்டும்..

மரியம் - இன்ஷா அல்லாஹ்..

Thank you so much sir..

பாடசாலை விடப்பட்டதும் விரைவாக வீடு நோக்கி நகர்ந்தாள். அவள் மிகம் முழு நிலவு போல் மகிழ்ச்சியில் ஜொலித்தது. மாலை நேரம் வரை தன் தாய்க்காக காத்திருந்தாள். ஸைனப்

வருவதைப் பார்த்த அவள் ஓடிச்சென்று நடந்ததைக் கூறினாள். ஸைனபும் அவள் வாழ்க்கை இவ்வாறான ஒரு மகிழ்ச்சியான நிமிடங்களையே எதிர்பார்த்து காத்திருந் தாள். இந்த மகிழ்ச்சியை உறவுகளுக்கி டையிலும் பகிர்ந்து கொண்டார்கள்.

அடுத்த கட்டமாக என்ன செய்வது என்று தெரியாமல் மீண்டும் அதிபரை சந்திக்க தாயுடன் சென்றாள். அவரிடம் குடும்ப சூழ்நிலை பற்றியும் தெரிவித்து விட்டு இதற்கு என்ன செய்வது, யாரை சந்திக்க வேண்டும் என்ற பல தேவையான விடையங்களை தெரிந்து கொண்டு அவ் விடம் விட்டு நகர்கிறார்கள். அவ்வாறு ஊரில் இன்னும் பலரையும் சந்தித்து ஆலோசனைகள் பெறப்பட்டது. பலரின் உதவிகளும் கிடைக்கப்பட்டது.

இனிதே 2017. 11. 28 திகதி புத்தக வெளி யீட்டு விழா நடைபெற ஏற்பாடு செய்யப் பட்டது. அன்றைய நாள் மாலை 4:00pm மணிக்குவிழா ஆரம்பமாக இருந்தது. காலையில் மரியம் நண்பர்கள் சிலரின் உதவியுடன் மண்டபம் அலங்கரிக்கப் பட்டது. அலங்கார வேலைகள் முடிவ டைந்த பின்னர் வீடு நோக்கி நகர்ந்தார்கள். அதற்கு இடையில் குளிர் பானம் தயார் செய்வதற்காக ஒருபெரிய பாத்திரம் தேவைப்பட்டது. அதை எடுப்பதற்கு தன் அருகில் உள்ள உறவினர் ஒருவர் விட் டுக்குச் சென்றாள் மரியம் மற்றும் தன் தாயின் சகோதரியும்.

அந்த இடத்தில் சுமார் ஏழு பேர் உட்கார்ந்து இருந்தார்கள். மரியம் போன விடயத்தை கூறி பாத்திரம் வாங்கிய படி திரும்பும் போது ஒரு குரல் 'மரியம் இது எதுக்கு' என்று கேட்டார். 'ஏன் உங்களுக்கு தெரியாதா இன்னக்கி ஒரு விழா இருக்கு.' 'ஓ நான் மறந்துட்டன்அது யாரு' என்று கேட்டார். அவள் ஒரு பார்வை பார்த்துவிட்டு. 'யார்னு தெரியாது எனக்கும் வர செல்லி இருக்காங்க போய் தான் பாக்கனும்' என்று கூறி சிரித்துவிட்டு நகரும் போது மற்றும் ஒரு குரல் 'இவட பெயரும் மரியம் தானே அப இந்த புள்ளட விழா இல்லையா' என்று கேட்கும் போது முதலில் பேசிய நபர் கூறுகிறார். 'இவள்க்கு எல்லாம் அந்த அளவு படிப்பு இல்ல' என்று கூறிய போது ஒரு கணம் கோபம் கொண்டவளாய் புன்னகையுடன் கடந்து சென்றாள்

( விடயம் என்னவென்றால் அந்த ஊரில் மரியம் என்ற பெயரில் இருவர் மாத்திரமே காணப்பட்டார்கள், அந்த மரியம் எனும் நபரும் சற்று கல்வி அறிவு கொண்டவர், விழாவிற்கு வருகை தர இருந்த யாருக்கும் அந்த நிமிடம் வரை இருவரில் யார் என்று தெரியவில்லை)

தொடர் 20



**சிரிப்பால் மறைத்த சோகம்**

மாலை நேரம் அனைவரும் வருகை தந்துவிட்டார்கள். தொலைபேசி அழைப்பு வந்த வண்ணமாக இருந்தது. சற்று நேரத்தில் வந்து விடுவேன் என்று கூறி அழைப்பைத் துண்டித்தாள்.

ஹ்ம்ம்..

சற்று நேரத்தில் அவ்விடத்தை அடைந் தார்கள்..

சரி சரி வந்துடாங்க என்று கூற

மரியம் மண்டபத்தில்னுல் புன்னகை யுடன் அடி எடுத்து வைக்கிறாள் அனைவரும் அண்ணார்ந்து பார்க்க அமைதியாக அதே புன்னகையுடன் மேடையை நோக்கி நகர்ந் தாள். அனைவர்க்கும் முன்னிலையில் அமர்க்கையில் பிரமுகர்களுடன் உட்

கார்ந்தாள் அங்கு மிக முக்கியமான சிலர் அழைக்கப்பட்டார்கள் (சிறு வயதில் அவளை சக மாணவர்கள் முன்னிலையில் அவமானம் செய்த ஆசிரியர் உற்பட பாத்திரம் எடுக்க சென்ற போது ஏளனமாக பேசிய நபர் மற்றும் யஹ்யா சிறுவனாக இருக்கும் போது மருத்துவ உதவி கேட்டு சென்ற செல்வந்தர் உற்பட இன்னும் பலர்)

ஆனால் சிலர் ஆச்சரியத்துடனேஇறுதி வரை அமர்ந்திருந்தார்கள்.

ஹ்ம்ம்..

மரியமின் தாய் ஸைனப் மேடைக்கு அழைக்கப்பட்டாள். ஸைனப் முகத்தில் மகிழ்ச்சி ஊஞ்சல் ஆடியது. அவள் எதிர் பாராத விதமாக இவ்வாறான ஓர் தருணம் அதுவும் தன் மகள் மூலமாக தாங்களை தாழ்த்தியவர்கள் மத்தியில் அவர்கள் முன் அமர்க்கையில் சற்றும் எதிர்பாராத தருணம்..

அழகான முறையில் விழா ஆரம்பிக்கப் பட்டது முதல் பிரதி Chief Gest வழங்கப் பட்டது. இரண்டாம் பிரதி ஸைனபுக்கு வழங்கப்பட்டது.

நூல் அறிமுகத்தை தொடர்ந்து நூலாசிரியர் உரைஇடம் பெற்றது. அது அவளுக்கு முதல் தடவை மேடையில் பேச வாய்ப்பு கிடைத்தது. என்ன பேசுவது என்று தெரியாமல். பேச ஆரம்பித்தாள். அனைவரையும் வரவேற்றவளாய் ஆரம் பித்தாள்

மரியம் - எனக்கு இந்த தருணங்கள் இந்த நிமிடங்கள் புதிதாகவும் புதிராகவும் உள்ளது என் வாழ்வில் இவ்வாறான ஒரு நாள் வரும் என்பது நான் கனவிலும் நினைக்கவில்லை அல்ஹம்துலில்லாஹ். மேடை ஏறும் வரையிலும் கையில் Mic எடுக்கும் வரையிலும் என்ன பேசுவது என்று சிந்தித்த நான் இப்போது பல விடயங்கள் என் கண்முன்னே தோன்றி மறைகிறது.

இவ்விடத்தில் என்னைத் தள்ளிவிட்ட வேர்களும் இருக்கின்றார்கள், என்னைத் தூக்கிவிட்ட வேர்களும் உள்ளார்கள். அத்துடன் இன்று காலை என்று ஆரம்பித்து பாத்திரம் வாங்க சென்ற போது நடந்த சம்பவத்தை கூற அதற்குறிய நபரின் கண்களில் இருந்து நீர் வழிந்தோடியது, அத்துடன் பாடசாலைகளில் ஆசிரியர் என்று ஆரம்பித்து தனக்கு நடந்த கொடுமைகளை கூறிய போது அந்த ஆசிரியர் உற்பட இன்னும் சிலர் கண்களில் இருந்து வடியும் கண்ணீர் அவர்களுக்கு அவர்களின் தவறை உணர்த்தியது. நான் யாரையும் காயம் செய்வதற்காக இந்த விடயத்தை கூறவில்லை. இந்த மரியத்திற்கு நடந்த இந்த செயல் இன்னுமோர் மரியத்திற்கு நடக்க கூடாது என்பதற்காகவே இன்று கூறி என் பேச்சு உங்களை காயம் செய்து இருந்தால் மன்னிப்பு வேண்டியவளாக. இந்த மரியத்திற்கு தந்தை குடிகாரனாக இருந்தாலும் அவளை தாங்கித் தட்டித் தூக்க அவள் தாய் இருந்தாள் ஆனால் மற்ற மரியங்களுக்கு இவ்வாறு தாய் அமைவாளா என்பது தெரியாது தயவு செய்து இவ்வாறான பிள்ளைகளுக்கு உங்களால் முடிந்த வரை அவர்களின் முன்னேற்றத்திற்கு காரணமாக இருங் கள் ஒருபோதும் அவர்களின் கண்ணீ ருக்கு காரணமாக இருந்து விட வேண் டாம் என்று கூறி உரையைமுடித்துக் கொள்கிறாள்.

இன்னும் பல நிகழ்வுகளுடன் விழா இனிதே நிறைவு பெற்று மரியம் மேடையை விட்டு கீழே இறங்க அந்த ஆசிரியர் ஓடி வந்து அவளை அனைத்து முத்தமிட்டு மன்னிப்பு வேண்டினார். அவள் ஆசிரியருக்கு ஆறுதல் கூறி வழி யனுப்பி வைத்தாள். அனைவரும் அவ் விடத்தில் இருந்து சென்றதும் இவர்களும் வீடு நோக்கி நகர்ந்தார்கள். அல் ஹம்துலில்லாஹ் 500 புத்தகப் பிரதிகள் விற்பனையானது.

ஒரு கவலையான விடயம் இதற்கு

காரணமாக இருந்த அதிபர் விழாவில் கலந்து கொள்ள முடியாமை சென்றது. ஹ்ம்ம்.

அதிபருக்கான புத்தகம் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டது. அல்ஹம்து லில்லாஹ். வழமையான முறையில் பாட சாலை சென்றாள். ஆனால் குடும்ப சூழ் நிலை தொடர்ந்து பாடசாலை செல்ல அவளுக்கு கிடைக்கவில்லை.

உயர் தர கற்கையை மரியம் தொடர்ந்தாளா?

தொடர் 21



## சிரிப்பால் மறைத்த சோகம்

ஆம் நிச்சயமாக.

இனிதே விழாவும் சிறப்பாக நிறைவு பெற்றது. மூன்று மாதங்கள் மாத்திரமே மரியம் உயர் தர கற்கையை தொடர பாடசாலை சென்றாள். காரணம் குடும்ப வறுமை. குடும்ப வறுமை காரணமாக மீண்டும் அதே பாடசாலையில் உதவி ஆசிரியராக பாணியாற்ற ஆரம்பித்தாள். கிடைக்கின்ற ஓய்வு நேரங்களில் தனது உயர் தர கற்கையை மேற்கொண்டாள். தனியார் முறையில் தனது உயர் தர பரீட்சையை எழுதுகிறாள். சுமார் இரண்டு வருட கால உதவி ஆசிரியர் தகைமையையும் தன் வசப்படுத்திக் கொண்டாள். இவ்வாறு நாட்கள் உருண்டோட தனியார் வைத்திய சாலை ஒன்றில் வர வேற்பாளர் மற்றும் காசாளர் பதவிக்கு (Receptionist and Cashier Position)நியமனம் பெறுகிறாள். மகிழ்ச்சி யான அழகான நாட்கள். பல விதமான மனிதர்கள், சிறுவர்கள் முதியோர்கள் என அனைவருடனுமான கலந்துரையாடல். சிறந்த பெண் நண்பிகள் என அழகான நாட்களாக காணப்பட்டது அவளுக்கு....

சில நாட்கள் சென்றதும் பகல் நேரப் பணியுடன் இரவு நேரப் பணியும் மரிய முக்கு வழங்கப்பட்டது. முதல் நாள் சற்று குழப்பமானதாக இருந்தாலும் சில மாதங்கள் கழிய சீரான முறையில் பணியை தொடர்ந்தாள். இரவு நேரத்தில் அதிகமாக குடிபோதையில் விபத்துக்குள்ளானவர்கள் பலத்த காயங்களுடன் வருகை தருவார்கள் பார்பதற்கு உடம்பு கூசும் அளவில் இருக் கும் காயங்கள். மரியமின் பணி அதுவாக இல்லா விட்டாலும் தாதிகளுக்கு அவளால் முடிந்த உதவிகளை செய்து கொடுப்பாள் இவ்வாறு மாதங்கள் கடந்து செல்ல அவ ளுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டது. வைத்தியசாலையில் கிட்டத்தட்ட எட்டு மாதங்கள் பணிபுரிந்தாள். நிச்சயிக்கப் பட்ட சில மாதங்களில் திருமணம் நடை பெறுகிறது. தன் பணியில் இருந்து ஓய்வு பெறுகிறாள். திருமண வாழ்க்கை சிறப்பாக அமைந்தது.

காலப்போக்கில் மரியம் தனது இரண் டாவது புத்தகத்தை எழுத ஆரம்பம் செய் கிறாள் அதற்கு அவளது தாயுடன் கணவனும் அவளக்கு இருதூண்களாக திகழ்கின்றனர். அவளது,

இரண்டாவது புத்தகம் ‘உள நோய்க ளும் அதற்கான தீர்வும்’

மூன்றாவது புத்தகம் ‘இலங்கை வாழ் இனத்தவர்கள் யாவர்’ இவ்விரண்டு நூல்களும் இன்னும் வெளியீடு செய்யப் படவில்லை.. அது மட்டும் இன்றி பல விருதுகளையும் தன் வசப்படுத்திக் கொண் டாள் மரியம்.

அவள் சுவீகரித்துக் கொண்ட விருதுகள்...

**‘இளம் எழுத்தாளர் விருது‘**

**‘ தங்க மகள் விருது‘**

**‘ எழுத்தின் இனிமை விருது‘**

‘ எழுத்துப் பணி விருது‘

“Woman Excellence award"

‘ சிந்தனை மேதகு மகளீர் விருது‘

‘ தூய்மை கவிஞர் விருது‘

‘ தாய்மொழி கவிஞர் விருது‘

இந்தியாவில் நாடாத்தப்பட்ட உலக சாதனை ஆயிரம் கவிஞர் ஆயிரம் கவிதைகள் என்ற நூலில் எனது கவிதை 300வது இடத்தைப் பிடித்துள்ளது.

இந்தியாவில் இயங்கி வரும் முத்தமிழ் இலக்கிய மன்றம் குழுமத்தில் இலங்கை ஒருங்கிணைப்பாளராகவும் பல போட்டி நிகழ்ச்சிகளில் நடுவராகவும் நெறியாளராகவும் கலந்து கொண்டாள். மற்றும் சம்மாந்துறையில் இயங்கி வரும் Talent plus TV நிறுவனத்தின் முன்னாள் Director ஆகவும் பணியாற்றினாள்.. இரண்டு முறை கொழும்பு றோயல் கல்லூரியில் நடுவராக கலந்து கொள்ளும் வாய்ப்பும் அவளுக்கு கிடைத்தது அல்ஹம்துலில்லாஹ்.

இது மற்றும் இன்றி பரிமாணம் பத்திரிகை மற்றும் தினகரன் பத்திரிகையில் அவளது நேர்காணல் இரண்டு வாரங்கள் தொடர்ச்சியாக வெளியானது. SLBC இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் நூல் உலா நிகழ்வில் அவளது நூல் அறிமுகம் செய்யப்பட்டது..

யாரெல்லாம் இவர்களை தாழ்த்தினார்களோ அவர்கள் தற்போது இவளின் மூலம் உதவிகளை பெறும் தருணமாக அல்லாஹ் மாற்றிவிட்டான். மரியமின் வீடு பற்றி கூறினேன் அதற்கும் ஊர் தலைவர்கள் சிலர் மூலம் உதவி கிடைக்கப்பெற்று வீட்டின் சில பாகங்கள் திருத்தம் செய்யப்பட்டது அல்ஹம்துலில்லாஹ்...

இன்று அனைவரும் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்வை மேற்கொண்டு வருகின்றனர். அல்ஹம்துலில்லாஹ். வழமையான முறையில் ஸைனப் அவளது பணியை தொடர்கிறாள் சாரா உயர் கல்வியையும், யஹ்யா சாதாரண தர கல்வியையும் மேற்கொண்டு வருகின்றனர் அவர் களை உங்கள் பிரார்த்தனைகளில் இணைத் துக் கொள்ளுங்கள் அன்பு உறவுகளே...

இந்தப் பாகத்தைப் படிக்கும் போது சிலர் இது யார் என்பதை அறிந்து கொள்வார்கள். தயவு செய்து கூற வேண்டாம் இறுதிப் பாகத்தில் நிச்சயமாக இந்த மரியம் பற்றிய ஒரு முக்கிய விடயம் கூறப்படும்....

தொடரும்...




பாகம் 21னுடன் ‘சிரிப்பால் மறைத்த சோகம்‘ தொடர் கதை முற்றுப் பெற்று விட்டது தொடர்ச்சியாக ஆதரவளித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் பல அல்ஹம்துலில்லாஹ்!

இந்த கதையில் வரும் பிரதான கதா நாயகிகள்

மரியம் - பாத்திமா நளீபா (நான்)

ஸைனப் - ரிம்ஸியதுல் நிலாயா (தாய்)

கதை ஆசிரியராகிய நான் இப்போது psychology and counselling diploma கற்கை நெறியை தொடந்துள்ளேன். உங்கள் துஆக்களில் என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

இது முற்று முழுதாக கற்பனையில் எழுதப்பட்ட கதையல்ல எனது வாழ்க்கைச் சம்பவம். எனது தற்போதைய வயது 24.

மரியம் யார்? என்ற கேள்வி எழுப் பியதும் நிறைய பேர் மரியம் என்பவள் நானாக இருக்குமோ என்ற சந்தேகத்தில் எனது முகநூல் பக்கம் என் விபரம் தேடிய வயவர்கள் அதிகம்.

உண்மையில் எத்தனை வலிகளும் வேதனைகளுடனும் எமது வாழ்க்கை அமைந்தாலும் தொழுவதற்கு கூட சீரான ஒரு அறை காணப்படாவிடினும் அங்கு தொழுகையும் ஓதலும் கைவிடப் படவில்லை. அனைத்து சூழ்நிலையிலும் அல்லாஹ் மீது வைத்த நம்பிக்கையை நாம் இழக்கவில்லை நீங்களும் இழந்து விட வேண்டாம். உடனடியாக கிடைக்கா விடினும் நிச்சயமாக ஓர் நாள் உங்கள் வாழ்க்கை மாறும் என்பதில் உறுதியாக இருங்கள்...

இந்த கதையை நான் எழுதுவதற்கு காரணம். எனது வீட்டில் மாத்திரம் அல்ல. இன்னும் பல வீடுகளில் ஏதோ ஒரு வகை யில் எங்கே ஒரு மூலையில் பெண்கள், பிள்ளைகள் பல இன்னல்களுடன் வாழ் கிறார்கள். அதை வெளிச்சத்திற்கு இட்டுச் செல்ல வேண்டும் அவர்களின் நிறை குறைகள் பேணப்பட வேண்டும். எனது தாயின் முழு முயற்சியுடன் இன்று நான் எழுந்து நின்றேன். இது மற்றவர்கள் வீடுக ளில் நடக்குமா என்று உறுதியாக கூற முடியாது. எத்தனையோ பிள்ளைகளின் எதிர்காலம் இன்று கேள்விக்குறியாக மாறி யுள்ளது. என் அன்பின் தந்தையரே உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் கருதி இவ்வாறான பழக்கங்களில் ஈடுபடாமல் இருந்து கொள்ளுங்கள். உங்கள் துணை வியார்களுக்கு சிறந்த கணவராக நடந்து கொள்ளுங்கள், ஆண்கள் மட்டுமல்ல இவ் வாறான தவறான பாதையில் செல்லும் தாய் மாறும் இங்கு இருக்கத்தான் செய் கிறார்கள் ஒரு நிமிடம் உங்கள் பிள்ளை களின் எதிர்காலம் குறித்தும் சற்று சிந்தித் துப் பாருங்கள்.

ஆசிரியர்களை எடுத்துக் கொண்டாள் பாடசாலை என்பது அனைவருக்கும் சம மானது. எந்த வித வேறுபாடுகளுமின்றி அனைவரும் ஒற்றுமையாக,சிறந்த நற் பழக்கங்களை கற்கும் இடம். அனை வரும் சமம் என்பதை உணர்த்த வேண்டிய ஆசிரியர்கள் தான் இன்று பிள்ளைக்கு மத்தியில் பிரிவையும் ஏற்படுத்துகின்றனர். மாணவர்களுக்கு தயவு செய்து ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுங்கள் ஏழை பணக்காரன் என்ற பேதத்தை வஞ்சனையை தயவு செய்து பிள்ளைகளின் மனதில் நஞ்சை ஊட்ட வேண்டாம். எல்லாப் பிள்ளைகளையும் உங்கள் பிள்ளைகளாக பாருங்கள். அது ஒவ் வொரு ஆசிரியரினதும் கடமையாகும். எனக்கு நடந்த இந்த நிலை இனி எந்த மாண வர்களுக்கும் ஏற்படக்கூடாது என்பதே என் அவாவாக இருக்கும்

முன்னர் போன்ற சூழல் தற்போது இல்லை. மாற்றங்கள் நிறைந்த வசதி வாய்ப்புக்களுடன் கூடிய சுழல் காணப் படுகின்றது. ஆகையால் சந்தர்ப் பத்தைப் பயனுள்ளதாக்குங்கள்.

நீங்கள் எளிமையான பின்னணியில் இருந்து வருபவராக இருக்கலாம். உங்க ளுடைய ஆங்கிலம் குறித்த ஒருவித தயக் கம் இருக்கலாம். ஆனால் இவை எது வுமே உங்களுக்கு சாதிப்பதற்கு ஒரு தடை அல்ல.

நானும் இதே சூழ்நிலையில் இருந்து, படித்து, இன்று இந்த சிறந்த நிலைக்கு காரணம் என்கிற முறையில் உங்களுக்கு சொல்வது இதுவே. உங்கள் நம்பிக்கையும் முயற்சியுமே உங்கள் வெற்றியை நிர்ண யிக்கும் காரணிகள்.

சமத்துவம், பெண் முன்னேற்றம் என்பது நிச்சயம் வீட்டில் இருந்தே துவங் குகிறது. உங்கள் பிள்ளைகளுக்கு நம்பிக் கையாய் ஆதரவாய் நீங்கள் இருந்தால் உங்கள் வீட்டுப் பெண்களும் சாதிக்க முடியும்.

முற்றும்

# சிறுவர் சங்கமம்



ஆராரோ கண்ணே ஆரிராரோ
வண்ணத் தமிழ்ச் சோலையே
கன்னல் மொழிக் காவலே
ஆராரோ கண்ணே ஆரிராரோ...

பொக்கை வாய்ச் சிரிப்பழகா
கன்னக் குழியழகா
இரட்டைப் பல்லழகா
குண்டு கண்ணழகா

முட்டி போட்டு நீ
தவழ்ந்து வருகையிலே ல் என் ஐயா
அள்ளி அணைச்சாலும்
ஆசை தீரவில்லையே...
(வண்ணத் தமிழ்

கலகலத்துச் சிரிக்கையிலே ல் என் ஐயா
காணாமல் போகிறேனே...
கோடி முத்தந் தந்தாலும்
ஏக்கந் தீரவில்லையே...
(வண்ணத் தமிழ்

தத்தித்தத்தி நீ நடக்கையிலே
தேரோட்டத் திருவிழாவா ல் என் ஐயா
திகைப்பு நீங்கவில்லையே
பார்த்த கண்ணு மூடலையே...
(வண்ணத் தமிழ்)



அன்புச்செல்வி சுப்புராஜ்

# மாடித்தோட்டம்

**ஜீ.மைத்ரேயி** - வந்தவாசி



மிக விரைவாக வளர்ந்து வரும் ஊரான ஓசூரில் வசித்து வருகிறோம். எங்கள் வீட்டில் கதிர் அப்பா, உமா அம்மா, வேலன் தாத்தா, தேவி பாட்டி, ஹரி அண்ணா அனைவருக்கும் செல்லக் குட்டியான நான் தான் பாரி.

எங்கள் வீட்டில் பாட்டி, தாத்தா கிராமத்திலிருந்து வந்தவர்கள். அம்மா, அப்பா இருவரும் வேலைக்குச் செல் பவர்கள். என்னையும் என் அண்ண னையும் தாத்தாவின் அறிவுரை, கதைகள். பாட்டியின் பாசம் இவற்றுடன் சேர்ந்து வளர்ந்து வந்தோம்.

பாட்டி கிராமத்தில் இருந்ததால் பொன்னூரில் வீட்டின் பின்புற தோட் டத்திலும் வீட்டிற்குத் தேவையான காய் கறிகள், கீரை வகைகள், பழ மரங்கள் போன்றவைகளைக் குழந்தையைப் போல வளர்த்து வந்தார்கள்.

இங்கு வந்ததால் அவர்களுக்கு என்ன செய்வது என்று தெரியாமல் இருந்து வந்தார்கள். எங்களைப் பள்ளியில் சேர்த்த பிறகு அவர்களுக்கு பொழுது போகாமல் இருந்தார்கள்.

பிறகு எங்க தேவி பாட்டி நாங்க வசித்து வந்த ஊரில் மண்வளம் சிறந்த முறையில் இருந்ததால் முதலில் வீட்டின் வெளியே இருந்த இடத்தில் காய்ச்செடிகள் வளர்த்து வந்தார்கள். வெண்டை, கத்திரிக்காய், மாதுளை, புதினா நட்டு வைத்தார். வீட்டி லிருந்த நேரத்தில் நானும் பாட்டிக்கு உத வியாக தண்ணீர் ஊற்றுதல் போன்ற உதவி களைச் செய்தேன்.

வீட்டில் நட்ட வெண்டைக்காய் செடி யில் முதலில் இலை வருவதைக் கண்டு மகிழ்ந்தோம். பூவிட்டு காய் வளர்வதைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தோம். அது மட்டுமின்றி என் நண்பர்கள் பார்த்து மகிழ்ந்தார்கள். அவர்களும் வீட்டை ஒட்டி உள்ள இடத்தில் பூந்தொட்டி வளர்க்க ஆரம்பித்தார்கள்.

அடுத்ததாக பாட்டி மாடி மற்றும் பால்

கனியில் சிறுசிறு பூந்தொட்டி அமைத்து அதில் வெந்தயக்கீரை, கொத்த மல்லி, கீரை விதைகள், பூச்செடிகள் என வளர்க்கத் தொடங்கினார்.

தாத்தா காலை நடைபயணம் மாடியில் நடக்க ஆரம்பித்தார். அப்பொழுது செடியில் உள்ள களைச் செடிகளை அகற்றுவார். பூச்சியின் தாக்கம் குறைப்பதற்கு வேப்ப எண்ணெய், சாம்பல் போடு வது போன்ற வேலைகளையும் தாத்தா செய்தார்.

நானும் என் அண்ணனும் பள்ளி முடிந்து வந்ததும் மொபைலில் விளையாடாமல் மாடித் தோட்டத்தில் உள்ள செடிகளுடன் விளையாடிக் கொண்டே தண்ணீர் ஊற்றுவோம்.

தண்ணீர் ஊற்றும் போது அந்த செடியின் பெயர், அதன் பயன்கள், தீமைகள், வளரும் காலம் போன்றவற்றைக் கேட்டுக் கொண்டே இருப்போம் பாட்டியிடம்...

இதனால் எங்களுக்கு நிறைய காய் கறிகளில் உள்ள சத்துக்களைப் பற்றி தெரிந்து கொண்டோம். மேலும் அதில் உள்ள புரோட்டின், கால்சியம், விட்டமின்களை பற்றியும் தெரிந்து கொள்ள முடிந்தது.

அது மட்டுமல்லாமல் நாங்கள் வளர்த்த செடியிலிருந்து கீரைகள், காய்களை தூய்மையாகவும், கலப்பிடமில்லாமல் சாப்பிட போதும் உடலுக்கு பல நன்மைகளைத் தருகிறது.

இதனால் எங்கள் வீட்டில் மட்டுமின்றி என் நண்பர்கள் வீட்டிலும் மாடித் தோட்டம் அமைத்து தூய்மையான காய் கறிகள், கீரைகளைப் பயன்படுத்த தொடங்கினோம்.

நன்றி.





ஷ். அனன்யா

அ - அனைவரையும் நேசித்து

ஆ - ஆதரவாய் நடந்திடு

இ - இனிமையாய் பேசிடு ஈ- ஈகையுடன் நடந்திடு

உ - உண்மையாய் இருந்திடு

ஊ - ஊமையாய் இருக்காதே ஊக்கத்தோடு பயணத்திடு

எ - எண்ணத்தை சீர்படுத்து செயல்கள் தானாகவே மாறிடுமே

ஏ - ஏற்றத்துடன் வாழ்ந்திடு ஏற்றத்தாழ்வு இல்லாமல் பழகிடு

ஐ - ஐம்பூதங்களையும் நேசித்திடு ஐயத்தோடு இருக்காதே

ஒ - ஒற்றுமையாய் இருந்திடும் ஒழுக்கத்தோடு பெரியோரை மதித்திடு

ஓ - ஓங்கி வளர்ந்த மூங்கில் போல கற்றிடு யாரையும் ஓரங்கட்டி விடாதே

ஔ - ஔவையாரை போல் கற்றிடும் ஔடதத்தை மறந்திடு நித்தமும்
உழைத்திடு நிம்மதியாய் வாழ்ந்திடு

இருப்பது ஒரு வாழ்க்கை இனிமையுடன் கடந்து செல் தடைகளை தாண்டி வெற்றிக் கொள்.



**ஆண்டாள் ரங்கநாயகி**
கோயம்புத்தூர்





# பச்சைக்கிளி

**ஜனனி குமார்**
நாகப்பட்டினம்

பச்சைக் கிளியே பச்சைக் கிளியே
பறந்து பறந்து வா

கீகீ கீகீ குரல் எழுப்பி
என்னுடன் பேசிட வா

உனக்குப் பிடித்த கோவைப்பழம்
கையில் இருக்குது வா

அழகு அலகால் கொத்தியே நீயும்
ருசித்து உண்ணலாம் வா

பட்டு வண்ணம் தொட்டுப் பார்க்க
ஆசை கொண்டேன் வா

பிடித்து  கூண்டில் அடைக்க மாட்டேன்
அச்சமின்றி அருகில் வா

பச்சைக் கிளியே பச்சைக் கிளியே
பறந்து என்னிடம் வா




100
இலக்கிய ஆளுமைகளின்
நூல்கள் வெளியீடு
முற்றிலும் இலவசம்
தமிழ்நெஞ்சம்
2025 ஜூன் மாதத்தில் மாபெரும் வெளியீடு
MUTUR JMI PVT LTD
SINCE 2016
வெளியீடுகளின் வகை
சிறுகதை
கவிதை
நாவல்
கட்டுரை
ஆய்வு
மொழிபெயர்ப்பு
சிறுவர் பாடல்
நிபந்தனைகளும் விதிமுறைகளும்
இலங்கையராக இருத்தல். அல்லது இலங்கையர் வெளிநாட்டில் தொழில் நிமிர்த்தம் வசிப்பவராக இருத்தல்.
நூலின் வடிவமைப்பு, அட்டை வடிவமைப்பு மற்றும் ISBN இலக்கம் என்பன நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும்.
நூலின் உள்ளடக்கம் 88~124 பக்கங்களுக்கு உட்பட்ட வகையில் அமையப் பெறுவதோடு குறித்த நூலில் இடம்பெறும் உரைகள் (வாழ்த்துரை, அணிந்துரை, முன்னுரை) யாவும் நூலாசிரியரின் விருப்பத்திற்கு உரியது.
வெளியிடவுள்ள நூலின் தட்டச்சு செய்த ஆவணம் எதிர்வரும் March 20 ஆம் திகதிக்கு முன்னர் தரப்படும் Google Form ஊடாக அனுப்புதல். (கையெழுத்து பிரதியாயின் அவற்றை தட்டச்சு செய்யும் செலவு நூலாசிரியருக்குரியது)
இவ்வாண்டு ஜுன் 29 ஆம் திகதி நூல் வெளியீடு இடம்பெறும். குறித்த வெளியீட்டு நிகழ்வில் தேர்வு செய்யப்படும் தரமான 100 நூல்கள் வெளியீடு செய்யப்படுவதோடு நூலாசிரியர்களும் கௌரவிக்கப்படுவார்கள்.
தாங்களுக்கு தேவையான நூல்களின் பிரதிகளை நூலாசிரியர், வாசகர்கள் பணம் கொடுத்து குறித்த நிகழ்வில் இடம்பெறும் நூல் காட்சியில் பெற்றுக்கொள்ள முடியும். 100க்கு மேற்பட்ட பிரதியாயின் முற்கூட்டியே அறியத்தரவும்.
குறித்த நூல்கள் நூலாசிரியரின் அனுமதியின்றி பதிப்பு செய்யவோ அல்லது விற்பனை செய்யவோ நிறுவனத்தினால் உரிமம் கோரப்படமாட்டாது என்பதோடு அந்நூற்களுக்கான பதிப்புரிமை ஆசிரியருக்கே உரித்தாகும்.
நூல் பதிப்பு மற்றும் வெளியீட்டுக்கான செலவுகள் மற்றும் கொடுப்பனவுகள் எதுவும் நூலாசிரியர்களிடம் இருந்து அறவிடப்படமாட்டாது. மேலும் எந்தவித மறைமுக கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
info@muturjmi.com
Mutur 04, Trincomalee
www.muturjmi.com
0262238593 / 0771020030
Mutur JMI
0717891887

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

மார்ச் 2025

